Annual Subscription Rs. 6 | 18th April 1937 | Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No 11

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



நீலகிரி ரெயில்வே.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி

# பாடால் பாம்

உதகமண்டலம்:

தென் ஆற்காடு:

ஷீரீப் டாக், ஸ்டோர், நெல்லிகுப்பம்.






மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

# வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND



உதகமண்டலம் ஸர்க்கார் தோட்டம்.

நமது புதிய தொடர் கதை



# கரும்பூதம்

## அல்லது

# கள்வனைக் காதலித்த காரிகை

[திருச்சி ஸ்ரீமான் கே. வி. எஸ். வாஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.]

அத்தியாயம்......1

மன்மத விலாசத்தில்

மாயக்களவு

"அப்பா! நீங்கள் சொல்லுவதெல்லாம் ரொம்ப சரிதான்! ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டில் எனக்கு மிகுந்த மனக் கிலேசத்தை உண்டுபண்ணுகின்றது!" என்றாள் ஓர் இளம் பெண்.

"ஆமாம், அப்பா! அக்கா என்ன சொல்லப் போகின்றாளென்பது எனக்கு நன்றாகத் தெரியும். திருமணம் நடைபெறப்போகும் ஊர் நகரத்திலிருந்து வெகுதூரத்திற்கப்பால் ஒதுங்கியிருக்கின்றதல்லவா? அப்படியிருக்க விலையுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் இராக்காலத்தில் அங்கு வைத்திருப்பது உசிதமானதா? நீங்களே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!" என்றாள் மற்றொரு யுவதி.

"ஹிமா! நானும் இதைச் சொல்லுவதற்குத்தான் வாயெடுத்தேன். அதற்குள் நீயே கூறிவிட்டாய். அப்பா! கல்யாணம் நடக்கப் போகும் பீஜப்பூர் ஒரு சின்னஞ்சிறு கிராமம். அது நகரத்திலிருந்து வெகு தூரத்திற்கப்பால் ஒதுங்கியிருப்பதுமல்லாமல் அங்கு போலீஸ் ஸ்டேஷனே அல்லது டெலிபோன் வசதிகளுள்ள வீடுகளோகிடையவே கிடையாது. இதைத்தவிர, பீஜப்பூர் கிராமத்தைச் சுற்றிக் குன்றுகளும் மரங்களடர்ந்த தோப்புகளுமிருக்கின்றன. அவைகளில் கொள்ளைக்காரர்கள் அடிக்கடிக் காணப்படுகிறார்களென்றும் சொல்லப்படுகின்றது. இந்நிலைமையில் விலையுயர்ந்த ஆபரணங்களையும், பாத்திரங்களையும் இராக்காலத்தில் நாம் எடுத்துச் செல்லலாமா?" என்றாள் முதலாவது யுவதி.

"அக்கா நினைப்பதைப் போல் ரஸ்தாவில் அபாயம் ஏற்படாவிட்டாலும் கிராமத்திற்குச் சென்றபின் ஏற்பட்டால் என்ன செய்வது? திருமணம் நாளைக் காலையில் நடைபெறப் போகின்றதென்பதும் நாமெல்லோரும் இன்றிரவே புறப்பட்டுச் சென்று விடுவோமென்பதும் கள்வர்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, நன்றாகத் தெரிந்திருக்கக்கூடிய விஷயமே. தவிர, நம்மிடம் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்களிருப்பதையும் எல்லோருமறிவார்கள். இந்த நிலைமையில் கள்வர்கள் நம்மீது கட்டாயமாகக் கண்வைத்திருப்பார்கள். அவர்களால் நமக்கு ரஸ்தாவில் தொந்திரவு ஏற்படாமலிருக்கக்கூடும். கிராமத்தையடைந்தபின் நள்ளிரவிலே நம்மைக் களவாட முயற்சித்தால் என்ன செய்வது? திடீரென்று நாற்பது ஐம்பது கள்வர்கள் நமது மாளிகையைச் சூழ்ந்து கொண்டுவிடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை உங்களாலும் மற்றவர்களாலும் எப்படிச் சமாளிக்க முடியும்?" என்றாள் ஹிமாவதி.

"சமாளிப்பதாவது? எல்லாவற்றையும் உடுத்துக்கொண்டு உயிரைமட்டில் விட்டுச் செல்லுங்களெனக் கெஞ்சி மன்றாட வேண்டியதுதான்! களவாட வருகின்றவர்கள் எதற்கும் துணிந்திருப்பார்கள். அவர்களிடம் நம்முடைய மிரட்டல்களெல்லாம் கட்டாயமாகச் செல்லுபடியாகாது. தவிர கொள்ளைக்காரர்கள் என்ற வார்த்தையைக் கேட்டாலே பீஜப்பூர் கிராமவாசிகள் வெளிக்கதவுகளை இறுகத் தாளிட்டுக்கொண்டு விடுவார்கள். ஆகையால் அவர்களுடைய உதவியை எதிர்பார்ப்பதிலும் பயனில்லை. அப்பா! நீங்கள் என்னைக் கோழையென்று வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள்! அதற்காக நான் கொஞ்சமும் கவலைப்பட மாட்டேன். சூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு ஆபரணங்களை வெளியிலெடுத்துச் சென்றால் கட்டாயமாக ஆபத்து ஏற்படுமென்று எனக்குத் தோன்றுகிறது!" என்று அச்சத்துடன் நவின்றாள் மூத்தவள்.

இவ்வாறாகச் சகோதரிகளிருவரும் ஒருவர் மாற்றி ஒருவராய்ப் பேசியதை மௌனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த பாஸ்கரம் பிரபு, "ஆம், கமலா! நீ சொல்லுவதும் ஹிமாவதி சொல்லுவதும் வாஸ்தவமே. பீஜப்பூர் கிராமத்தைப்பற்றி ஊரில் உலவிவரும் வதந்திகளை நான் அடியோடு மறந்துவிட்டேன்!" என்றார்.

"மறந்து விட்டீர்களா? நீங்கள் சொல்வது எனக்கு விநோதமாக இருக்கின்றதே! அப்படியானால் கல்யாணத்தை பீஜப்பூரில் நடத்தக்கூடாதென்று ஏன் முதலில் நீங்கள் ஆக்ஷேபித்தீர்கள்?" என்று வினவினாள் கமலா.

"ஆரம்பத்தில் நான் ஆக்ஷேபனை செய்தது வாஸ்தவம் தான்! ஆனால் அதற்குக் காரணம் கள்வர் பயமல்ல. பீஜப்பூர் கிராமத்தைச்சுற்றி கொள்ளைக்காரர்களிருக்கின்றார்களென்பது எனக்குக் கொஞ்சம்கூட ஞாபகமில்லை. உனது திருமணத்திற்கு நூற்றுக்கணக்கான பிரமுகர்களும் சீமாட்டிகளும் விஜயஞ்செய்வார்கள்; அவர்களுக்கெல்லாம் நமது அந்தஸ்திற்குத் தகுந்தாற்போல் வரவேற்பளிக்கவோ, அல்லது பாட்டுக்கச்சேரி, நடனக்கச்சேரி முதலான களியாட்டங்களை நடத்தவோ பீஜப்பூரில் போதுமான வசதிகளில்லை. தவிர, அந்தக் கிராமத்திற்குச் செல்லும் ரஸ்தாவும் போக்குவரத்திற்குத் தகுதியானதாக இல்லை. இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்த பிறகுதான் கல்யாணத்தைக் கிராமத்தில் நடத்தக்கூடாதென்று முதலில் நான் ஆக்ஷேபனை செய்தேன். ஆனால் உனது கணவன் வீட்டார்களோ ஒரே பிடிவாதமாக இருக்கின்றார்கள். பீஜப்பூர் கிராமத்திலிருக்கும் மாளிகை மிகப்புராதனமானதென்றும், அங்கு இதுவரையில் பல திருமணங்கள் நடந்திருப்பதால், இந்தக் கலியாணத்தையும் அதேமாளிகையில்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகின்றார்கள். அதற்குமேல் அவர்களிடம் விவாதம் செய்வதில் என்ன பயன்? கலியாண காரியங்களில் பெண்ணைப் பெற்றவர்கள்தானே பணிந்து போக வேண்டியிருக்கிறது?" என்றார் பிரபு.

"அப்பா! அவர்கள்மீது நீங்கள் குற்றம் கூறுவது நியாயமாகாது. ஜயந்தரும் தம்மால் இயன்றவரையில் சொல்லிப் பார்த்துவிட்டார். ஆனால் அவருடைய பெற்றோர்களோ ஒரே பிடிவாதமாக இருக்கின்றார்கள். அவர்கள்மீது குறை கூறுவதற்கும் இடமில்லை. பீஜப்பூர் மாளிகை மிகப் புராதனமான கட்டிடமென்பதும், அது திருமணங்களுக்கு ஆவி வந்த இடமென்ப

மனோரஞ்சனி
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

தும் வாஸ்தவமான விஷயமே. தவிர, ஜயந்தரின் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருடைய திருமணங்களும் அதே மாளிகையில்தான் நடந்திருக்கின்றன. ஆகையால், இந்தக் கலியாணத்தையும் பீஜப்பூரிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்புவது முற்றிலும் நியாயமானதே. நீங்கள் பெண் வீட்டுக்காரரென்று இளப்பமாகச் சொல்லிக்கொள்ளுவது ஒருபுறமிருக்க ஜயந்தரின் பெற்றோர்கள் உங்களைவிடப் பல வயது முதியவர்களென்பது மறுக்கமுடியாத உண்மை! பெரியோர்களின் வார்த்தைகளுக்குப் பணிந்துவிடுவது தானே வயதிற் சிறியவர்களாக இருப்பவர்களின் கடமை!'' என்று தமாஷாகப் பேசினாள் கமலா.

"அப்பா! இனிமேல் கமலம் நம்மை எட்டிக்கூடப் பார்க்க மாட்டாள்! கலியாணமாவதற்கு முன்னராகவே கணவன் வீட்டவர்கள் சார்பாக இவ்வளவு தூரம் பரிந்து பேசும் அவள் கலியாணச் சடங்குகளெல்லாம் முடிவடைந்த பின்னர் நம்மைக் கவனிப்பாளா?'' என்று கேலி செய்யவாரம்பித்தாள் ஹிமாவதி. பிரபுவும் அவளுடன் சேர்ந்துகொண்டு கமலாவைப் பரிகாசம் செய்யத் தொடங்கினார்.

மேற்படி மூவரும் இவ்வாறு தமாஷாகச் சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில் ஒரு பணியாள் உள் நுழைந்து, "கங்காதரர் வந்திருக்கிறார்?'' என்றான். "யார், அத்தான் கங்காதரரா? இங்கே அழைத்து வா!'' என்று கமலம் கூறவும் பணியாள் வெளியேகினான்.

"அக்காவின் ஆவலைக் கவனித்தீர்களா, அப்பா? கலியாண ஏற்பாடுகளைச் செய்யச் சென்றிருந்த கங்காதரர் திரும்பி வந்துவிட்டாரென்றதும் அக்காவின் முகத்தில் ஒரு தனிப் பிரகாசமும் குதூஹலமும் தோன்றுகிறது பாருங்கள்!'' என்று சொல்லி நகைத்தாள் ஹிமாவதி.

"ஆமாம், நீ பேசமாட்டாயா? ஊம் நாம்வாயைமூடிக்கொண்டிருந்தால் இதுவும் பேசுவாய். இன்னமும் பேசுவாய்! இவ்வளவையும் நான் உன்னுடைய கல்யாணத்தின் பொழுது திருப்பிச் சொல்லிக் காட்டுகிறேன் பாரு!'' என்று வெட்கத்துடன் தலை குனிந்தவாறாகக் கூறினாள் கமலம். அவள் வாயை மூடுவதற்கு முன் கங்காதரரும் உள் நுழைந்தார்.

"என்ன கங்காதரா! எல்லாக்காரியங்களும் முடிந்ததா? இன்னும் என்னென்ன பாக்கியிருக்கிறது?'' என்று வினவினார் பிரபு.

"ஒன்றும் பாக்கியில்லை. எல்லாம் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்பட்டுவிட்... சுமார் ஐநூறு விருந்தினர்கள்வரையில் தாராளமாகத் தங்கியிருப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறேன். சமையற்காரனும் மற்ற சிப்பந்திகளும் இன்று காலையே வந்துவிட்டார்கள். விருந்தினர்களெல்லாம் கலியாணத்தின் பொழுதுதான் வருவார்களென்றுதோன்றுகிறது. ஏனெனில், இராக்காலத்தில் தங்கியிருக்க பீஜப்பூர் அவ்வளவு பந்தோபஸ்தான இடமில்லையல்லவா?'' என்றார் கங்காதரர்.

"ஆம்! நாங்களும் அதைப் பற்றித்தான்பேசிக்கொண்டிருந்தோம். பிள்ளை வீட்டார்களெல்லாம் வந்துவிட்டார்களா?'' என்றார் பிரபு.

அனேகமாக எல்லோரும் வந்து விட்டார்கள். ஆனால் மாப்பிள்ளையின் பெற்றோர்கள் மட்டும் நாளைக் காலையில்தான் வரப்போகின்றார்களாம்!'' என்றார் கங்காதரர்.

"அவர்கள் மட்டும் ஏன் தாமதித்து வருகிறார்கள்?'' என்று வினவினார் பிரபு.

"நகைகளையும் விலையுயர்ந்த இதர சாமான்களையும் இராக்காலத்தில் பீஜப்பூரிலே வைத்திருப்பது உசிதமானதல்லவாம். ஆகையால், அவர்கள் மட்டும் நாளைக் காலையில் சாமான்களோடு வந்து சேருவார்கள். நாமும் அப்படியே செய்தால் நலமென்று தோன்றுகிறது!'' என்றார் கங்காதரர்.

"கமலமும் அப்படித்தான் சொல்லுகிறாள். சரி, உன்னுடைய யோசனை என்ன?'' என்றார் பிரபு.

"அதாவது, பழைய ஏற்பாட்டின்படி எல்லோரும் இன்று மாலையே போகட்டும். ஜயந்தரும் கிராமத்திற்கு வந்துவிட்டாராகையால், நான் கமலத்தையும்ஹிமாவதியையும் மற்றவர்களோடு அழைத்துச் செல்லுகின்றேன். நீங்கள் பொழுது புலர்ந்தவுடன் நகைகளோடு வாருங்கள்!'' என்றார் கங்காதரர்.

"ஜயந்தர் முன்னதாகவே வந்துவிட்டாரென்றால் அக்காவையும் மாலையிலேயே அழைத்துக் கொண்டுபோய் விடுவதுதான் பொருத்தமானது! அவர் அக்காவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்! அவர்களுடைய சம்பாஷணைக்குத் தடையாக நானும் ஏன் இப்பொழுதே கிளம்ப வேண்டும்? காலையில் அப்பாவுடன் நான் வருகிறேன். நீங்கள் அக்காவையும் மற்றவர்களையும் கூட்டிச் செல்லுங்கள்!'' என்று கேலியாகக் கூறினாள் ஹிமாவதி.

"ஹிமா! நீ ஒரு நிமிடம் பேசாமலிருக்கமாட்டாயா? எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பரிகாசப் பேச்சு தானா?'' என்று கோபித்துக் கொள்ளுகின்றவளைப் போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறினாள் கமலம்.

"ஹிமா! சற்றுநேரம்வரையில் பேசாமலிரு! விளையாட்


# ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா'' தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய ஈரல் நோய்களையும், ஜலதோஷம், சளி, அஜீர்ணம், மலச்சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினால், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும் கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றால் அதிகச் செலவு ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினால் உங்களுக்கு லாபமும் சௌகரியமும் உண்டு.

ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,
தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

**The Zenith Chemical Works,**
Deokaran Mansions, Princess Street, Bombay, No 2.

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும்
ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
ஜே. பலாபாய் & கம்பெனி,
260, சைனாபஜார் — மதராஸ்.



குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு. மயிலாப்பூர், சென்னை






10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்
(செயின் 1-க்கு)
ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனா பஜார் ரோட், ஜி. டி.
மதறாஸ்



"நாம் வாயை மூடிக்கொண்டிருந்தால் இதுவும் பேசுவாய், இன்னமும் பேசுவாய்; இவ்வளவையும் நான் உன்னுடைய கல்யாணத்தின்பொழுது திருப்பிச் சொல்லிக் காட்டுகிறேன் பாரு" என்று கூறினாள் கமலம்.

டும் கேலியும் போதும்!" என்று இளைய குமாரியைப் பார்த்துக் கூறிவிட்டுக் கங்காதரரை நோக்கினார் பிரபு.

"நீங்கள் மேலும்மேலும் யோசனை செய்துகொண்டேயிருந்தால் நாழிகையாகின்றதல்லவா? இப்பொழுது மணி மூன்றடிக்கின்றது. நான்கு மணிக்காவது புறப்பட்டால் தான் பொழுது சாய்வதற்குள் கிராமத்திற்குப் போய்ச்சேரலாம். ஹிமாவதி சொல்லுவதைப்போல் நான் கமலத்தையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு கிளம்புகின்றேன். நீங்களிருவரும் காலையில் வாருங்கள்!" என்றார் கங்காதரர்.

"சரி; நீ போய் மோட்டார்களுக்கு ஏற்பாடுசெய்!" என்று சொல்லிக் கங்காதரரை அனுப்பிவிட்டு, "ஹிமா! மாளிகையில் விலையுயர்ந்த பொருள்களெல்லாமிருக்கையில், நாம் இரவை இங்கு கழிப்பது உசிதமானதல்ல. ஆகையால், இங்கு போலீஸ் பந்தோபஸ்துக்களையேற்படுத்தி வைத்துவிட்டு ஓட்டலில் இரவு தங்குவோம்!" என்றார் பிரபு.

"நீங்கள் நகைகளையெல்லாம் அவசரப்பட்டு பாங்கியிலிருந்து வாங்கியிருக்கவே வேண்டாம். நமது மாளிகையைவிட பாங்கி இன்னமும் அதிகப்பந்தோபஸ்தான இடமல்லவா?" என்றாள் ஹிமாவதி.

'இப்பொழுதுதான் என்ன காரியம் மிஞ்சிவிட்டது? நேஷனல் பாங்கி நான்கு மணிவரையில் திறந்திருக்குமல்லவா? நகைகளைத் திரும்பக் கொண்டு போய் வைத்துவிட்டுக் காலையில் வாங்கிக்கொண்டால் போகிறது!" என்று இடையில் கூறினாள் கமலம்.

"அது முடியாத காரியம். நான் இங்கிருந்து காலை ஆறு மணிக்குப் புறப்பட்டாலன்றிக் கிராமத்திற்கு எட்டுமணிக்கு முன் வந்து சேரமுடியாது. பாங்கியோ காலை பத்து மணிக்குத் தான் திறப்பார்கள். எனினும், நகரத்தில் நாம் கொஞ்சம் கூடப் பயப்படத் தேவையில்லை. டெலிபோனில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் நூறு போலீஸ் சேவகர்கள் வாசலில் வந்து நிற்பார்கள்!" என்றார் பிரபு.

நேயர்களே! மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பாஷணை விஜயபுரிக்கு நடுநாயகமாக விளங்கும் மன்மத விலாச மாளிகையின் மேல்மாடியறைகளிலொன்றில் சென்ற 19-வது வருடம் ஏப்ரல் மாதம் 10-ம் தேதியன்று பிற்பகல் இரண்டு மணிக்கும் மூன்றரை மணிக்குமிடையே நடைபெற்றது. இந்த மாளிகையின் சொந்தக்காரராகிய பாஸ்கரம் பிரபு என்பவர் விஜயபுரியிலிருக்கும் பிரபல தனவந்தர்களிலொருவர். நமது கதை ஆரம்பமாகும் காலத்தில் அவருக்குச் சுமார் நாற்பத்திரண்டு வயதிருக்கலாம். கமலமும் ஹிமாவதியும் அவருடைய சொந்தப் புதல்விகள். மூத்தவளாகிய கமலத்திற்குச் சரியாக இருபத்தோறு வயதாகின்றது. இளையவள் ஹிமாவதிக்கு இன்னும்பதினெட்டு பிராயங்கள்கூடப் பூர்த்தியாகவில்லை. எனினும், அவளை வயதிற்கு மேல் அதிகப்பட்ட வளர்ச்சியுடையவளென்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், அவளும் கமலமும் வயதில் வித்தியாசப்பட்டவர்களேயாயினும் ஒரே அச்சில் வார்த்தெடுத்த ஸ்வர்ணப் பதுமைகளைப்போல் பேதமற்ற முகப்பொலிவும், கண்டத்வனியும், உயரமும் உருவமும் உடையவர்கள். இருவரையும் சேர்ந்தாற்போல் நிறுத்தி வைத்தால், நெருங்கிப் பழகியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு எவர் கமலம், எவர் ஹிமாவதியென்பது கொஞ்சம்கூட அடையாளம் தெரியாது.

பொருட் செல்வத்திலும், பொலிவுச் செல்வத்திலும், கல்விச் செல்வத்திலும் நமது சகோதரிகளுக்குக் குறைவே கிடையாது. ஒரே ஒரு விஷயத்தைத் தவிர மற்றெல்லா வகைகளிலும் அவர்களைப் பெரிய பாக்கியசாலிகளென்று தான் சொல்ல வேண்டும். அதாவது அவர்கள் இளம் பிராயத்திலிருக்கையிலேயே பெற்றெடுத்த தாயைப் பறிகொடுத்து விட்டார்கள். பாஸ்கரம் பிரபுவின் பிரிய மனைவியாகிய ஸ்ரீவதவல்லிச் சீமா

(37-ம் பக்கம் பார்க்க)


மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட்ரோட். மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி

**CONTRACEPTIVE.**

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs. **5-8**; foreign, Shillings **10**.

**Vilasvati:** excellent retentive tonic pills.

Price Re. **1-6**, foreign, Shillings **2-6**.

**Rajvati:** recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. **5-8**, foreign, Shillings **10**.

**Dr. S. H. KHAN,**
S. Tapia Mansion, Erskin Road,
BOMBAY 3.

**நீரிழிவு, மதுமேகம்**
முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்
**மயூரகாய கற்பம்**
ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

**ஸ்கந்தாசிரமம்**
தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.



சென்னை சேப்பாக்கம் யுனைடெட் கிளப்பின் வருஷாந்திரக் கொண்டாட்டம் ஸர் பி. டி. ராஜன் தலைமையில் நடைபெற்றது.

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப்சந்த்
175. சைனா பஜார் மதராஸ்

சரித்திரப்பகுதி

# வாக்பதி முஞ்ஜராஜன்

(தி. நா. சுப்ரமணியன்)

காதல், விடுதலை ஆகிய இரண்டுக்கும் இடையே அகப்பட்டு அவதிப்பட்டான் அரசன். தன் மந்திரியின் வார்த்தையைக் கேட்காமல், தக்காணத்தின்மேல் படையெடுத்து வந்ததன் பலனை அனுபவிக்க வேண்டியதே என்று தன் விதியை நொந்து வருத்தப்பட்டான். அவன்தான் மாளவ தேசாதிபதியான பரமார வமிசத்து முஞ்ஜ ராஜன். அவன் வாக்பதி என்றும், உத்பல ராஜன் என்றும் அழைக்கப்படுவான். அவனைச் சிறைப் பிடித்து வைத்திருந்தவன் மேலைச்சளுக்கிய அரசனான இரண்டாம் தைலபன் எனப்படும் ரணரங்க பீமன்.

தைலபன் தக்காணத்தில் தங்கள் முன்னோர்கள் ஆண்டு வந்த நாட்டை மத்தியகாலத்தில் பிடுங்கிச் சற்றேறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் ஆண்டு வந்த ராஷ்டிர கூடர்களை வென்று சளுக்கிய அரசாங்கத்தை மறுபடியும் ஸ்தாபித்தான். அவன் ஆட்சி மாளவ நாட்டுக்கு அடுத்தாற்போலத் தெற்கே கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கிடையில் உள்ள நாட்டிலே பரவியிருந்தது. அந்நாட்டுக்குக் கல்யாணி நகரம் தலைநகரமாக விளங்கியது.

முஞ்ஜராஜன் தக்காணத்தின்மேல் ஆறு முறை படையெடுத்துவந்து ராஷ்டிர கூடர்களையும், சளுக்கியர்களையும் முறியடித்து வெற்றி கொண்டான். அவர்களை ஜயித்ததற்கு அறிகுறியாக, அமோகவர்ஷன், ஸ்ரீவல்லபன், பிருதிவிவல்லபன் என்பன போன்ற விருதுகளைப் புனைந்து கொண்டான். ஆயினும் தைலபன் யுத்த பூமியில் சிறிதும் அஞ்சாதவன். மாளவ தேசாதிபதி தன்னை வெற்றி கொண்டதைப் பொறுது அவன் பெருமையைக் குலைக்கவே விரும்பினான். அதனால் சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் அவன் மாளவ நாட்டுள் புகுந்து, குடிகளுக்கும், பயிர்களுக்கும் நாசம் விளைவித்து வந்தான். அறுமுறை தோற்றும், தன்னுடன் விரோதப் பான்மை கொண்டுள்ள தைலபனுக்குப் புத்தி கற்பிக்கவேண்டி, முஞ்ஜராஜன் ஏழாம் முறையாக அவனை முறியடிக்க விரும்பினான். சளுக்கிய ராஜ்யம் கோதாவரிக்கு வடக்கே ஒரு சிறிதும் இல்லாததால், இம்முறை அவனைத் தோற்கடிப்பதற்கு முஞ்ஜன் அந் நதியைக் கடந்து தக்காணத்துக்குச் செல்ல வேண்டும். முன்னம் ஒரு சமயம் ஒரு ஜோஸியன் முஞ்ஜன் கோதாவரியைக் கடந்து தெற்கே செல்வானாகில் அவன் அழிவை அடைவான் என்று கூறியிருந்தான். அதை அரசனுக்கு ஞாபக மூட்டி அப்படையெடுப்பை நிறுத்தும்படி வேண்டிக் கொண்டான் மந்திரியான ருத்திராதித்தியன். அரசனோ தைலபனை ஒரு துரும்பாக மதித்து வந்தான். அதனால் மிகுந்த நம்பிக்கையுடன் தன் படையை நடத்திச் சென்று கோதாவரியைக்கடந்து தென் கரையில் பாடியிறங்கினான். இதையறிந்த ருத்திராதித்தியன் வருந்தி மன்னருக்கு நேரப்போகும் அவமானத்தை முன்னதாகவே அறிந்து மனம் பொறுது தீக்குளித்துத் தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.

சண்டை வெகு பயங்கரமாக நடந்தது. தைலபனுக்கு உதவியாகப் பல 'மஹாஸாமந்தர்கள்' (கவர்னர்கள்) வந்திருந்தார்கள். எதிர்பாராத விதமாக அவர்கள் மாளவதேசத்துப்படையைத்தாக்கி அதைச் சின்னா பின்னமாக்கினார்கள். தைலபன் பக்கத்தில் அச்சண்டையில் கலந்து கொண்டவர்களுள் யாதவ வமிசத்தைச் சேர்ந்த பில்லமன் என்னும் மஹாஸாமந்தனும் ஒருவன். அவன் துவாரகையை யாண்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் வமிசத்தில் உதித்தவன் என்று கூறப்படுவான். அவன் முஞ்ஜனைச் சிறைபிடித்துத் தன் பேரரசனான ரணரங்க பீமன் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தினான்.

தைலபனும் முஞ்ஜனை ஒரு மரக்கூட்டிற்குள் அடைத்துப் பலவாறு அவமானப் படுத்திக் கடைசியாகச் சிறையிலிட்டான்.

முஞ்ஜனும் சிறந்த வீரனே. போருக்குச் சிறிதும் அஞ்சுடவனல்ல. அவன் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாளவ தேசத்துச் சிங்காதனம் ஏறியவன். இந்தியாவின் முக்கிய நகரங்கள் ஏழுள் ஒன்றான அவந்தியை ஒரு காலத்திலும், இன்றைக்கும் இந்திய மக்கள் மறக்காமல் புகழும் உஜ்ஜயினி நகரத்தை மற்றொரு சமயத்திலும் தலை நகரங்களாகக் கொண்டிருந்த மாளவ தேசத்தின் பழைய பெருமையை முன்னுக்குக் கொணர்ந்த உத்தம புருஷர்களுள் முதன்மையானவன் தாரா நகரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்த முஞ்ஜன். தக்ஷிண கூர்ஜ்ஜர தேசத்தை வென்றதுடன் மத்திய இந்தியாவில் திரிபுரீ என்னும் இடத்தைத் தலை நகராகக் கொண்டு சேதி நாட்டை ஆண்டு வந்த கலசூரி மன்னனான யுவராஜன் என்பவனை யுத்தத்தில் கொன்று அந்நகரைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

இவ்வித புஜபல பராக்கிரமம் வாய்ந்த அரசன் சிறைப்பட்டிருந்தால் அவன் மனது எவ்வித நிலையில் இருந்திருக்கும் என்பதை நாம் கூறவேண்டியதில்லை. அவனைச் சிறையினின்றும் விடுவிக்க அவன் மந்திரிகளும் கஷ்டப்பட்டு வந்தார்கள். சிறைக்கு வெளியிலிருந்து உள்ளே போகும்படி இரகசியமாக ஒரு சுரங்கம் தோண்டி, அரசனை அதன் வழியாக வெளியேறித் தப்பித்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அரசன் சிறையிலிருக்கையில் தைலபன் சகோதரியான மிருநாளவதி என்பவள் அவனுக்குச் சிறிது ஆறுதல் கொடுத்து வந்தாள். அவள் புருஷனை இழந்த விதந்து. யௌவனத்தைக்கடந்தவள். முஞ்ஜனைவிட வயதில் மூத்தவள். அவள் அரசனுடைய கம்பீரமான தோற்றத்தையும், முகப்பொலிவையும் கண்டு அவன்மேல் மையல் கொண்டாள். அவன் மனதுக்கு உகந்தவாறு பலவிதமான சிச்

ருஷைகள் செய்து வந்தாள். அரசனும் அவள்மேல் காதல் கொண்டான் என்றே கூற வேண்டும். ஆனால் மிருநாளவதிக்கு நம்பிக்கை கொள்ளவில்லை; அவள் தன் காதலனைப் பலவிதமாகப் பரிசோதித்தாள். முதலில், உப்புப் போடாத உணவைக் கொடுத்தாள். அவ்வேற்றுமையை உணர்ந்து அரசன் அதை உண்டான். பிறகு அவள் அதிக உப்புப் போட்ட உணவைக் கொடுத்தாள். அப்பொழுதும் அவன் அவ்வாறே சாப்பிட்டான்; இதனால் அவள் ஒருவாறு நம்பிக்கைகொண்டாள்.

சுரங்கம் கட்டி முடிக்கப் பட்டுவிட்டது. மாளவநாட்டு மந்திரிகள் அரசனைக் கண்டு தப்பித்துக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். அன்றைய தினம் அரசன் சிறையினின்றும் வெளியேறுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அரசன் ஒரு நிலைக் கண்ணாடி முன்பு நின்று, சிறையிலிருந்த காலத்தில் தன் உடலில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அச்சமயத்தில், மிருநாளவதி பின்புறமாக வந்து அரசனை நெருங்கினாள். கண்ணாடியில் தன் காதலன் முகத்துடன், தன் முகமும் சேர்ந்து பிரதிபிம்பிப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். ஸௌந்தர்யத்துடன் ஜொலிக்கும் அரசன் முகத்துக்குப் பக்கத்தில், சுருக்கங்கள் விழுந்து கிழடு தட்டிப்போன தன் முகத்தைக் கண்டதும் அவள் நம்பிக்கை யிழந்தாள். அரசனுடைய அன்பு வெகு சீக்கிரமாக மறைந்துவிடும் என்றே நிச்சயித்துவிட்டாள்.

முஞ்ஜன் திரும்பி அவள் முகம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டதும் அவள் மனதில் எழுந்த உணர்ச்சியை யூகித்து அறிந்தான். அதனால் "மிருநாளவதி! ஏன் இதற்கு வருத்தப்படுகிறாய்? உன் அழகு குறைந்து போய்விட்டால் என்ன? கற்கண்டுக்கட்டியைப் பொடி பண்ணினாலும், அப்பொடியின் தித்திப்புக் குறைந்து விடுமோ? அதேபோல என் அன்பு ஒரு நாளும் குறையாது" என்று அவளைத் தேற்றினான்.

எப்படியும் அவள் மனம் சாந்தியற்றுப் பூசலாடிக் கொண்டிருந்தது என்பதை அவன் முகம் காண்பித்துவிட்டது. விடுதலையை விரும்பி வெளியேறிவிடுவதா? காதலை விரும்பி அவள் அருகிலேயே இருப்பதா? என்றென்றும் அவமானத்தை ஏற்க அவன் மனம் சகிக்கவில்லை. வெளியேறுவதற்கு அவள் சம்மதிப்பாளா? தன்னுடன் அவள் வருவாளா என்றெல்லாம் அவன் சிந்தித்து வந்தான். மிருநாளவதியும் கூரிய புத்தியுள்ளவள்; தன் ஸாகஸம் முழுவதையும் உபயோகித்துக் கொஞ்சும் குரலுடன் அரசன் மனதில் உள்ள இரகசியத்தைத் தெரிவிக்குமாறு வேண்டினாள். அரசனும் அவள் காதலை மதித்து உண்மையை வெளியிட்டு விட்டான். தான் அன்றைய தினம் சுரங்க வழியாகத் தப்பிவிடப்போவதாகவும், அவள் தன்னுடன் வந்தால் அவளைத் தன் பட்ட மகிஷியாக்கி விடுவதாகவும் கூறினான்.

மிருநாளவதி சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். வயது முதிர்ந்த விதவையான தன் பேரில் அரசன் அன்பு எப்பொழுதும் இருக்குமா? முகப்பொலிவு நீங்கிக் கிழடு தட்டிய தன் மேல் சிறிது காலத்திற்குப் பிறகு அரசனுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்றெல்லாம் யோசித்தாள். கடைசியில் சமாளித்துக்கொண்டு சிறிது பொறுத்துக்கொள்ளுங்கள் நான் போய் என்னுடைய நகைகளைக் கொண்டு வருகிறேன் பிறகு இருவரும் சேர்ந்து ஓடிவிடலாம்" என்று கூறிவிட்டு அரண்மனையை நோக்கி விரைந்து சென்றாள்.

தன் காதலி வந்து விடுவாள் என்று காத்துக்கொண்டிருந்தான் அரசன். மாளவ நாட்டு மன்னனின் பட்ட மகிஷியாகப் போகிறவளுக்கு இந்த நகைகள் இல்லாவிட்டால் என்ன? போகிற இடத்தில் நகைகள் கிடைக்காவா? அரண்மனையிலிருந்து அவள் நகைகளை எடுத்துக்கொண்டு வந்து தன்னுடன் மாளவ நாட்டுக்கு வரப்போகிறாள் என்று முஞ்ஜன் கருதிக் காத்திருந்தது பெரிய தவறாகும்.

அரண்மனைக்குச் சென்ற மிருநாளவதி முஞ்ஜன் வெளியேறப் போகும் செய்தியைத் தன் சகோதரன் தைலபனுக்குத் தெரிவித்தாள். தைலபனும் உடனே சிறைச்சாலைக்கு விரைந்து சென்று முஞ்ஜனைப் பிடித்துக் கயிறுகளால் கட்டினான். தன் காதலியின் வரவை நோக்கியிருந்த மாளவ தேசாதிபதிக்கு இது ஓர் இடிபோலவே ஆயிற்று. "பெண் மக்கள் எவ்வளவு இனிப்பாகப் பேசினாலும் மனதைக் கொள்ளை கொண்டாலும் அவர்களிடம் இரகசியங்களைத் தெரிவிப்பவர்கள் எப்பொழுதும் துன்பத்தையே அடைவார்கள் என்று கூறப்பட்டுள்ளதே. அதையறிந்தும், அதன்படி நடவாமல் மதிமோசம் போனேனே" என்று வருந்தினான். என்ன பயன்?

தைலபனும் அரசனை உயிருடன் வைத்திருப்பது தனக்கு உபத்திரவத்தையே விளைவிக்கும் என்று கருதி அவனைக் கொலை செய்துவிடுவதென்று தீர்மானித்தான். அவனைக் கயிறுகளால் கட்டி வீதி வழியே இழுத்துச் சென்று ஒவ்வொரு வீட்டிற்கும் எதிரில் நிறுத்தி அவமானம் செய்


இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும், கவர்ன்மெண்ட் இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின் நிர்வாஹ கவர்னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்ரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலையின் மெடிகல் டிப்ளோமா பட்ட பரீக்ஷைகளுக்கு பரீக்ஷாதிகாரியுமான,

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**மஹா பில்வாதி தைலம்:**—நேத்திர ஸம்பந்தமான எல்லா ரோகங்களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக கொடுக்கக்கூடிய அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு ரூ. 2. வி.பி.வேறு.

**ஆனந்த படை நிவாரணி:**—இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வி. பி. வேறு.

**பிரமதாரோக பஞ்ஜனி:**—மூத்திர நாளத்தின் எரிச்சல், வெள்ளை முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்கட்டாயம் தீர்க்கும். சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

**ஆனந்தாஞ்சனம்:**—ஸகலவிதமான வலிகளுக்கும், கீல்பிடிப்புகளுக்கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணா 8. வி. பி. வேறு.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



# 1000 ரூபாய் கஜானா பைகள்.

சர்க்கார் கஜானாக்களிலிருந்து நாம் பெறும் தொகைகளை வெள்ளி நாணயங்களாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகள் சர்க்கார் முத்திரை தரிக்கப்பட்ட பைகளில் கொடுககப்பட்டால் அவைகளை எண்ணவோ அல்லது பரிசோதித்துப் பார்க்கவோ அவசியமிராது. ஏனென்றால், எண்ணிக்கை குறையாமலும், நாணயங்கள் பழுதற்றவைகளாயுமிருப்பது நிச்சயம். அவ்வாறே **ஸ்டேன்ஸ் "T. S. & Co., Ltd."** முத்திரை போடப்பட்ட துணிப்பைகளில் காப்பிக்கொட்டை வாங்குவீர்களேயானால் முதல்தரமான அசல் நீலகிரிச் சரக்கையே பெறுவீர்கள். இதர சாமான்யமான காப்பிக் கொட்டையால் இந்தப்பைகள் நிறப்பப்படுவதில்லை. சாயமேற்றின காப்பியில் நாங்கள் வியாபாரம் செய்வதுமில்லை. 3, 5, 7 பவுன் பைகளில் கிடைக்கும்.

பைகளின் பேரிலுள்ள

S & Co.

என்கிற வியாபாரக் குறியையும் கவனித்து வாங்கவும். போலிச் சரக்குகளை ஒப்புக்கொள்ளாதீர்கள்.

**டி. ஸ்டேன்ஸ் & கோ.,**

**கோயமுத்தூர்.**

தானும். கொலைக் களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட முஞ்ஜன் தன் மந்திரி ருத்திராதித்தியனை மனமார வாழ்த்தித் தன்னையும் அவனிருக்கும் மேல் உலகத்துக்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டினன். கடைசியில் அரசனைக் கொலை செய்து அவன் தலையை ஒரு ஈட்டியிற் சொருகி தைலபன் அரண்மனை வாயிலில் நட்டு வைத்தார்கள். அந்தத் தலைக்குத் தினமும் புளித்த மோரை அபிஷேகம் செய்து அவமானப் படுத்தினர்களாம். வலியிழந்த ஒரு அரசனை அவமானப் படுத்துவதே அதர்மமாகும். உயிரிழந்த ஒருவனை அவ்விதம் செய்வது மிகவும் கேவலமாகும். இஃது உண்மையாக இருக்குமானல், சோழர்கள் தங்கள் நாட்டின் மேல் படையெடுத்து வந்த காலத்தில் தர்ம விதியினின்றும் வழுவிவிட்டார்கள் என்று சளுக்கியர்கள் புகார் செய்வது நீதியோ?

இச்செய்தியைக் கேட்டுத் தாரா நகரமே துக்கத்தில் முழுகியது. புலவர் பலர் அரசனுக்குச் சரமகவிபாடினர். தாயை இழந்த கன்று போலக் கதறினர்கள். முஞ்ஜன் வியோகத்தைக் கலைமகள் வீற்றிருக்கும் பீடத்தின் கால்களுள் ஒன்று ஒடிந்து போனதாகவே கருதினர்கள்.

முஞ்ஜன் ஒரு சிறந்த வித்துவான். அவன் சபையைப் பல வித்துவான்களும் கவிஞர்களும் அலங்கரித்தனர். தசரூபம் என்னும் நாடக இலக்கணத்தை எழுதிய தனஞ்சயன், அந்நூலுக்கு தசரூபாவலோகம் என்னும் ஒரு விருத்தியையும், காவ்ய நிர்ணயம் என்னும் மற்ருெரு நூலையும் எழுதிய தனிகன், பையலச்சி என்னும் நிகண்டையும், ஹலாயுதம் என்னும் நூலையும், பிங்கல சூத்திரங்களுக்கு ஒரு வார்த்திகத்தையும் எழுதிய பிராகிருத வித்துவானன தனபாலன், முதலியோர் அவன் சபையில் இருந்தார்கள். தனிகன் என்பவன் அரசனுடைய மஹாஸாத்யபாலனகவும் விளங்கினன். முஞ்ஜன் எழுதிய கவிகள் பிரபந்த சிந்தாமணி போஜப்ரபந்தம், இன்னும் பிற்காலத்திய அலங்கார நூற்கள் சில முதலியவற்றுள் சிதறிக் கிடக்கின்றன.

முஞ்சன் நாட்டு மக்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களை பலவற்றையும் செய்து கொடுத்திருந்தான். தாரா நகரத்துக்குப் பக்கத்தில் முஞ்ஜசாகரம் என்னும் பெரிய ஏரி ஒன்றை அமைத்து அதைச் சுற்றிலும் படித்துறைகள் கட்டினன். அன்று, மாந்தாதா, மஹேச்வரம், முதலிய இடங்களிலும் படித்துறைகளையும், உஜ்ஜயினி தாராநகரம் முதலியவற்றில் பல கட்டிடங்களையும் சமைத்தான். பல படித்த பிராமணர்களுக்கும், கோவில்களுக்கும் உதவிகள் செய்தான். வெளி நாடுகளிலிருந்து பண்டிதர்கள் பலரை மாளவ நாட்டில் குடியேற்றினன்.

இவ்விதம் பிரபலமான அரசனுக்கு நேர்ந்த அவமானத்தைக் கேட்டுப் பொருது அவன் தம்பி மகனன போஜராஜன் தான் அரசனாக வந்ததும் வஞ்சம் தீர்த்துவிடுவதாகப் பிரதிக்ஞை செய்தான். அவன் வஞ்சம் தீர்த்ததைப் பற்றி மற்ருெரு சமயம் கூறுவோம்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்பு நாம் கூற வேண்டுவது ஒன்றுண்டு. பட்டத்துக்கு உரியவனன போஜராஜனைக் கொல்வதற்காக முஞ்ஜன் கொலையாளிகளை ஏவியதாகவும், அவர்களிடமிருந்து தப்பிய போஜன் பலவிதத் துன்பங்களை அநுபவித்துக் கடைசியாகத் தாரா நகரத்து அரசனாக முடிசூட்டப் பெற்றதாகவும் ஒரு கதை வழங்குகின்றது. முஞ்ஜ ராஜனே பட்டத்துக்கு முறைப்படி உரியவனவான். அவனுக்கு இளையவனன ஸிந்துலன் எனப்படும் ஸிந்துராஜன்மகனே போஜன். ஸிந்துலன் ரத்னவதி நகரத்து வஜ்ராங்குசன் மகளான சசிப்ரபை என்னும் நாக கன்னிகையை மணஞ்செய்து கொண்டான். அதன்பேரில் அண்ணனுக்கும் தம்பிக்கும் சிறிது மன வேறுபாடு ஏற்படவே ஸிந்துலன் நாட்டைத் துறந்து கூர்ஜ்ஜர தேசத்தில் கொஞ்ச காலம் வாழ்ந்து வந்தான். ஆயினும் அந்த விரோதம் உடனே மாறிவிட்டதால் அவன மறுபடியும் மாளவத்துக்கே வந்துவிட்டான். முஞ்ஜன் தக்காணத்துக்குப் புறப்படுமுன் ராஜ்யபாரத்தை ஸிந்துலன்வசம் ஒப்புவித்துச்சென்ருன். அவன் இறந்த பிறகு ஸிந்துராஜன் முறைப்படி கி. பி. 997-ம் ஆண்டில் மாளவ தேசத்துச் சிங்காதனம் ஏறி இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செலுத்தினன். அதன் பிறகே போஜன் அரசனக முடிசூட்டப்பெற்ருன். ஸிந்துராஜனுடைய ஜீவிய சரித்திரத்தை நவஸாஹஸங்க சரித்திரம் என்று எழுதிய பத்மகுப்தனும் முஞ்ஜன் அவ்விதம் போஜனை வஞ்சித்தான் என்று கூறவில்லை. ஆதலின் அக்கதையை நாம் நம்புவதற்கில்லை. ஆயினும் அக்கதை சென்ற ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகின்றது.

* * * *



நம்பிக்கையான இடம்.
மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.



## எல்லாத் தோல் வியாதிகளையும் சீக்கிரமாய் ஆற்றும்படியானது.

நீ ரூபத்தை மாற்றும்படியான தோல் வெடிப்பினல் வருத்தப்பட்டால், உனக்கு வைத்திய சாஸ்திரம் குடிகூராவை (Cuticura) விடசீக்கிரமாய் நோய்தீர்ப்பது ஒன்றும் தரமுடியாது. இந்த மருந்து, தோல்வியாதிகளை அனேக காலமாகப் பார்த்துத் தீர்த்த வைத்தியரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டது.

இந்த முறைகளைப்படித்து உபயோகிக்கவேண்டும்.

நோயிருக்கும் பாகத்தை, ராத்திரியிலும், காலையிலும், குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக் கழுவி, மெதுவாய் உலரத்துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். புண்ணுற்றி, நோய்தீர்த்து, சொஸ்தமாக்கும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்துவிடும். அது கருமிப் புழுகளை அழித்து, நோய் உண்டாக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலைக்கும் புண்களை ஆற்றி, தோலுக்கு சுகமான வழியை உண்டுபண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும். முதல் தரம் பூசும்போதே சுகத்தால் பயனகவரும் ஆனந்தம் உனக்கு ஆச்சரியக் களிப்பை உண்டாக்கும். குடிகூரா தைலமும் (Cuticura Ointment) குடிகூரா சோப்புக்கட்டியும் (Cuticura Soap) வாங்கி இன்றைக்கே உபயோகித்துப்பார்.

**Cuticura**
OINTMENT AND SOAP
குடிகூரா
தைலமும் சோப்புக்கட்டியும்




எந்த மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.





## தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானுவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,**
77, சைன பஜார் ரோட், மதராஸ்.



## வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

ஏஹித்ரிஜகதீச!—சம்போ! மாம்
பாஹி, பஞ்சநதீச! (ஏஹி)

அநுபல்லவி

வாஹினீ சரிபுநுத! சிவ! ஸாம்ப!
தேஹித்வதீய கராப்ஜாவலம்பம் (ஏஹி)

சரணங்கள்.

1. கங்காதர! தீர!—நிர்ஜரரிபு
புங்கவ ஸம்ஹார
மங்கள கர! புரபங்க! வித்ருதஸுருகு—
ரங்காப்த ஹ்ருதயாப்ஜ ப்ருங்க சுபாங்க (ஏஹி)

2. வாரணாஜின சேல! பவோததி
தாரண! ஸுரபால!
க்ரூரலோகா ப்ரஸமீரண! சுப்ரச—
ரீர! மாமகாகஹர! பராத்பர! (ஏஹி)

3. ராஜசேகர! கருணுஸாகர! நக—
ராஜாத்மஜா ரமண!
ராஜராஜ பரிபூஜிதபத! த்யாக
ராஜ ராஜ! வ்ருஷ ராஜாதி ராஜ! (ஏஹி)

II

| | |
|---|---|
| த்ரிஜகதீச | —மூன்று உலகங்களுக்கும் ஈசனே! |
| சம்போ | —சம்புவே! |
| பஞ்சநதீச | —திருவையாற்றில் கோயில் கொண்டருளும் சிவ பெருமானே! |
| வாஹினீசரிபுநுத | —ஸமுத்ரத்துக்குச் சத்ருவான அகஸ்தியரால் தொழப்பட்டவரே! |
| சிவ | —மங்களரூபரே! |
| ஸாம்ப | —அம்பிகா சமேதரே! |
| கங்காதர | —கங்கையை (சடையில்) தரித்தவரே! |
| தீர | —எல்லையற்ற ஆண்மையுடையவரே! |
| நிர்ஜரரிபு புங்கவ ஸம்ஹார | —தேவர்களின் பரம விரோதிகளான அஸுரர்களை கொன்றவரே! |
| மங்களகர | —மங்களத்தை யுண்டாக்குபவரே! |
| புரபங்க | —முப்புரங்களை (நெற்றிக் கண்ணுல்) எரித்தவரே! |
| வித்ருத ஸுருங்க | —திருக்கையில் அழகிய மானை ஏந்தியவரே! |
| ஆப்த ஹ்ருதய அப்ஜ ப்ருங்க | —பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தைச் சார்ந்திருக்கும் வண்டே! |
| சுபாங்க | —அழகிய சரீரத்தை யுடையவரே! |
| வாரண அஜின சேல | —யானையின் தோலை ஆடையாயணிந்தவரே! |
| பவோததி தாரண | —ஸம்ஸாரக் கடலைக் கடக்கச் செய்பவரே! |

(10-ம் பக்கம் பார்க்க)

# பத்திரத்தன்மைக்கும், திருப்திக்கும்

## புகழ்பெற்ற இடம்

**தனிப் பெருமை**

## "ஒரே விலை"

சின்னக் குழந்தைகூட

ஸுராஜ்மலுக்கு வந்து

நிர்ப்பயமாய் வாங்கலாம்.



**பிரத்யேக புகழ்**

## "உயர் ரகம்"

நவீன மோஸ்தரான

சரக்குகள் மட்டுமே,

...ர்ம் கட்டுவதற்காக இ...

வைக்கப்பட்டிருக்கின்றன.

மறவாதீர்கள்

# ஸுராஜ்மல்ஸ்,

## 313, எஸ்பிளனேட், மதராஸ்.

| | |
|---|---|
| ஸுரபால | —தேவர்களைக் காப்பாற்றுபவரே! |
| க்ரூரலோக அப்ரஸமீரண | —நரகங்களென்ற மேகத்தைச் சிதறவடிக்கும் புயற்காற்றே! |
| சுப்ர சரீர | —மாசற்ற திருமேனியை யுடையவரே! |
| மாமக அகஹர | —என்னுடைய பாவங்களை யொழிப்பவரே! |
| பராத்பர | —எல்லாவற்றையுங் கடந்த தெய்வமே! |
| ராஜசேகர | —சந்திரனைச் சிரஸில் அணிந்தவரே! |
| கருணாஸாகர | —கருணைக்கடலே! |
| நகராஜாத்மஜாரமண | —பர்வதராஜனுடைய குமாரியான பார்வதியின் மணாளனே! |
| ராஜ ராஜபரி பூஜிதபத | —குபேரனால் பூஜிக்கப்பட்ட திருவடிகளையுடையவரே! |
| த்யாக ராஜ ராஜ! | —த்யாகராஜனால் கொண்டாடப்படும் ப்ரபுவே! |
| வ்ருஷ ராஜ அதி ராஜ | —விருஷபங்களுக்கு அதிபனான நந்தியை வாஹனமாகக் கொள்ளும் ப்ரபுவே! |
| ஏஹி | —வாரும்; |
| மாம்பாஹி | —அடியேனைக் காப்பாற்றும்; |
| த்வதீயகர அப்ஜ அவலம்பம் தேஹி | —தேவரீருடைய திருக்கைகளாகிய தாமரைகளின் பற்றுதலை அடியேனுக்கு அருளும். (அதாவது அடியேனைக் கைதூக்கிக் கரையேற்றும்.) |

III

ஸ்வாமிகள் திருவையாற்றிற் கோயில் கொண்டுள்ள பஞ்சநதீசுவரரைப் பற்றிப் பாடிய கீர்த்தனங்களுள் இஃதொன்று. மற்றவை எவருன்னரு, இலலோ ப்ரணதார்த்தி ஹருடு முதலியவைகளாம்.

இது சுத்த ஸம்ஸ்கிருதக் கீர்த்தனையாகும்.

த்ரி ஜகதீச:—த்ரி ஜகங்களுக்கும் ஈசன் என்று கூறியிருப்பினும் ஸகல புவனங்களுக்கும் ஈசன் என்று குறிப்பிட்டபடி முக்யமான மூன்று லோகங்களையும் குறிப்பிட்டபடியால் இதர புவனங்களையுங் கூடச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வாஹினீ சரிபுநுத:—வாஹினீசன்-நதிகள் சென்றடையும் பதி; எனவே ஸமுத்ரம், இந்திரனுக்கு பரம சத்ருவான வ்ருத்ராஸுரன் ஸமுத்திரத்தின் அடியில் ஒளித்துக்கொண்ட காலத்தில் அந்த ஸமுத்ரம் விலகி வழிவிடாத காரணத்தால் இந்திரன் அகஸ்தியரைப் பிரார்த்தித்துக்கொள்ள, அவர் ஸமுத்ர ஜலமுழுவதையும் திரட்டி ஆசமனீயம் செய்துவிட்டாரென்பது வரலாறு. அவரால் கொண்டாடப்பட்ட சிவபெருமான் என்று இங்கு ஸம்போதனம் செய்யப்படுகிறார். பார்வதீ பரிணய காலத்தில் ஸகல தேவர்களும் முனிவர்களும் பிறரும் வடக்கே யடைந்தபோது, பூமியின் தென்பாகம் தூக்கிக்கொள்ளவே, அங்குப் பாரம் சரியாக இருக்கும் பொருட்டு சிவபெருமான் கட்டளையின்படி அகஸ்தியர் பொதிய மலைக்கு வந்து அவ்விடத்திலேயே திருக்கல்யாண கோலத்தைத் தரிசிக்கும்படி அருள்புரியப்பட்டாரென்பது இங்கு அறிய வேண்டிய விருத்தாந்தம்.

இவ்வாறன்றி, வாஹினீச ரிபுநுத; இலங்கைக்குப் போவதற்கு அணையிடவழிகொடாமல் பராமுகஞ்செய்த ஸமுத்திரத்தை திடலாக அடிக்கிறேன் (ஸாகரம் சோஷயிஷ்யாமி) என்று கோபத்துடன் புறப்பட்ட ஸ்ரீராமனால் கொண்டாடப்பட்டவரே என்று பொருள் கொள்ளலுமொன்று நாஸிம்ஹபாகவத பதிப்பிலுள்ள குறிப்பில் முதலிற் கூறப்பட்ட பொருளுக்குத்தான் ஆதாரம் காணப்படுறது.

ஸாம்ப:—அம்பிகாஸமேதமான மூர்த்தியே உபாஸனைக்குகந்தவர்.

தேஹி...அவலம்பம்:—லக்ஷ்மீந்ருஸிம்ஹ மமதேஹிகராவலம்பம்' என்ற மகுடத்தையுடைய ஸ்ரீசங்கராசார்யரியற்றிய ஸ்தோத்ர ஸ்லோகங்கள் ஞாபகத்துக்குவரும்.

அப்ஜ ப்ருங்க சுபாங்க:—'ஸ்ரீநாரத' என்ற கானடா ராகக் கீர்த்தனையில் ஸ்வாமிகள் '(நாத) ஸரஸீருஹ ப்ருங்க சுபாங்க, என்று ஸம்போதித்திருப்பது ஒப்பு நோக்கற்பாலது.

[கங்கையைத் தரித்தது, கரித்தோலையணிந்தது, புரமெரித்தது, முதலிய விருத்தாந்தங்கள் அனைவருக்கும் தெரிந்திருக் கூடும் என்று தோன்றுவதாலும் அவற்றை விவரிப்பதென்றால் இங்கு இடம் போதாதென்பதனாலும் அவை இங்கு விஸ்தரித்துக் கூறப்படவில்லை.]

பவோதகி தாரண:—'பவநீரதி தாரண' என்றும் பாடம்—அர்த்தத்தில் பேதமில்லை. 'பவ' ரோகத்தைத் தீர்க்கவல்லவர் 'பவ'னாகிய சிவபெருமானேயாவர்.

க்ரூரலோக:—ரௌரவாதி நரகங்கள்; பக்தர்களுக்கு இவற்றின் தொல்லை யேற்படாமல் காப்பாற்றுபவர்.

ராஜராஜ பரிபூஜித:—ராஜராஜன் என்பது குபேரனுக்குப் பெயர். 'ராஜராஜோதனாதிப' என்ற நிகண்டு வாக்யம் ப்ரமாணம்.

த்யாகராஜ ராஜ:—'த்யாகராஜ ரூப' எனவும் பாடாந்தரம்.

IV

ஸாரங்க திஸ்ரத்ரிபுட சாபு.

ஸாரங்க ராக லக்ஷணத்திற்கு "மித்திரன்" வாரப்பதிப்பு 29-11-36 தேதிய இதழில் கண்டுகொள்க. அந்தக் குறிப்பில் 'சுத்த ரிஷபம்' என்று பிழையாக இருப்பதைச் 'சதுச்ருதி ரிஷபம்' என்று திருத்திக்கொள்ளுக.

**பல்லவி**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| , * ஸா | ஸா ஸா | பமா | பாதநி | ஸ்ா, | ; தநி | ஸ்தா | பமா |
| , * ஏ | ஹி த்ரி | ஜக | தீ... | சா, | ; சம் | போ | மாம்... |
| ஸ* பா | பா பா | மரீ | ரீகம | ரீ,. | ஸா ; | ; , | ; ; |
| , * பா | ஹி பஞ் | சந | தீ... | சா, | . ; | ; , | ; ; |

**அனுபல்லவி**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| , * தம் | ஸ்ா ஸ்ா | தபா | மாபா | , மப | தாநீ | ஸ்ா, | ஸ்ா ஸ்ா |
| , * வா | ஹி னீ | ச | ரிபு | , தத | சிவ | ஸா, | ... ம்ப |
| , * ரீ | ஸ்ா ஸ்ா | ஸ்தா | நீஸ்ா | ஸதா | பமமா | தபம | ரிகமரி |
| , * தே | ஹி த்வ | தீ | யக | ரா | ப்ஜ வ | லம்... | ப ம்... |

ஸ *
* (ஏஹி)

**சரணங்கள்**

சரணங்களின் முற்பாதியைப் பல்லவியைப்போலவும், பிற்பாதியை அனுபல்லவியைப்போலவும் பாடி முடிக்கவேண்டும்.

# கண்ணோட்டம் பிரமுகர்கள்



நியூ டில்லி மதராஸிகள் கல்விச்சங்கம், சங்கீதப் பயிற்சிக்ககாக ஸ்ரீமதி வி. ஜம்னுவுக்கு "அல்லாடி கோதாவரி அம்மாள்" பரிசை யளித்திருக்கிறது. பரிசுடன் சிறுமி காணப் படுகிருள்.



பம்பாயின் புதிய மேயர் டாக்டர் இ. மோஸஸ்.



முதலியார் வகுப்பில் முதன் முதலாக, சென்னை ஹைகோர்ட்டில் வக்கீலாகப் பதிவு செய்து கொண்டுள்ள ஸ்ரீமதி இ. டி. சொக்கம்மாள்.



கல்கத்தா முனிஸிபாலிட்டியில் உத்தியோகம் வஹிக்கும் டாக்டர் எஸ். கே. சன்டா. மலேரியாவைத் தடுப்பது பற்றி சிங்கப்பூரில் பயிற்சி பெறுவதற்காக சர்வதேச சங்கம் இவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்திருக்கிறது.



வருமானவரி விசாரணைக் கமிட்டிச் சிபார்சுகளின்படி இந்தியா கவர்ன்மெண்டார் இந்திய வருமான வரிக் கமிஷனர் என்று ஒருவரை நியமிக்க முடிவு செய்துள்ளனர். இப்பதவிக்கு முதன் முதலாக மிஸ்டர் ஜே. எப். ஷீஹி ஐ. ஸி. எஸ். நியமிக்கப்பட்டிருக்கிருர்.



ஸர் பிராங் நாய்ஸிற்குப் பதிலாக இந்திய சர்க்கார் வர்த்தக மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் தாமஸ் ஸ்டுவர்ட்.



போர்பந்தரில் (கத்தியவார்) ஒரு கன்யா மந்திரம் கட்டுவதற்காக இரண்டு லக்ஷ ரூபாய் நன்கொடை யளித்துள்ள சேத் நஞ்சிபாய் காளிதாஸ்.



பாரிஸ்ஸில் நடைபெறவிருக்கும் சர்வதேச ரயில்வே காங்கிரஸிற்குச் செல்லும் மிஸ்டர் பிராங் டிஸௌஸா.



சோமுவுக்கு அதிகாலையில் எழுந்து வெளியேபோக வேண்டியிருந்தது. ஆனால் காலையில் எழுந்திருப்பது என்பது சோமுவால் முடியாத காரியம். ஆகையால் அவன் ஒரு யுக்தி செய்தான். அதிகாலையில் பால்காரனை வரும்படிச் சொன்னான். அதன்படி பால்காரன் வந்தபோது சோமு, "இவ்வளவு சீக்கிரமாகவா பால் கொண்டுவந்து தூக்கத்தைக் கெடுக்கிறது?" என்று கூறிவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டான்.

* * * *

முருகன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தன் பத்து ரூபாய் நோட்டைக் காணோமென்று தெரிவித்து அதை எடுத்துக்கொண்டு யாராவது வந்தார்களாவென்று கேட்டான்.

கான்ஸ்டபிள்:—இல்லை, ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று அகப்பட்டது.

முருகன்:—அப்படியானால் அதைக் கொடுங்கள். கணக்கில் வரவு வைத்துக்கொள்ளுகிறேன்.

* * * *

ஊர்சுற்றி ஆபீஸ் வேலைக்காக வெளியூர் செல்லுவதாக மனைவியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான். புறப்படும்போது, "நான் வருவதற்குத் தாமதமேற்பட்டால் தந்தியடித்துவிடுகிறேன். அதற்காகக் கவலைப்படாதே" யென்றான்.

மனைவி:—நீங்கள் தந்தியடிக்கவேண்டிய சிரமமேன் எடுத்துக்கொள்ள வேண்டும்? உங்கள் பையில் எழுதிவைத்திருந்த அத்தந்தியை நான் பார்த்துவிட்டேன்.

* * * *

ஒருவர் தெருவில் போய்க்கொண்டிருக்கையில் சட்டைப் பையில் கைவிட்டார். எதிரிலிருந்த பிச்சைக்காரன் தனக்கு அவர் காசு கொடுக்கப் போகிறாரென்று, "கடவுள் நல்ல ஐஸ்வரியத்தைக் கொடுப்பார்" என்றான்.

ஆனால் அவர் கை குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டே பிச்சைக்காரனைத் தாண்டிச் சென்றார். உடனே பிச்சைக்காரன், "அந்த ஐஸ்வரியம் உங்களுக்குக் கிட்டாது" என்றான்.

* * * *

"ஐயர்! மானேஜரைக் கூப்பிடுங்கள். இந்த வடையை என்னால் சாப்பிட முடியவில்லை"

ஐயர்:—அப்படியானால் மானேஜராலும் சாப்பிட முடியாது.

* * * *

க்ஷவரம் செய்துகொள்ள ஒருவர் ஸலூன் சென்றார். நாவிதன் கை நடுங்கிற்று.

"நீ என்ன புதிதாகக் வேலை கற்றுக் கொள்ளுகிறாயோ?"

"ஆமாம். உங்களுக்குத்தான் முதன்முதலாக க்ஷவரம் செய்யப்போகிறேன்."

"அப்படியானால் கையை வெட்டிக்கொள்ளப் போகிறாய், ஜாக்கிரதை."

* * * *

சிறுவன் முதன் முதலாகப் பள்ளிக்கூடம் சென்று வந்தான்.

தகப்பனார்:-- உபாத்தியாயர் எப்படியிருக்கிறார்?

சிறுவன்:—தேவலை.

"தேவலை என்றால்"

"என்னைவிட அவருக்கு அதிகம் தெரிந்திருக்கிறது".

* * * *


**SAVE YOUR EYE**

From ALL TROUBLES, even Cataract.
Try 'SELLER'S LOTUS HONEY
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
'L. H. Seller, Samta, Bengal
Beware of Imitation—Insist on SELLER'S



**ஸ்ரீமத் பகவத்கீதை**

விலை ரூ. 3.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.





லாஸ் ஆஞ்சலிஸ் ஜப்பானியத் தந்தியாபீஸிலுள்ள ஜப்பான் எண்களுள்ள கெடியாரம். மேற்படியாபீஸைச் சுற்றிலும் ஜப்பானியர் ஏராளமாக வசிப்பதால் இக் கெடியாரம் அங்கு இருக்கிறது.



சென்னை மாகாண இந்திய கிறிஸ்தவர்கள் மகாநாடு சென்னையில் நடைபெற்றது.

# இந்திய வர்த்தமானம்

——[ o ]——

**கராச்சியில் மர்ம யுத்தக் கப்பல்**

கராச்சியிலுள்ள "டெயிலி கெஜட்" என்ற பத்திரிகை சென்ற 7-ந் தேதி ஒரு ரஸமான செய்தியை வெளியிட்டிருக்கிறது. சென்ற வாரத்தில் கராச்சி துறைமுகத்திற்கருகில் மூன்று முறை ஒரு மர்ம யுத்தக் கப்பல் தோன்றி மறைந்ததென்றும் அது அடையாளம் தெரியவில்லையென்றும் கூறுகிறது.

இந்தக் கப்பல் முதலில் தென்புறமாகத் துறைமுக வாயிலில் வந்து பின் திடீரென வேகமாக மறைந்ததென்றும், மாலையில் இக்கப்பல் துறைமுகத்தை நோக்கி வந்ததை 2 கப்பல்கள் பார்த்தனவென்றும் வெள்ளிக்கிழமை காலையில் இது துறைமுகத்திற்கு வெளியே உலாவியதென்றும் மனோரமா என்ற கப்பல் சமிக்ஞை செய்தபோது இக்கப்பல் பதில் சமிக்ஞை செய்யாமல் வேகமாகச் சென்று மறைந்ததென்றும், இது துரிதமாகச் செல்லக்கூடிய நாசகாரியைப்போல் தோன்றுகிறதென்றும், துறைமுக அதிகாரிகள் திகைப்படைந்திருக்கிறார்களென்றும், கிமாரியில் இதைப்பார்த்தவர்கள் இது ஐரோப்பிய நாட்டைச்சேர்ந்த பெரிய ஜலமூழ்கிக் கப்பல் போலிருப்பதாகக் கூறுகின்றனர் என்றும் இப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

* * * *

**நாட்டிற்காக எனது அனைத்தும் அர்ப்பணம்.**

கல்கத்தா சிரத்தானந்தா பார்க்கில் சென்ற 6-ந்தேதி ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸுக்கு வங்காள மகாஜனங்கள் வரவேற்பளித்தனர். ஐந்தரை வருஷங்கள் போல் சிறைவாஸம், பிரஷ்டம் முதலியவற்றிற்குட்பட்ட ஸ்ரீமான் சுபாஷ்பாபுவைக் காணுவதில் ஜனங்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். சுமார் 200 சபைகள் சார்பாக சுபாஷ் போஸுக்கு மாலைகள் போடப்பட்டன.

"சிறைவாசம், தேசப்பிரஷ்டம், பந்தோபஸ்து ஆகியவற்றிற்கு வெகு காலமாக உட்பட்டு இப்பொழுது அரசியல் விஷயத் தொடர்பற்றவனாகவே யிருக்கிறேன். ஆகவே, நடந்த விஷயங்களையெல்லாம் நன்கறிந்து நான் ஒரு அபிப்பிராயம் கொள்ள வேண்டியவனாகவிருக்கிறேன். இதன் பின்னரே நான் எதிர்காலத்தைப்பற்றிக் கவனிக்கமுடியும். எனது எதிர்கால வேலைத்திட்டத்தை நிர்ணயிக்குமுன்னர், தற்கால நிலைமையைப்பற்றித் தேச முழுவதும் நோக்கி நிற்கும் காந்திஜீயையும்; காங்கிரஸ் தலைவரான பண்டித நேருவையும் மற்றத் தலைவர்களையும் நான் கண்டு பேச வேண்டுவது மிக அவசியமாகிறது.

"நீங்கள் காட்டியுள்ள பேரன்புக்கு மனப்பூர்வமாக எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்குப் பதில் நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? எனது அனைத்தையும் தாய் நாட்டின் சேவைக்காகவும், அதன் அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணம் செய்ய நான் சித்தமாகவிருக்கிறேனென்பதை மீண்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்வதுதான் அதற்கு நான் செய்யக்கூடிய கைம்மாறாகும்."

இந்தத் தோரணையில் சுபாஷ் போஸ் வரவேற்பிற்குப் பதிலளித்தார்.

* * * *

**ஹரிஜனங்களை மதமாற்ற முயற்சி**

ஆமதாபாத் ஜில்லாவில் பல கிராமங்களிலும் 500 ஹரிஜனங்களை மதம் மாற்றுவதற்குக் கிறிஸ்தவப் பிரசாரகர்கள் முயற்சி செய்து வருகிறார்களென்று பல கிராமவாசிகள் கையெழுத்திட்ட விண்ணப்பமொன்று ஹிந்து சபைக் காரியதரிசிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

* * * *

**வாய்ச்சண்டையில் வந்த வினை**

அலஹாபாத்திற்குச் சமீபத்தில் யமுனா நதியில் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்து 12 பேர்கள் மூழ்கிப் போயினர். ஒரு கோவிலைத் தரிசிக்க இவர்கள் படகில் சென்றனர். மூழ்கினவர்களில் 8 பேர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். படகில் சென்றவர்களிடையே ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை நடந்தது அதில் வாக்குவாதம் கடுமையாகப்போய் படகு நிலை தவறி இந்த விபத்து நேரிட்டதாகக் கூறப்படுகிறது.

* * * *

**அஸ்ஸாம் ஜனப்பிரதிநிதி சபையில் காங்கிரஸ் வெற்றி**

அஸ்ஸாம் ஜனப்பிரதிநிதி சபைக்கு ஸ்ரீமான் வஸந்த குமாரதாஸ் அக்கிராஸனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் காங்கிரஸ் அபேக்ஷகர்.

* * * *

**யாருக்கு மனைவி?**

தென்னிந்தியா ரெயில்வே, தாம்பரம் ஸ்டேஷன் ரோட்வான் குமாஸ்தாவான ஆர். கேசவப் பிள்ளையென்பவர் ராஜம்மாள் என்ற பெண் தமது மனைவியென்றும், அவளைத் தம்மிடம் ஒப்புவிக்குமாறு அவளுடைய உறவினருக்கு உத்தரவிட வேண்டுமென்றும் சென்னை ஹைக்கோர்ட்டில் மனுச் செய்துகொண்டார். ராஜம்மாள் கோர்ட்டில் ஆஜராகித் தான் வேலூரிலிருக்கும் ராஜு முதலியார் என்பவரின் சம்சாரமென்றும் மனுதாரின் பெண்ஜாதி யல்லவென்றும் தெரிவித்துக்கொண்டார். கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

* * * *

**பஞ்சாபில் அடக்குமுறை**

சர்தார் சார்தூல் சிங் பின்வருமாறு அறிவித்திருக்கிறார்:—சென்ற நான்கு தலைமுறைகளாக எனது குடும்

உயர்ந்த
வைரங்கள்
**T. R.**
**ஜோஷி & சன்ஸ்,**
**Diamond Merchants,**
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி டி, மதராஸ்

**கலியாணம் எப்போ வைத்திருக்கிறீர்கள்**
**?**
இந்தக் கேள்வி
எக்கேன் என்று
கேட்பீர்கள்
அப்படியில்லை.
**பெண்ணுக்கும், பிள்ளைக்கும்,** மற்றுமுள்ளவர்களுக்கும் ஜவுளி மனோகரமாய் வாங்குவதானல் காலதாமதஞ் செய்யாமல் எற்கனவே வந்து பார்த்துத் தெரிந்து வாங்கிக் கொள்வது உங்களுக்கு நயத்தையும் இலாபத்தையும் கொடுக்கும்.
முதல்தரமான புதிய தினுசுகள் நிரம்ப வந்திருக்கின்றன,
**கேவல்ராம்ஸ்**
9—13,
ரட்டான் பஜார்,
மதராஸ்.
வைட் ஷாப்

பத்தார் அனுபவித்துவரும் ஜாகிரை எனது ராஜீய வேலைகளின் காரணமாகத் தாங்கள் பறிமுதல் செய்துவிட்டதாக எனக்குச் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

* * * *

### கவர்னர் மாளிகை முன் துப்பாக்கிப் பிரயோகம்

சென்ற 10-ந் தேதி விடியற்காலை லக்ஷ்மணபுரியில் கவர்னர் மாளிகை வாயிலில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அங்கு பாராக்காரனாக நின்று கொண்டிருந்த சிப்பாய்க்குச் சொல்பக் காயமேற்பட்டது. யாரோ வெள்ளை ஆடை அணிந்துகொண்டிருந்த ஒருவன் பாராக்காரனுக்குச்சிறிது தூரத்தில் வந்து அவனைச் சுட்டுவிட்டு உடனே இருட்டில் மறைந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. இதேமாதிரி சென்ற நவம்பர் 6-ந் தேதி ஒரு சம்பவம் நடந்தது.

* * * *

### சென்னை முனிஸிபல் உப தேர்தல்

டாக்டர் ஸி. நடேச முதலியார் காலமானதால் சென்னை முனிஸிபல் சபையில் காலியான ஸ்தானத்திற்குச் சென்ற வாரம் சேப்பாக்கத்தில் உப தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் அபேக்ஷகராக ஸ்ரீமான் பி. ஜகன்னாததாஸும், தனி நபர் ஹோதாவில் காலஞ்சென்றவரின் சகோதரரான ஸ்ரீமான் தாதுலிங்க முதலியாரும் அபேக்ஷகர்களாக நின்றனர். ஸ்ரீமான் தாதுலிங்க முதலியார் இதில் வெற்றிபெற்றார்.

* * * *

### பம்பாயின் புதிய கவர்னர்

லார்டு பிரபோர்னுக்கு அடுத்தபடியாக மிஸ்டர் லாரென்ஸ்ரோகர் லம்லீ பம்பாய் கவர்னராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.




திருவாங்கூர் ஆலயப் பிரவே சோதனை ஸ்டாம்புகள்

* * * *

### இந்தியா மந்திரிக்கு மகாத்மாவின் பதில்

லார்டு லோதியன் "டைம்ஸ்" பத்திரிகையில் வெளியிட்டுள்ள கடிதத்திற்கும், லார்டு ஜெட்லந்து பாலிமெண்டில் செய்துள்ள பிரசங்கத்திற்கும் பதிலாக மகாத்மா காந்தி சென்ற வாரம் ஒரு அறிக்கையை விடுத்தார். அதன் சாராம்சம் வருமாறு:—

இந்தியா வெளிப்படையாக வேண்டாமெனக் கூறியபின் இந்தியாமீது பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இந்தச் சட்டத்தை வற்புறுத்துகின்றனர். இதன் கருத்தை ஒரு நிஷ்பக்ஷபாதமான மத்தியஸ்த சபை வெளியிடுமாறு செய்யாமல் தங்கள் முடிவையே நம்மீது வற்புறுத்துகின்றனர். முடிவில் இதை சுய ஆட்சியெனக் கூறுகின்றனர். கவர்ன்மெண்டாரே இதுவரையில் கௌரவித்துப் பெரும் பதவியில் வைத்துள்ள ஹிந்து, முஸ்லிம், பார்ஸி வக்கீல் பிரமுகர்கள்கூடச் சட்ட விரோதமின்றியே கவர்னர்கள் உறுதிமொழி கொடுக்க முடியுமென இப்பொழுது அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் இதற்குக் கூறும் கருத்து நீதி முறையில் இல்லாமல் யதேச்சாதிகாரமாகவும், சுயநலம் கருதியதாகவுமிருக்கிறதென நான் அபிப்பிராயப்படுகிறேன். மற்ற சில வக்கீல்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்குச் சாதகமாகச் சட்டத்தின் கருத்தை யெடுத்துரைத்திருப்பதையும் நான் கவனித்திருக்கிறேன்.

மூன்று ஜட்ஜுகளடங்கிய ஒரு மத்தியஸ்த சபையை அவர்கள் நியமிக்க வேண்டுமெனக் கோருகிறேன். அந்த மூன்று ஜட்ஜுகளில் ஒருவர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாலும் மற்றொருவர் காங்கிரஸினாலும் நியமிக்கப்படட்டும். இந்த இரண்டு ஜட்ஜுகளும் சேர்ந்து ஒரு மூன்றாவது ஜட்ஜை நியமிக்கட்டும். நான் கோரிய உறுதிமொழியைக் கவர்னர்கள் கொடுக்க முடியுமா முடியாதாவென்பதை இந்த ஜட்ஜுகள் முடிவுசெய்யக் கூடும்.

இப்பொழுது இடைக்கால மந்திரிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது சட்ட சம்மதமானதல்லவெனக் கூறப்படுகின்றபடியால், இவ்விஷயத்தையும் அந்த மத்தியஸ்த சபை முடிவுக்கு விடவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இத்தகைய முறை ஏற்கனவே அனுஷ்டிக்கப்பட்டு ஒரு சம்பிரதாயமுமேற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் என் யோசனையை ஏற்கும் பக்ஷத்தில் காங்கிரஸும் ஏற்கும்படி நான் யோசனை கூறுகிறேன்.

இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் வெறும் ராஜதந்திரம் முக்கியப் பிரச்னையல்ல. இருப்பதா இறப்பதாவென்பதே இங்கு முக்கியப் பிரச்னை. இந்தியாவின் லக்ஷியத்தை யடைவதில் முன்னேறக் கூடுமென்று ஏற்பட்டால்தான் மந்திரி பதவி ஏற்றுக்கொள்ளப்படும். இல்லாவிடில் ஏற்பதற்கில்லை.

லார்டு ஜெட்லந்து பழைய வழக்கமான பிரித்தாளும் தந்திரத்தையே இன்னும் உபயோகிப்பது பார்த்து நான் மிக வருந்துகிறேன். சிறுபான்மையோர் நலத்தைப் புறக்கணிப்பதானால் காங்கிரஸ் இரண்டு தினங்கள்கூட நிலைத்திராது.

---

### நிகேல்லா ஸ்னோ

எஸ். எஸ். ஆர். கம்பெனியார் தயாரித்த 'நிகெல்லா ஸ்னோ' என்னும் முகப்பசை வரப்பெற்றோம். தூயவெண்மையாகவும் குளிர்ச்சியாகவுமுள்ள இந்த ஸ்னோவைப் பூசித் தேய்ப்பதால் முகத்தில் மிருதுத்தன்மையும் வசீகரமும் ஏற்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்னோக்களைவிட இது எள்ளளவும் தாழ்ந்ததல்ல. சுதேசிய உணர்ச்சி மிகுந்த இக்காலத்தில் நம் நாட்டிலேயே தயாரான 'நிகெல்லா ஸ்னோவை' யாதரிப்பது அவசியம். விலை புட்டி 1-க்கு அணா 6 ரூபி ஓர்க்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்தில் கிடைக்கும்.

* * * *

மற்ற பக்கங்களில்


| | |
|---|---|
| சரும்பூதம் (புதிய தொடர்கதை) | 2 |
| வாக்பதி முஞ்சராஜன் (சரித்திரப்பகுதி) | 5 |
| ஸங்கீதப்பகுதி | 8 |
| கண்ணோட்டம்-பிரமுகர்கள் | 11 |
| விநோதக்கொத்து | 12 |
| இந்திய வர்த்தமானம் | 13 |
| உங்கள் மாமா (ஹாஸ்யப்பகுதி) | 15 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 16 |
| நீலகிரி மலைச்சாதியினர் | 18 |
| அதற்கென்ன சந்தேகம்? (சிறுவர் பகுதி) | 26 |
| பிரபஞ்ச வர்த்தமானம் | 27 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 29 |
| நவநாகரீகம் | 31 |
| வாழ்க்கையின் மாறுதல் (சிறு கதை) | 33 |
| மரியாதைராமன் கதை | 36 |
| மஹாபாரதம் | 39 |


**GRATIS & POST FREE!**

1. POCKET CALENDAR, 1937.
2. THE ART OF PERFUMERY.
3. HOW TO ENJOY MARRIED LIFE.

Kindly apply at once:

**S PAUL & Co., Dept., S. W.**
4, Hospital St. Dharamtola, Calcutta.

ஸ்தாபிதம் **1910**

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

**22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்**



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8--0; ஷை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 2-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ. 1-8-0; கழுத்துச் செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0; கல்மாலை ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

**கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168,** சைனாபஜார்ரோடு, மதராஸ்.

**உங்கள் கஷ்டங்கள்!**

கஷ்டம் எப்பொழுது வரும், அதிர்ஷ்டம் எப்பொழுது கிட்டும் என்பதைச் சொல்ல முடியாது என்கின்றனர் பலர்; ஆனால் இது முற்றிலும் தவறு. பண்டிட்ஜியின் "தெய்வீகப் பெட்டி" ஒவ்வொருவரது எதிர்காலத்தையும் நிதர்சனமாக்கும். உங்களுக்கு எப்பொழுது பணம் சேரும், எப்பொழுது கவலைகள் ஒழியும், கோர்ட்டு காரியம், வியாபாரத்தில் லாப, நஷ்டம், தேக நோய், இறந்தவா தரிசனம் முதலியவற்றை வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். மிகுந்த பிரயாசையின் பேரில் சொற்ப பெட்டிகளே தயாரிக்கப்பட்டுள்ளன. இன்றே ஒரு பெட்டிக்கெழுதுக அரிய சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள். விலை சாதாரண பெட்டி ரூ. 2-8; ஸ்பேஷல் ரூ. 5-8 தபால் செலவுடன்,

SHRI TRIKAL ASHRAM (1107) Ganga Kinara, NASIK.

ஹாஸ்யப்பகுதி

# உங்கள் மாமா

'தொச்சி'

"உங்கள் மாமா என்ன சாதித்துவிட்டார்" என்றாள் மஞ்சுளா. அன்று அவள் என் மாமாவின்பால் உள்ள அருவருப்பைத் தெரிவித்தது இருபதாவது தடவை.

அவள் சொன்னதில் உண்மை இல்லாமலில்லை. என் மாமா பாலுவினிடம் ஐஸ்வர்யம் மிக்க இருந்தது. ஆஸாமி பிரம்மசாரிதான். அப்படியிருக்க, குழந்தை குட்டிகள் எங்கிருந்து வரப்போகின்றன? அவர் இறந்தால் அவ்வளவு சொத்துக்கும் நான்தான் வார்ஸ். ஆனால் எங்களுக்காக இதுவரையிலும் ஒரு காசு கூட செலவழித்தது இல்லை.

"மஞ்சுளா! இதோ பார்! இப்படி நீ சொல்லிக்கொண்டேயிருந்தால் என் மாமாவை இப்பொழுதே போய்க் கொன்றுவிட்டு வந்துவிடுகிறேன். அப்புறம் மற்றவைகளைக் கவனித்துக் கொள்ளலாம்" என்று நாற்காலியிலிருந்து கிளம்பினேன். அவள் என் நடிப்பில் உண்மையாகவே பயந்துவிட்டாள். என் முதுகின்மேல் தன் கைகளை அமர்த்தி, "ஏதோ தமாஷாகச் சொன்னேன். அதற்குள் இவ்வளவு கோபம் எதற்கு?" என்று என்னை சமாதானப்படுத்தினாள்.

மறுநாள் காலைப் போஜனத்திற்கு உட்கார்ந்த பொழுது, மஞ்சுளா திரும்பவும் பழைய கதையை ஆரம்பித்தாள்:— "இதோ பாருங்கள். இந்த கராச்சி புடவையை என் சித்தப்பா போன வருஷம் தீபாவளிக்கு வாங்கிக் கொடுத்தார். உங்கள் மாமாவிடம் உள்ள பணம் அவரிடமிருந்தால், இன்னும் எவ்வளவோ எனக்கு வழங்கி இருப்பார்... உங்கள் மாமா என்ன சாதித்தார்...ஏதோ இரண்டு ரூபாய் கூட விலை இல்லாத குரங்கு மார்க்குக் குடையை வாங்கி இந்த தீபாவளிக்கு அனுப்பியிருக்கிறார். ஏன், நமக்குக் குடை வாங்கக் கூடப் பணமில்லாமல் தவிக்கிறோமா, என்ன?"

எனக்கு அன்று மஹா கோபம் வந்தது. எப்படியாவது மஞ்சுளாவின் வாயை அடக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்... எங்கிருந்தாவது நூறு ரூபாய் கடன் வாங்கி என் பெயருக்கே மாமா அனுப்பியதாக மணியார்டர் செய்து, இவளை ஏமாற்றிவிடுவது என்று தீர்மானித்தேன்.

பகல் போஜனத்திற்குப் பிறகு என் தீர்மானத்தை முடிப்பதென்று உறுதி செய்துகொண்டேன். ஆனால் பன்னிரண்டு மணிக்கே மழை பொழிய ஆரம்பித்தது. முதலில் மழை நின்றவுடன் வெளியில் போகலாமென்று எண்ணினேன். ஆனால் தள்ளிப்போட்டால் காரியம் முடியாவிட்டால் என்ன செய்வது என்று ஓர் சந்தேகம் ஜனித்தது. பின்பு மழையைக் கவனிக்காமல் புறப்பட்டேன்.

"இந்த மழையில் எங்கு போகிறீர்கள்?"

"போகும்பொழுதுதான் உனக்கு அபசகுனம் மாதிரி குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்கத்தெரியும்."

"அடேயப்பா? இதற்கென்ன இவ்வளவு கோபம்? உங்களைக் கேட்கிறேனே, என்னைச் சொல்ல வேண்டும்.... அதிருக்கட்டும். மழையாயிருக்கிறது. உங்கள் அருமை மாமா வாங்கிக் கொடுத்த குடையைப் பிடித்துக்கொண்டு போங்கள். இப்பொழுதாவது அது உபயோகப்படும்" என்று சொல்லிவிட்டு, மஞ்சுளா உள்ளே போய் அந்தக் குடையைக் கொணர்ந்தாள்.

குடையைத் திறந்துகொண்டே, "உங்கள் மாமா என்ன..." என்று சொல்லிக்கொண்டேயிருக்கும்பொழுது; குடையிலிருந்து 'தொப்' என்று ஓர் கவர் கீழே விழுந்தது. குடையைக் கீழே போட்டுவிட்டு, "இந்தாருங்கள்! உங்கள் மாமா..." என்று அந்தக் கவரை என்னிடம் நீட்டினாள். இந்தப் பாழாப்போன மாமா மஞ்சுளாவின் பொருட்டாவது சாகமாட்டாரா என்று அவரைச் சபித்தேன்.

அந்தக் கவரில் இருநூறு ரூபாய்க்கு ஓர் 'செக்'கும், ஒரு கடிதமும் இருந்தன. அக்கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது:—

'அருமை மருமானுக்கு'

இந்தத்தீபாவளிக்கு ரூ. 200 செக்மூலம் அனுப்பித்திருக்கிறேன். தீபாவளியைச் சந்துஷ்டியுடன் கொண்டாடவும். நான் நேரில் வராததைப்பற்றி வருந்துகிறேன்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள மாமா,

பாலு.

"மஞ்சுளா! இப்பொழுது பார்த்தாயா என் மாமா சாதித்ததை?" என்று அவளிருந்த பக்கம் திரும்பினேன்.

அவள் அங்கு இல்லை.

உங்கள் வீட்டில் என் மாமாவைப்பற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தால், உடனே அவளை நான் அழைத்ததாகச் சொல்லி அனுப்பிவைக்கவும்.

* * * *



"உங்கள் மாமா என்ன..." என்று சொல்லிக்கொண்டேயிருக்கும்பொழுது குடையிலிருந்து 'தொப்' என்று ஒரு கவர் கீழே விழுந்தது.



குழந்தைகளின்
மிருதுவான சருமத்திற்கு

சந்தண வாசனையுடன் நாம தலகரும் அவசியமான ஆயிலகள் ாவதற்றிலும் ஆரோக்கிய மூட்டும் சத்துக்க ளிருக்கின்றன. மைசூர் சந்தண ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது இந்தியத் தாய்மார்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர்.

மைசூர் சந்தண
ஸோப்பு






கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்

தென்னிந்தியப் பிரமுகர்கள்



மஹாமஹோபாத்யாய

# ஹரிஹர சாஸ்திரிகள்

(1860—1916)

---

(கே. எஸ். ஆர்.)

ஆச்சார்யரின் பிரபாவத்திற்கு அவரது சிஷ்யர்களின் பெருமையே நிதர்சனமாக விளங்குவதாகும். வேதாந்த வித்யையை மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகளிடம் அண்ணாமலை சர்வகலாசாலை பிரதான சம்ஸ்கிருத போதகாசிரியர் மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ சிதம்பரம் தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதரும், மயிலாப்பூர் சம்ஸ்கிருத கலாசாலை பிரின்ஸிபால் மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளும் அப்யஸித்துத் தற்போது பிரகாசித்து வருவது இவரது பெருமையைப் பதின்மடங்கு பெருக்குகின்றது. தவிர கல்கத்தா சர்வகலாசாலை பிரதான சம்ஸ்கிருத அத்யாபகர், மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ நூரணி அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளும், சென்னை பிரஸிடென்சி காலேஜ் சம்ஸ்கிருத பண்டிதர் பிரும்மஸ்ரீ ராவ்பஹதூர் பண்டித ராஜ எஸ். கே. பத்மநாப சாஸ்திரிகளும் மஹாமஹோபாத்யாய வேதாந்தவாரிதி ஸ்ருதி சிரோபூஷணம் ஹரிஹர சாஸ்திரிகளின் சிஷ்யர்களாக விருக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். ஸ்ரீ ஹரிஹர சாஸ்திரிகள் அத்வைத வேதாந்த பிரசாரத்தில் மிகவும் ஈடுபட்டு, அந்த வித்தையை மிக்கவும் வளர்த்தவர்களுள் முக்கியமானவர். இவருடைய முயற்சியினால்தான் அத்வைத வேதாந்தக் கிரந்தங்கள் பல வெளி வந்தன.

## இளமையிலேயே ஸம்ஸ்கிருத ஆர்வம்

மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள் ராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூக்காவைச்சேர்ந்த திருக்கோஷ்டியூர் என்னும் கிராமத்தில் 1860–ம் வருஷத்தில் (ரௌத்ரிவருஷத்தில்) பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் என்பாரின் புத்திரராகப்பிறந்தார். இவரது பிதா இவரது பால்ய தசையிலேயே காலமாகிவிடவே, இவர் பரம வைதீகரான தமது மாதாமஹரால்போஷிக்கப்பட்டுவந்தார். உசிதப்படி இவருக்கு உபநயனம் செய்விக்கப்பட்டது. உபநயன காலத்தில் வந்திருந்த சில நண்பர்கள் வேடிக்கையாக இவரைப்பார்த்து "உனக்கு இங்கிலீஷ் வித்தையில் பிரியமா, அல்லது சம்ஸ்கிருத பாஷையில் பிரியமா?' என்று கேட்க, இவர் சற்றும் தயங்காமல், தாம் சம்ஸ்கிருத பாஷை பயிற்சி பெற்று வேதசாஸ்திரங்களில் நிபுணராகப்போவதாகப் பதில் அளித்தனராம். இதைக்கேட்ட நண்பர்கள் பரிகாசமாகச் சிரித்தனர்களாம்; இந்த ஏளனச் சிரிப்பைக் கண்டதும் இவரதுகண்களிலிருந்து கண்ணீர் பெருகவாரம்பித்துவிட்டதாம். இந்த சந்தர்ப்பத்தில் இவரது மாதா மஹர் இடையில் வந்து, தமது தௌஹித்ரனின் அபீஷ்டத்தினால் தாம் திருப்தியடைந்துவிட்டதாகக்கூறி, நகைத்தவர்கள் அனைவரையும் அடக்கினராம்! ஆகையினால் இளமைப்பருவத்திலிருந்தே இவருக்கு நமது புராதன சம்ஸ்கிருத கல்வியிலேயே விசேஷ ஆர்வமும் அபிருசியும் ஏற்பட்டுவிட்டது. சாஸ்திரீய முறைப்படி இவரது வித்தியாப்யாஸமும் நடத்துவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இவர் திருக்கோஷ்டியூரிலேயே மிகப் பிரசித்தர்களாக விருந்த மஹா வித்வான் ஸ்ரீ உப. வே. தாதா வேதாந்த தாச்சார்யஸ்வாமி என்கிற ஸ்ரீவைஷ்ணவோத்தமரிடம் 1875-ல் படிக்கவாரம்பித்து சுமார் 5 வருஷ காலத்திற்குள் காவ்ய நாடகாலங்காரங்களையும் தர்க்க சாஸ்திரத்தில் பாதாந்த பாகத்தையும் நன்றாக வாசித்தார். பின்பு பொந்துபுண்ணி பிரும்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகளிடத்திலும், மத்தியார்ஜுனம் சதுஸ் சாஸ்திர பண்டிதர் ஸ்ரீ அண்ணா வாஜபேயரிடத்திலும் வியாகரணத்தில் மஹாபாஷ்யாந்தமும் வாசித்து, அத்வைத வேதாந்த சாஸ்திரம் வாசிக்க வேண்டும் என்ற அவாவை மேற்கொண்டார்.

உடனே வேதாந்த பாடத்தையும் பூர்வோத்தர மீமாம்ஸைகளையும் கற்றுக்கொள்வதற்காக இவர் மன்னார்குடி பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தியாகராஜ மகிந்திரர்களை வந்தடைந்தார். மன்னார்குடி சாஸ்திரிகள் தம்மை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள சம்மதிப்பாரோ என்ற பீதி இவருக்கிருந்ததுண்டு. இதற்குக் காரணம் யாதெனில் இவர் மன்னார்குடிக்குப் போவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு தான் இவரது கிராமத்தினர் ஒருவர் அங்கு சிஷ்யராகப் போய்வெகு சீக்கிரத்திலேயே அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டார். ஆயினும் இவர் சாஸ்திரிகளுக்கு விதிப்படி குரு சிஸ்ருஷைகளைச் செய்துகொண்டு சுமார் இரண்டுமாத காலத்தை மன்னார்குடியில் கழித்தார். இவரது சிரத்தையையும், ஒப்பில்லாத சாத்வீக குணங்களையும் சோதித்த மன்னார்குடி சாஸ்திரிகள் இவரைத் தமது சிஷ்யனாக அங்கீகரித்துக்கொண்டார். பின்புஒரு நாள்கூடத் தவறாமல் இவர் குருவுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு, அவரிடமிருந்து பூர்வோத்தர மீமாம்ஸையையும் வேதாந்தத்தையும் கிரஹித்து வரலாயினர். இவர் சுமார் எட்டு வருஷ காலம் இங்கு இருந்தார்; இங்கு தர்க்கம், வியாகரணம் ஆகிய பகுதிகளில் முக்கியமான கிரந்தங்களையும் படித்து, அத்வைத வேதாந்த சாஸ்திரத்தையும் சம்பூரணமாக அறிந்து, "பிரும்மாநந்தீயம்" முடிவாக சகல வாதக் கிரந்தங்களிலும் விசேஷ பாண்டித்யத்தையடைந்தார். "அவர்களிடமிருந்து இவர் வித்தையைக் கிரஹித்தது, ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியிடமிருந்து சனகாதிகள் போலவும், ஸ்ரீஹயக்ரீவரிடமிருந்து அகஸ்தியர்போலவும், ஸ்ரீவேத வியாஸரிடமிருந்து ஜைமினி முதலானவர் போலவும் கிரஹித்தார் என்பது நிகராகும்" என்று மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் குறிப்பிடுகிறார். வித்யாப்யாஸம் செய்து வரும் காலத்தில் இவரது ரிக்த தசையைக் கண்டு, இவருக்கு அநேகம் பிரபுக்கள் உதவியதுண்டு. தாம் மிகவும் எளிய ஸ்திதியிலிருந்தும் தமது வித்யாபிவிருத்தியையே பிரதானமாகக் கருதி வந்தது குறிப்பிற்குரியது.

இந்த சமயத்தில் திருவனந்தபுரம் மஹாராஜா ஸ்ரீமூலம் திருநாள் துலாபார மஹோத்ஸவ சமயத்தில் நடந்த வித்வத் சபையிலும் மற்றும் பண்டித சபைகளிலும் சாஸ்திர விஷயமான விசாரங்களில் முக்கியமாகக் கலந்து கொண்டு தமது விசேஷபாண்டித்யத்தைப் பிரகாசப்படுத்தி வந்தார்.

## "அத்வைத மஞ்ஜரீ"யை வெளியிடுவதில் உதவி

பின்பு கோனேரி ராஜபுரம் ஸ்ரீ வி. சாம்பசிவ அய்யாவர்கள் மன்னார்குடி ஸ்ரீராஜு சாஸ்திரிகளிடம் வந்து தான் கும்பகோணம் ஸ்ரீவித்யாபிரஸ்ஸில் "அத்வைத மஞ்ஜரீ" என்னும் ஒரு புத்தகத் தொகுதியை அபூர்வமான அத்வைத வேதாந்த கிரந்தங்களுடன் ஒரு லக்ஷம் ரூபாய் செலவில் அச்சு போட்டு வெளியிட உத்ஸாஹங் கொண்டிருப்பதாகவும் அதற்காக அவர்கள் தம்மிடம் பூரண பாண்டித்தியமுள்ள சிஷ்யன் ஒருவனை அனுப்பி, உபகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீராஜு சாஸ்திரிகளும் இவ்விஷயத்திற்குத் தகுதியுடையவர் ஹரிஹரசாஸ்திரிகள் என்று சொல்லி இவரைக் கும்பகோணத்திற்குஅய்

யாவர்களிடம் அனுப்பினுர். ஆச்சார்யாரின் அனுக்ரஹத்தைமுன்னிட்டு கும்பகோணத்திற்கு வந்து இவர் பல சிரேஷ்டமான புத்தகங்களைப் பரிசோதித்துப் பிரசுரிப்பதில் மிக்க உதவிபுரிந்தார். 1893-ம் வருஷம் டிசம்பர்மாதம் இவர் புத்தகப் பிரசுரத்தை ஆரம்பித்தார். முதலில் இவர் "அத்வைத சித்தி"யை வெளியிட்டார். இது அத்வைத மதத்திற்குக் கண்டனமாக வியாஸதீர்த்தர் எழுதிய நியாயாம்ருதத்தைக் கண்டிப்பதாகும். இதை எழுதியவர் ஸ்ரீமதுஸூதன சரஸ்வதி. இப்புத்தகத்தைப் பிழையின்றி திருத்தி இவர் வெளியிட உதவினுர். பின்பு "லகு சந்திரிகா" என்கிற "பிரும்மானந்தீயம்" இவரால் பரிசோதித்து அச்சிடப்பட்டது. நியாயாம்ருதத்திற்கு வியாக்யானமானது தரங்கிணி. அது மேற் கூறப்பட்ட அத்வைத சித்தியைத் தூஷித்தது. இதற்கும் தூஷணமாகவும் அத்வைத சித்திக்கு வியாக்யானமாகவும், பிரும்மானந்த சரஸ்வதி என்பவர் லகு சந்திரிகையை எழுதினுர். பின்னர் இவர் "சித்தாந்த பிந்து"வையும் பரிசோதித்து வெளியிட உபகாரம் செய்தார். இது ஒரு பிரகரணமாகும். ஸ்ரீ சங்கரரின் தசஸ்லோகிமீது மதுசூதன சரஸ்வதி எழுதியதற்கு வியாக்யானமாக பிரும்மானந்த சரஸ்வதி எழுதிய நியாய ரத்னுவளியைத் தழுவியதாகும்இது. மறு வருஷம் 1894-ல் "பிரஹ்ம சூத்ரவ்ருத்தி" இவரால் பரிசோதித்துப் பிரசுரிக்கப்பட்டது. அத்வைத மதத்தை அனுசரித்த பிரம்ம சூத்ரங்களின் வியாக்யானமான இந்தக் கிரந்தம் ஸ்ரீ ஆதி சங்கரரின் சிஷ்யரால் எழுதப்பட்டது. அடுத்தது "பிரஹ்ம வித்யாபரணம்" என்ற கிரந்தம் இவர் உதவி மூலம் வெளி வந்தது. சங்கர சூத்ர பாஷ்ய வியாக்யானமான இது அத்வைதானந்த யதியால் எழுதப்பட்டது. இது முன்பிருந்த வியாக்யானங்களை யெல்லாம் சேர்த்து ஸங்கிரஹித்துச் சொல்கிறது. இதே வருஷத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அனுக்கிரஹித்த "சித்தாந்தலேச சங்கிரஹம்" என்ற அரிய கிரந்தமும் அச்சிடப்பட்டது. இதற்கு வியாக்யானமும் பிரசுரிக்கப்பட்டது. இது அத்வைத மதத்தைப் பற்றின ஒரு பிரகரணம். (வியாக்யானமாக விராமல் ஸ்வயமாக எழுதுவது பிரகரணமாகும்) அத்வைத மதத்தில் முடியக்கூடிய பல வழிகளுக்குப் பல ஆச்சார்யர்களுடைய அபிப்பிராய விசேஷங்களை ஸங்கிரஹித்து ஸ்வயமாக எழுதப்பட்ட புஸ்தகமாகும் இது. 1895-ம் வருஷம் மே மாதத்தில், ... தீக்ஷிதேந்திரர்களுடைய சிவதத்துவ விவேகத்திற்கு வியாக்யானமான "சிகரிணி மாலை"வெளிவந்தது. இதில் வேதோபநிஷத் புராணுதிகளிலிருந்து சிவோத்கர்ஷத்தைப் பற்றிய ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்த மஹோன்னதமான சேவை மூலம் இவர் தமக்குப் புகழைச் சம்பாதித்துக் கொண்டார்.

### சிதம்பரத்தில் அத்யாபகர் ஸ்தானம்

கும்பகோணத்தில் கிரந்த பரிசோதன பிரசார கைங்கர்யத்தில் இவர் ஈடுபட்டிருந்த போது, மாயவரத்தில் நெப்பத்தூர் ரங்கநாத அய்யர் என்பவர் தமதுபுத்திரன்விவாகத்தில் ஒரு வித்வத் சபையைக்கூட்டி வாக்கியார்த்தங்கள் நடத்த வேண்டுமென்று மன்னுர்குடி ஸ்ரீராஜு சாஸ்திரிகளைப் பிரார்த்திக்க, நிரபேக்ஷகரான அவர் அங்கு தமது சிஷ்யர்கள் சிலரை அனுப்பினுர். அப்போது அங்கே, திருவாங்கூர் தனுதிகாரி தேரிழந்தூர் ஸ்ரீராமச்சந்திர கனபாடிகள், திருவியலூர் மஹாலிங்க சாஸ்திரிகள், மீமாம்ஸை நீலகண்ட சாஸ்திரிகள், ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளின் பௌத்திரர் (தற்போது மஹா மஹோபாத்யாயர்) பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் முதலியவர் கூடியிருக்க, இவர் திருவிசநல்லூர் ராமச்சந்திர சாஸ்திரியுடன் "பிரும்மாநந்தீயம்" என்ற கிரந்தத்தில் மிகத் திறமையோடு வாக்யார்த்தம் செய்தார். இதனுல் யாவரும் மகிழ்ந்தனர்.

இந்த சமயத்தில் அங்கு வியாகரணத்தில் வாக்கியார்த்தம் சொல்வதற்காக பிரும்மஸ்ரீ (தற்போது மஹா மஹோபாத்தியாயர்) தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதரவர்கள் வந்திருக்கவே சிதம்பரத்திலிருக்கும் சம்ஸ்கிருத வித்யாசாலையின் பிரதான பதவியை இவர் ஏற்றுக்கொண்டு, சிஷ்ய கோஷ்டியை விருத்தி பண்ண வேண்டுமென்று அவர் இவரைப் பிரார்த்தித்தார். உடனே இவர் பிரும்மஸ்ரீ தீக்ஷிதரவர்களிடம், தாம் ஆச்சாரியாளான ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளின் சமீபத்திலேயே எப்போதும் கைங்கர்யம் செய்யவேண்டுமென்ற உத்ஸாஹத்துடன் இருப்பதாகவும், அவர்கள் சிதம்பரம் போகும்படி ஆக்ஞையிட்டா[ல்] வரலாம் எனவும் தெரிவி[த்]தார். பின்பு மெ. ச. பா[ட]சாலை சொந்தக்காரரான சபாபதி செட்டியார் தமது ஏஜண்டை மன்[னார்]குடிக்கு இவ[ரை] வரவழைத்து வரும்படி அனுப்பினுர். அப்போ[து]

(24-ம் பக்கம் பார்க்[க])


## "என் அவள் அப்படிப் படுத்த வேண்டும்?"

### காரணம் டாக்டர்களுக்குத் தெரியும் ...

"வலுவற்ற" குழந்தைதான் ரொம்பப் படுத்துகிறது—அதற்குக் கீழ்கண்ட சிகிச்சை அவசியம்.

குழந்தையின் வலுவு அதிகப்படவேண்டும்-இத்தகைய நிலைமையில் ஸ்காட்ஸ் எமல்ஷன் சிறந்த முறையில் வேலை செய்கிறது. முக்கியமான விட்டமின் A & D நிறைந்த [...] காட்லி[வர் ...] இது [...] ஷியம், பாஸ்பரஸ் சால்ட்ஸு களும் இதிலிருக்கின்றன. சாப்பிடுவதற்கு உல்லாசமானது. **சாதாரண காட்லிவர் ஆயிலை விட மூன்று மடங்கு அதிக பலன் தருவது!**

#### பூராவும் பலவிருத்தி

**ஸ்காட்ஸ்** எமல்ஷன் பூராவும் பலவிருத்தி யூட்டுவது. சாதாரண காட்லிவர் ஆயிலையும், இதர விட்டமின் D க்களையும் சாப்பிட்டால் அதிகப்படியான கால்ஷியம் முதலியவற்றையும் உட்கொள்ளவேண்டும். பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, ஸ்காட்ஸ எமல்ஷன் சிறந்த பலவிருத்தி ஔஷதம்; நோய்க்குப் பிறகு ஏற்படும் எல்லா விதமான பலவீனத்திற்கும், இருமல், ஜலதோஷம், இன்புளுவென்சா முதலியவற்றிற்கும் இது சிறந்தபாதுகாப்பாகும்; 60 வருஷ புகழ்பெற்றது.




# SCOTT'S

# Emulsion

**சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.**

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீ[பு]ரம் ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்

(S 32)

# நீலகிரி மலைச்சாதியினர்

## படகர்களின் வாழ்க்கை

(ஸ்ரீமான் கே. முத்துராமலிங்கம், எம். ஏ., பி. எல்.)

தென்னிந்தியாவில் எட்டு மாதங்களுக்கு வெய்யிலும், மற்ற நான்கு மாதங்களுக்கு கடும் வெய்யிலும் என்பது ...க முடியாத விஷயம். ...வ, கடுங்கோடையில் ...மேலிருக்கும் ...கோடை வாசஸ்தலங்களுக்குச்செல்கிறார்கள். அத்தகைய இடங்களாகிய உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, மூனார் முதலியவைகளில் உதகமண்டலமே தலைமை பெற்று விளங்குகிறது.

உதகமண்டலத்திற்குச் செல்லும் அநேகர் ஊருக்கு வெளியே போவதே கிடையாது. தினந்தோறும் பூந்தோட்டத்திற்கும் மற்ற செளகரியமுள்ள இடங்களுக்குந்தான் போவார்கள்.

நீலகிரி ஜில்லாவில் இருப்பவர்கள் தோடர்கள், இருளர்கள், குறும்பர்கள், படகர்கள் எனப்படுவர். இவர்களில் நடை, உடை, பாவனைகளில் கொஞ்சம் விந்தையுடையவர்கள் படகர்கள். சாதாரணமாக உதகமண்டலம் கடைத்தெருவில் இவர்களை வர்ணங்களுள்ள தலைப்பாகை, வெண் ...ற முண்டு, முதலியவைகளால் அறிந்துகொள்ள முடியுமென்றாலும், இவர்களுடைய கிராமங்களுக்குச் சென்று நேராக இவர்களை அறிந்துகொள்வதே மேலாகும்.

### மதம், பூர்வீகம்

நீலகிரி ஜில்லாவில் ஆங்காங்கு பல கிராமங்களில் படகர்கள் வசிக்கிறார்கள். அவைகளில் நஞ்சநாடு, மேலூர், சீகூர் முதலியவைகளில் பூராவும் படகர்களே இருக்கிறார்கள். சரித்திர ஆராய்ச்சியின்படி இவர்கள் நீலகிரிக்கு, சுமார் ...30 வருடங்களுக்கு முன்புதான் மைசூர் தேசத்திலிருந்து வந்து குடியேறினார்கள் என்று தெரிகிறது. இவர்கள் பேசும் பாஷை பழைய கன்னடத்தை ஒத்தது. தலைமலையில் ஏழு சகோதரர்கள் இருந்ததாகவும், இவர்களின் சகோதரிகளை அபகரித்துச் சென்றவர்களைக் கண்டுபிடித்து சிக்ஷித்த விடத்திலேயே தங்கிவிட்டார்கள் என்பதும் பாமரர்களின் கொள்கை. அந்த சகோதரர்களில் ஒருவரை இப்போது "ஹேதப்பா" அல்லது "ஹேத" என்ற தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களில் ...தயவர்கள் ...ர்கள், அதிகாரிகள், ...கள், படகர்கள், தொ... சாஸ்... என ஆறுவகைப்பிரிவு ...த்ய... தயவர்களும், அதிகாரிகளும், கணகர்களும், லிங்காயத்துக்கள், மற்ற ஹருவர்களும், படகர்களும் தொரெயர்களும் சைவர்கள். உதயவர்கள் தான் இவர்களுக்கெல்லாம் புரோகிதர்கள். மாமிசமே உண்ணமாட்டார்கள். தொரெயர்கள் சாதாரணமாக இங்குள்ள பஞ்சமர்களைப்போல் கீழ்வகுப்பினர்.

இவர்கள் எல்லோரும் விவசாயிகள். ஆயினும் இப்போது ரஸ்தாக்களில் கல்லுடைப்பதிலும், அரவங்காடு என்றவிடத்திலுள்ள கார்டைட் தொழிற்சாலையிலும், நஞ்சநாட்டிலுள்ள சர்க்கார் விவசாயப் பண்ணையிலும், மற்றும், ஐரோப்பியர்களின் உருளைக்கிழங்கு, காப்பி, தேயிலைத்தோட்டங்களிலும் வேலை செய்கின்றனர். இவர்களில் ஆங்கிலம் படித்தவர்கள் குறைவு. சிலர் நல்ல சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றனர்.

### படக பெண்கள்

படக பெண்களே சகல குடும்பக் காரியங்களையும் கவனித்துக்கொள்வார்கள். சமையல் செய்துவிட்டு மற்றெல்லா நேரங்களிலும் தங்கள் தோட்டங்களில், சாமை, தினை, கீரை, வெங்காயம், பூண்டு, உருளைக்கிழங்குமுதலியவைகளைப் பயிர் செய்யும் வேலையைக் கவனித்து வருகிறார்கள். ஆண்கள் அவ்வளவு சுறுசுறுப்புள்ளவர்களல்ல. ஆகையால் ஆண்களைவிடப் பெண்களேபலசாலிகள். அவர்களின் சம்பாத்யம் அதிகம். அந்நிய புருஷர்களை இவர்கள் "ஹொலயர்கள்" என்று அழைப்பார்கள். அந்நியர்களைக் கண்டால் உடனே வீட்டிற்குள் போய்விடுவார்கள். சாதாரணமாக அயலார் படகப் பெண்களிடம் பேச முடியாது. போட்டோக்கள் எடுப்பதும் மிகவும் கஷ்டம். போட்டோ எடுத்துக்கொண்டால், ஆயுள் குறையுமென்று இவர்களின் கொள்கை.

விருந்துகள் இவர்களின் வாழ்க்கையில் மிகவும் சகஜமான சம்பவங்கள். குழந்தை பிறந்தால் விருந்து, நாமகரணத்திற்கு விருந்து, இறந்தால் விருந்து, உடம்பு ஒருவனுக்கு அசெளக்யமாயிருந்து சென்று பார்த்தால் விருந்து என்றெல்லாம் உண்டு. எனவே, அநேகர் தங்களுக்கு அசெளக்யமாயிருந்தாலும் வெளியில் சொல்லிக் கொள்வதில்லை. அசெளக்யமெனக் கேள்விப்பட்டால் போதும். பக்கத்துக் கிராமங்களிலிருக்

(23-ம் பக்கம் பார்க்க)


**உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும் அளிக்கும் கூந்தல் தைலம் இதோ இருக்கிறது.**

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்கராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது. கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பால்யநரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து தினுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகரற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.




தைலம் நன்றாக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானால் கீழ்க்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்.

**கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.**

10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

நஞ்சன்கூடு சதனவைத்யசாலை

**ச்யாவனப்ராச**

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)



**துளி இரத்தம் சிந்தவில்லை!**

வாளால் வெட்டினபோது கூட

காரணம் ரத்தமேயில்லை!

இரத்தமின்மையும், ஜீவசக்திக் குறைவும் மறைந்தொழியும்; உங்கள் தேகத்தில் 100-க்கு 100 இரத்தம் நிறைந்து நிற்கும். வலுவான தசைகளும், ஆரோக்கிய வாழ்வும் ஏற்படும். எப்பொழுது—

**அமிர்தா அருந்தினால்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



பிரபல ஸினிமா நடிகர்

ஜான் போல்ஸ்.

# படக ஜாதியி



படக ஜாதியைச் சேர்ந்த ஒருவன்.



படகர் வீடுகள். :பழைய வீடுகளையும் புதிதாகக் கட்டப்ப



கிராமத்திலுள்ள கார்த்திகை தீபம். திருக்கார்த்
கையன்று இதில் அகண்டம் ஏற்றுவார்கள்.



ஒரு படகா கிராமத்தின் தோற்

# யினர்





படகா ஸ்திரீகள் உருளைக்கிழங்குத் தோட்டத்தில் சாகுபடி செய்துகொண்டிருக்கின்ற

...ப்ப... வைகளையும் காணலாம்.





நஞ்சனாட்டிலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் கோயில்.



கிய மாகாணத்தில் பலவிடங்களிலும் சர்க்கார் குழாய் கிணறுகள் வெட்டி வருகின்றனர். மீரட் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஜனங்கள் குழாய்க் கிணற்றில் ஸ்நானம் செய்கின்றனர்.



ன்ற சில மாதங்களாக பாப்பாண்டவர் தேக அசௌக்கியமாகவிருந்தார். இப்பொழுது அவர் குணமடைந்திருக்கிறார். ஈஸ்டரின்போது ரோம் மஹாஜனங்களை அவர் ஆசீர்வதித்தபோது எடுத்த படம்.

## நீலகிரி மலைச்சாதியினர்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சுற்றத்தாரும், சிநேகிதர்களும் வந்து குவிந்துவிடுவார்கள்.

### "பிராதுகொடுப்பது விஷம் கொடுத்தாற்போல்"

இவர்கள் சாதாரணமாக எல்லா வழக்குகளையும் பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொள்வார்கள். பஞ்சாயத்துக்குக் கட்டுப்படாதவர்கள் பகிஷ்கரிக்கப்படுவார்கள். சர்க்கார் நீதிபதியிடம் பிராது செய்யமாட்டார்கள். "பிராது கொடுப்பது விஷம் கொடுத்தாற்போல்" என்பதுபடகபழமொழி. இப்போது கோர்ட்டுகளும், வக்கீல்களும் அதிகமாகவே படகர்கள் நீலகிரி கோர்ட்டுக்கு மிகவும் சகஜமாகப் போகிறார்கள். இப்போதும் நீதிபதி சிகூர் மாரியம்மன் கோவிலுக்குச் சென்று சத்தியம் செய்வாயா என்று கேட்பார். பொய் சத்தியம் செய்தால், சிகூர் மாரியம்மன் தண்டித்துவிடும் என்று இவர்களுக்கு மிகவும் பயம்.

படக கிராமங்களில் நான்கு அல்லது ஐந்து வரிசை வரிசையான வீடுகள் உண்டு. ஒரு தெருவில் ஒரு வரிசை பூராவும் ஒரே கூரையாக வேய்ந்து அதில் வேண்டிய மட்டும் தடுத்து வீடுகளாகச் செய்துகொள்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் முன் முற்றமும் பின் முற்றமும் உண்டு. இவைக்கு "இதுமனெ" என்றும் "ஓகமனெ" என்றும் பெயர். கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மேடையுண்டு. அதில் வேலையில்லா நேரங்களில் படகர்களும் சிறுவர்களும் உட்கார்ந்துகொண்டு பொழுது போக்குவார்கள். படகர்கள் வெள்ளிக் கடுக்கன்களும், காப்புகளும், அரைஞாணும், மோதிரங்களும் அணிந்துகொள்வார்கள். படகப் பெண்கள் முக்கியமாக வெள்ளிக் காப்புகளும், மோதிரங்களும்தான் அணிந்துகொள்வார்கள். இவர்களில் பச்சைக் குத்திக்கொள்வது மிகக் கௌரவம்.

### விவசாயம்

படகர்களின் வாழ்க்கையிலும் தொழிலிலும் உள்ள ஒவ்வொரு முக்கிய அம்சத்திற்கும் விருந்தாவது அல்லது நியமமாவது உண்டு. இவற்றில் விதைவிதைத்தல் மிகவும் முக்யம். அமாவாசையான மறு செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 அல்லது 4 மணிக்கு படகப் பூஜாரி தொழுதுவிட்டு அநேக வித விதைகளைக் கூடையில் போட்டுக்கொண்டு ஒரு குடும்ப ஜாதி வேலைக்காரனுடனும் ஒரு ஜதை உழவு மாடுகளுடனும்புறப்பட்டுக்குறிப்பிட்ட இடத்திற்குப்போவான். அங்கு சென்றதும் கூடையிலிருக்கும் தான்யங்களை அவ்வேலைக்காரன் வேஷ்டியில் கொட்டி எருதுகளைப் பூட்டி மூன்று தரம் நிலத்தில் உழுவான். அப்போது அந்த வேலைக்காரன் பூஜாரியை நிற்கச்சொல்லி முழங்கால் பணிந்து, "தோ, தோ, தோ" என மும்முறை கூவி, எழுந்து தன் துணியிலிருக்கும் தான்யத்தில் கொஞ்சம் எடுத்து நிலத்தில் வீசுவான். மற்ற தான்யம் அந்தக் கிராமத்திலிருக்கும் "அட்டு" எனப்படும் பொதுக்களஞ்சியத்தில் கலக்கப்படும். அன்று மத்யான வேளை விருந்தானதும் அவரவர்கள் தங்கள் நிலங்களில் விதைக்கப் புறப்படுவார்கள். இது மாசி மாதம் முதலில் நடக்கும்.

இவர்கள் எல்லோரும் சிவனிடம்மிக்க பக்தியுள்ளவர்கள். இவர்கள் சிவனை ஹெத்தெஸ்வாமியென்றும், மகாலிங்கஸ்வாமியென்றும், ஹிரியோதயஸ்வாமியென்றும், மாடேஸ்வரரென்றும், ஜதெஸ்வாமியென்றும் தொழுகிறார்கள். சில சமயங்களில் கோயமுத்தூரின் பக்கத்திலுள்ள காரமடை கோவிலுக்கும், நீலகிரி ரங்கஸ்வாமி ஆலயத்திற்கும், மைசூர் நஞ்சன்கூட் கோவிலுக்கும் யாத்திரை போவதுண்டு.

### நெருப்பின்மேல் நடப்பது

இவர்களுக்கு மாசி மாதம் நெருப்பின்மேல் நடப்பது மிகவும் முக்ய திருவிழா. இதைப் பற்றிக்கதையொன்றுண்டு.முதன் முதலில் படகப் பெரியோர்கள் தீயின்மேல்நடப்பதற்குப்பயப்பட்டதாகவும், உடனே சிவன் பாம்பின்உருவெடுத்துக் கோவிலின் சுவரில் துவாரம் செய்துகொண்டு வந்து தீயின் மேல் சென்றதாகவும், அதன் பிறகுதான் இது ஒரு முக்கிய திருவிழாவாயிற்று என்றும் கூறப்படுகிறது.

ஒரு கிராமத்தில் எல்லோரும் சாதாரணமாக ஒரே வகுப்பு அல்லது கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாதலால், அடுத்த கிராமத்தில்தான் சம்பந்தம் செய்துகொள்ளுவார்கள். நம் சமூகத்தைப்போல் இரண்டு அல்லது மூன்று மனைவிகளையும் ஒருவன் கல்யாணம் செய்துகொள்ளலாம். அப்படிச் செய்துகொண்டால் ஒவ்வொரு மனைவியும் பாடுபட்டுச் சம்பாதிப்பாள். விதவைகளின் புனர் விவாகம் மிகவும் சகஜம். இறந்ததன் கணவனின் சகோதரனைக் கல்யாணம் செய்துகொள்வார்கள்.

### சீமந்தம் விவாகரத்து

ஒரு பெண்ணின் முதற் கற்பத்தையொட்டி நடக்கும் சீமந்த நியமம் மிகவும் முக்யமானது. ஏனென்றால், இந்த விசேஷம் நடக்காவிட்டால், கல்யாணமே ஸ்திரமில்லாதது. இது நடந்தபின் கல்யாணத்து சுலபமாகச் செய்துகொள்ள இயலாது. பஞ்சாயத்தாரின் தீர்ப்பு அவசியம். இது செய்துகொள்ளாவிட்டால் தன் குழந்தைகளைத் தனது எனச்சொல்லிக் கொள்ள முடியாது, அதற்குள் கணவன் இறந்துவிட்டால், பிணத்தின் பக்கத்தில் கர்ப்ப ஸ்திரியை நிற்கவைத்து, இந்தச் சடங்கு நடத்தி வைக்கப்படும். இதற்குக் "கன்னி கட்டுவது" எனப் பெயர்.

இவர்களில் விவாகரத்து மிகவும் சகஜம். ஆயினும் இப்போது அவ்வளவு சகஜமில்லை. தமிழ், ஆங்கிலே[...]யம் கற்பிக்கும் பள்ளிக்கூட[...]கள் அதிகரிக்கச் சாதார[...]

படிப்புப் படித்தவர்களும் அதிகமாயினர். கொஞ்ச[...] கொஞ்சமாக ஹி[...] தைத் த[...]


## பளபளப்பான வெள்ளை சானிடரி அமைப்புகள்



இந்த பள பளப்பான வெள்ளை பேஸின்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுபவை; வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகளின் ரகத்திற்கு இவை இணையானவை.

இவற்றின் விலைகளும் சகாயம் தான்; இவைகள் உடையாதென்பதற்கு உத்தரவாதம்; ஜீவிய கால முழுமையும் உழைக்கும். இந்தியாவிலுள்ள எல்லா பிரபல சானிடரி எஞ்ஜினியர்களிடமும் சில்லரையாகக் கிடைக்கும்.

இத்தகைய சரக்குகளைப்பற்றிய பூரா விவரங்களடங்கிய இலவச புத்தகத்திற் கெழுதுக.

**தி பாட்டரீஸ், ராணிகஞ்ச்**

எம்-ஏ. பர்ன் & கம்பெனி லிமிடெட். 12, மிஸின்ரோ, கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள்:

பம்பாய் கம்பெனி லிமிடெட், தபார் பெட்டி 109, மதராஸ்.

BNK 07

**நஞ்சன்கூடு பல்பொடி**

ஜிஞ்சிப்

ஸெடன்ஸால்

உத்தரவாதமான

பொன், வெள்ளி நகைகளுக்கும்,

பலஊர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்

# ஸ்ரீ ஆண்டாள்

# ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

109, சைனா பஜார் ரோட், மதராஸ்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் இவரைப் பார்த்து "நீ சிதம்பரத்தில் அத்யாபக ஸ்தானத்தை அங்கீகரி. அந்த க்ஷேத்ரம் ஒரு பெரிய வித்யாஸ்தானம். என் குலத்திற்கு கூடஸ்த புருஷர்களாயும் ஸ்ரீ பரமேஸ்வராம்சபூதர்களுமான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அந்திய காலத்தில் அங்கு முக்தியடைந்தார். உன் மூலமாக எனக்கும் சிலகாலம் அந்த க்ஷேத்ர வாசம் கிடைக்கலாம். இதன் மூலமாக தென்னிந்தியா விசேஷமாக அத்வைத வேதாந்த சாஸ்திரத்தின் பிரசாரம் ஏற்படும்" என்று அனுக்ரஹித்து சிதம்பரத்திற்கு இவரை யனுப்பினர்.

இவர் உடனே சிதம்பரம் மெ. ச. வித்யாசாலை பிரதான பண்டிதர் பதவியை ஏற்றுக்கொண்டார். அப்போது இவரிடம் அநேகர் படித்துப் பிரசித்தி யடைந்துள்ளனர். இவருக்கு சம்பளம் மிகச் சொற்பமாகவிருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல் சிஷ்யர்களுக்கு வித்யாதனத்தை வழங்குவதையே பிரதானமாகக் கருதிவந்தார். சிஷ்யர்களுக்கு நன்குகப்புரியும்படி இவர்போதிப்பார்; சிரமத்தைப் பாராட்டாமல் பிரதிதினம் எட்டுமணி காலத்திற்குக் குறையாமல் இவர் பாடம் போதிப்பது வழக்கம். ஏதாவது சந்தேகத்தை யாராவது கேட்டால் உடனே தயங்காமல் சட்டென்று இவர் பதில் சொல்லுவார்.

பிறகு ஒரு சமயம் அங்கு உத்தர தேச யாத்ரையாக மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள் வந்தபோது, அவரது சன்னதியில் இவர் தம் சிஷ்யர்களைக்கொண்டு "பிரும்மாநந்தீய"த்தில் வாக்யார்த்தம் சொல்லும்படிச் செய்து, ஆச்சார்யருடைய ஆக்ஞையைப் பரிபாலனம் செய்தார். இவர் நான்கு சாஸ்திரங்களிலும் அநேகம் பண்டிதர்களை அபிவிருத்தி செய்துவைத்தார். இவருடைய கீர்த்தியைச் செவியுற்று ஆந்திர தேசங்களிலிருந்தும் வெகு பண்டிதர்கள், தாங்கள் வித்யாஸ்தானங்களில் அதிபதிகளாக விருந்தும், அத்வைத சித்தி, பிரும்மாநந்தீயம் [illegible] கிரந்தங்களை இவரி[illegible]சித்து இன்புற்

இந்த சபை இன்னும் பல வருஷங்களாக நடந்து வருகிறது. இந்த சபா வியவஹாரங்களில் இவரே பிரதான புருஷராகவும் முக்கிய பரிக்ஷகராகவும் சோபித்து வந்தார். இங்கு இவர் பிரதிவருஷமும் தமது ஆயுட் பரியந்தம் அநேகம் வைதீக விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்து வந்தார். தவிர சிதம்பரம் காளஹஸ்தி முதலிய விடங்களில் நடந்த அத்வைத சபைகளிலும் இவர் பிரதான பரீக்ஷகராகவும் மிக்க கௌரவத்தை அடைந்தார். ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருக்களாலும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாலும் இவருக்கு விசேஷ சன்மானங்கள் வழங்கப்பட்டன; இதே மாதிரி ஸ்ரீ உத்திராதி மடாதிபதிகளும் இவரைப் பாராட்டியதுண்டு. கொடியாலத்தில் காலஞ் சென்ற ஸ்ரீமான் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார் நடத்திவந்த வித்வத் சபைக்கு இவர் சிஷ்யர்களுடன் சென்று, அங்கும் அத்வைத மதத்தின் சாராம்சங்களை வாக்யார்த்த மூலமாகவும் உபந்யாஸ மூலமாகவும் எடுத்துச் சொல்லிவந்ததுண்டு. ராமநாதபுரம் ராஜா ஸ்ரீ பாஸ்கர சேதுபதி இவருக்கு சால்வை, தோடாக்கள் மனமுவந்து வழங்கினர்.

### "நிலாயேந்து சேகரம்"

இவர் "அத்வைத மஞ்ஜரி" தொகுதியில் அடங்கிய அநேக அபூர்வ கிரந்தங்களை அச்சிட்டு பிரசித்தி செய்ததுடன், தமது பிரார்த்தனைக்கிணங்கி தமது ஆசார்யர் எழுதிய "நிலாயேந்து சேகரம்" என்ற பிரும்மாநந்தீய ஸமர்த்தன கிரந்தத்தை ஸ்ரீ காளஹஸ்தியில் அத்வைத சபை நடத்திய டொருவாடா ஸ்ரீ ராகவய்யரின் உதவியினல் 1915-ல் அச்சிட்டு, அதை ஸர் பி. எஸ். சிவஸ்


## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.



NO MORE GREY HAIR

வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.




KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மதராஸ். வி. ஜே சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டேன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ப-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொளும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.



# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறர். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ 5; தபால் செலவு 9அணு.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல் ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்.





வாமி அய்யாவர்களின் தலைமையின் கீழ் நடந்த பிரபல வித்வத் சபையில், தமது சிஷ்யர்களால் வாக்யார்த்தம் சொல்லும்படிச் செய்து, விசேஷ சன்மானமடைந்தார்.

"நிலாயேந்து சேகரம்" ஸ்ரீ அனந்தாழ்வான் இயற்றிய நியாயபாஸ்கரத்திற்கு ஒருகண்டனமாகும். மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள் இந்த கிரந்தத்தைப் பூர்த்தி செய்யாதபடியால், உத்தரபாகத்தை இவரே பூர்த்தி செய்து வைத்தார். இது அச்சிடப்படவில்லை. அத்வைத வேதாந்தத்தின் அம்சங்களை யாவரும் லகுவாக அறிந்து கொள்வதற்கான நடையில் "வேதாந்த சங்கிரஹம்" என்ற புத்தகத்தையும் இவர் இயற்றினர். இதுவும் இன்னும் அச்சிடப்படவில்லை. இவ்விரண்டு புத்தகங்களும் இவரது சிஷ்ய பரம்பரையிலேயே இருந்து வருகிறது இவற்றைச் சீக்கிரத்தில் பிரசித்தி செய்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

பட்டங்களும் பிருதுகளும்

1914-ம் வருஷம் இவருக்கு இந்தியா கவர்ன்மெண்டார் "மஹாமஹோபாத்யாயர்" பட்டத்தை வழங்கினர். மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகளுக்குத் தமது ஆச்சார்யரான ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளிடம் விசேஷபக்தி உண்டு. அவருடைய தேக வியோகத்திற்காக இவர் ஆசௌச்யமும் காத்திருந்தார்.

"குருவரானுக்ரஹ பாகதேயபாஜனம்,குருசரண தீக்ஷித சரண கௌரீ ரமண சரண நலின பக்தி நிர்பராந்தரங்க:, தர்க்க வ்யாக்ருதி வேதாந்த ப்ரவசன நிஸ்தந்த்ர: சிஷ்ட:, ப்ரஸ்ரய பூஷண:, ஸ்ரீமத் அத்வைத சபா வ்யவஹார விஸ்தீகிருத ஸாமான்ய சாஸ்திர நைபுண்ய:" என்றபடி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், தமது பிதா மஹரின் சரிதையில் இவரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

1915-ல் மஹா மஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள் மைசூருக்கு சம்ஸ்கிருத கலாசாலை அத்வைத வேதாந்த புரோபஸராக வரும்படி வேண்டப்பட்டார். தாம் மிகவும் அசக்தராக விருந்தபோதிலும் இவர் இதை அங்கிகரித்துக்கொண்டார். தமக்கு சஹாயத்திற்காக, இவர் தம்முடன் முக்கிய சிஷ்யரான தேதியூர் பிரும்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளையும் அழைத்துச் சென்றார். பின்பு அங்கு மஹாராஜாவின் வித்வத் சபையில் அத்யக்ஷராகவும் இவர் இருந்தார். இவருக்கு மஹாவித்வான், ஆஸ்தான தர்மாதிகாரி முதலிய கௌரவ ஸ்தானங்கள வழங்கப்பட்டன. சொற்ப காலத்திற்குள், ... ஜகத்குருக்களால் நடத்துவிக்கப்பட்ட ஸ்ரீசாரதா கும்பாபிஷேக மஹோத்ஸவத்திற்குச் சென்று அங்கும் ஜோடி தோடா ஜோடி சால்வைகளால் பாராட்டப்பட்டார். அச்சமயம் இவருக்கு ஜகத்குருக்கள் இவருக்கு "ஸ்ருதி சிரோபூஷணம்" என்ற பட்டத்தைச் சூட்டினர். மறு வருஷ இறுதியில் காசிபாரத தர்ம மண்டலியார் இவருக்கு "வேதாந்த வாரிதி" என்ற பிருதத்தையும் வழங்கினர். மைசூரில் அப்போது புதிதாக நிறுவப்பட்ட சர்வகலாசாலையின் சம்ஸ்கிருத பாடபுத்தக நிர்ணய சங்கத்தில் இம்மஹாமஹோபாத்யாயருக்கும் ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட்டது.

1916-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் மஹா மஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகளுக்கு மைசூரில் தேக அசௌகர்யம் ஏற்பட்டது. தாம் இனி நீண்ட காலம் ஜீவித்திருக்கமாட்டோம் என்பதை அறிந்து இவர் தமது ஆச்சார்யருடைய ஆக்ஞைப் பிரகாரம் சிதம்பரம் அத்வைத சபைக்குத் தாம் அவசியம் போகவேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு அவசரமாக சிதம்பரம் வந்து சேர்ந்தார். ஆனல் இவர் வழியிலே அகண்ட காவேரியில் தமது ஜ்வரத்தைப் பாராட்டாமல் ஸ்நாநம் செய்தார். மறுதினம் டிசம்பர் மாதம் 23-ம் தேதியன்று மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள், ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்போல் சிதம்பர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நடராஜ குஞ்சித சரணத்தில் ஸாயுஜ்யமடைந்தார். அப்போது இவருக்குப் பிராயம் 56 தான். இவர் தமது வாழ்நாள் முழுதும் அனுஷ்டான நியமங்களை விட்டு வழுவியவரல்லர். எப்போதும் இடைவிடாத ஔபாசனம், தேவதார்ச்சனம், வைஸ்வதேவம், முதலிய சத்கர்மாக்களை இவர் நடத்தி வந்தார். தமது சிஷ்யர்களும் அப்படியே அனுஷ்டிக்கும்படி இவர் செய்து வந்தார். இவரால் ஏற்படுத்தப்பட்ட அத்வைத பாம்பரை வாழையடி வாழையாக வளர்ந்து ஸ்ரீ ஹரிஹர வேதாந்த பாடசாலை மூலமாக இப்பொழுதும் ஸ்ரீ நடராஜர் கிருபையால் வளர்ந்து வருகிறது. (இந்த சரித்திரம் எழுதும் விஷயத்தில் எனக்கு உதவி புரிந்த மஹாமஹோபாத்யாயர்களான பிரும்மஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதருக்கும், பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளுக்கும், ராவ்பகதூர் பிரும்மஸ்ரீ எஸ். கே. பத்மநாப சாஸ்திரிகளுக்கும் நான் நன்றி பாராட்டுகிறேன்.)

* * * *





X-LX 547/1-50  LEVER BROTHERS (INDIA) LIMITED TAMIL

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

**தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!**

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்த மடையுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, 0—8—0 |
| 4. | பகவத்கீதை | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | , 0--10--0 |
| | ,, ,, 2 மாதர் | 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | , 0--12-0 |

**6. Bharathi and his works**
by Mr. C Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,

திருவல்லிக்கேணி. சென்னை.

சிறுவர் பகுதி

# அதற்கென்ன சந்தேகம்?

——:[o]:——

'பாலன்'

பெருமாள்சாமி புதூரில் சிறு வியாபாரி. சின்னஞ்சிறு தந்திரங்களைச் செய்வதில் சமர்த்தன். அவனுக்குப் பறவைகள் மீது அதிகப்பிரியம். புரு, குருவி, காடை, கௌதாரிகளெல்லாம் அவனிடம் ஏராளமாக இருந்தன. கஸ்தூரிரங்கன் என்ற கிளிமீது அவனுக்கிருந்த அலாதி பிரியத்தை சொல்லி முடியாது. தினமொரு நாழிகை நேரமாவது அதனுடன் விளையாடாமல் இருக்கமாட்டான். இனிய பாலும் கனிந்த பழங்களும்தான் அதற்கு ஆகாரம்.

'கஸ்தூரி ரங்கா' என்று அழைப்பான். "அதற்கென்ன சந்தேகம்?'' என்று சொல் என்பான். கிளியும் அப்படியே அச்சாகக் கூறிவிடும். இப்படியாக பழக்கி வரவே, சொல்வதற்கெல்லாம், 'அதற்கென்ன சந்தேகம்' என்று கூறிவிடுவதில் தவறுது. 'நான் நல்ல எஜமான் அல்லவா?' என்று சொல்வான். சந்தேகமில்லை பாடத்தை ஒப்புவித்துவிடும் கிளி. சில சமயங்களில் கிளியை கடைக்கு கொண்டு வருவான். அயலூர் ஆசாமிக்காரர்களிடம் சரக்குகளைப்பற்றிப் புகழ்வான். 'என்ன ரங்கா' என்றபடி பார்ப்பான். 'அதற்கென்ன சந்தேகம்' என்று கிளி சொல்லும். யாவரும் ரொம்ப ஆச்சரியமாய் பேசுவார்கள்.

'சின்னக்கடை வியாபாரி பெருமாள்சாமி வளர்த்து வரும் கிளி இன்று பெரியதோர் உண்மையை வெளியிடப் போகின்றது. சந்தைப்பேட்டை மைதானத்திற்கு யாவரும் வரலாம்' என்று ஊர் முழுதும் தமுக்கடிக்கப்பட்டது. மைதானத்தில் எள் விழ இடமில்லை. அவ்வளவு ஏராளமாக ஜனங்கள் கூடிவிட்டார்கள். 'இப்பாகத்தில் புதைய[illegible] இருப்பதாக வெகு நாளாகப் பேசிக்கொள்கின்றார்களே. உண்மை எப்படி' என்று கிளியினிடம் கேட்டு மைதானத்தின் தென் மூலையைச் சுட்டிக் காட்டினன். கிளி 'அதற்கென்ன சந்தேகம்' என்றது. குழி தோண்டினர்கள். புதையல் அகப்பட்டது. நூறு பவுன் பெறுமான தங்க நகைகள் அகப்பட்டன. ரகசியத்தைத் தெரிந்து சொல்லும் சக்தி பெற்றிருந்த கிளியை யாவரும் வாயாரப் புகழ்ந்தார்கள்.

போலி தங்க நகைகளை முன்னுடியே மைதானத்தில் புதைத்து வைத்துத் தந்திரத்தினுல் தனது கிளிக்கு பெயரும் புகழும் கிடைக்கும்படிச் செய்துவிட்டதைப்பற்றி வியாபாரி தனது மனைவி சுந்தரத்தினிடம் சொல்லிச் சொல்லி பெருமை அடித்துக்கொண்டான். நல்ல கிராக்கி வருமென்றுன்.

குருசிங் பெரிய மார்வாடி. அவனுக்குக் கிளி மீது நாட்டம் சென்றது. பெரிய செல்வந்தனுக அவன் இருந்தால்தான் என்ன? கிளி கிடைத்துவிட்டால் நாட்டிலுள்ள புதையல் எல்லாம் அவனுக்குதானே! வட்டியை நினைத்துக் கையிலுள்ள பணத்தைக் கொடுத்துவிட்டு நடையாய் நடந்து அலுத்துக்கோர்ட்டிற்குப் போய் எல்லா வீண் செலவும் செய்து கடைசியில் முதலில் ஒன்றுக்குப் பாதி கூடக் கிடைக்காமல் திண்டாடும் காலத்தில் இந்த வருமானம் மிகமிக நல்லதென்று முடிவு செய்தான். பேராசை அவனைப் பிடுங்கித் தின்றது.

வர்த்தகனிடம் சென்றுன். கஸ்தூரி ரங்கனிடம் தனக்கு ஏற்பட்டுள்ள பிரேமையை விளக்கினுன். என்ன விலை என்றுலும் தட்டாமல் வாங்குவதாகச் சொன்னுன். குறிப்பிட்ட காலத்தில் திருப்பித்தாச் சொல்வதாகஇருந்தாலும் சரி என்றுன். வியாபாரி ரொம்ப யோசிப்பதாக நடித்தான். 'என்ன செய்வது பெரியவாள் வந்து



கேட்கும்போது' என்று முகத்தை சுளித்தபடியே சம்மதம் சொல்லி, "ஐந்நூறு பவுன் விலை'' என்றுன். மார்வாடி பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிளியுடன் வீடு சேர்ந்தான்.

பொழுது புலர்ந்தது. கிளிக்கூண்டைக் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினுன். புதையல் இருப்பதாக ஜனங்கள் பேசிக்கொண்ட இடங்களுக்குச் சென்றுன். 'புதையலிருக்கின்றதா?' என்று கேட்டான். கிளி, 'அதற்கென்ன சந்தேகம்?' என்றது. துள்ளிக் குதித்தான் மார்வாடி. வேலையாட்களை வரவழைத்தான். ஆழமாகத் தோண்டினுன். ஒன்



றும்—கல் மண் தவிர— அகப்படவில்லை. மார்வாடிக்கு இடி விழுந்தாற்போலாகிவிட்டது. மேலும் மூன்று இடங்களில் அப்படியே நடந்தது. சந்தேகமில்லை என்ற பதிலுக்குக் குறைச்சல் இல்லை. ஆனுல் புதையல் எதுவும் கிடைக்கவில்லை. அவன் அடைந்த எரிச்சலைச் சொல்லி முடியாது. 'உனக்கு அவ்வளவு உயர்ந்த விலை கொடுத்து வாங்கிய நான் முட்டாள் தான்' என்று அவன் சொன்னவுடன் 'அதற்கென்ன சந்தேகம்?' எனக் கிளி பதில் கூறியது. எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டாற்போலிருந்தது. பேராசையினுல் யோசிக்காமல் தான் மோசம் போனதுபற்றி வருந்தினுன். இதற்குப் பின்தான் 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற முதுரையை உணர்ந்தான். தனது பெரும் செல்வத்தைத் தருமகாரியங்களில் செலவிட்டான்.


## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8, ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.



ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600 ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SOLE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.

ESTD. 1893.



சவரன் மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல் வெள்ளி சாமான்களும்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?
வீகம்ஸி சபில்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112, சைனுபஜார் ரோட்டு மதராஸ்



சென்னை சர்வகலாசாலை சங்கீத டிப்ளோ வகுப்பு மாணவர்களும் மாணவிகளும் உபாத்தியாயர் டைகர் வரதாச்சாரியாருடன் காணப்படுகின்றனர்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

—:[O]:—

### ஹிட்லரின் பீதி

பிரேக்கிலுள்ள ஒரு நிருபர் ஹிட்லரைப்பற்றித் தெரிவித்திருக்கும் செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. அதன் விபரம் வருமாறு:—

சமீபத்தில் நான் ஜெர்மனிக்குச் சென்றிருந்தேன். ஹிட்லர் யார், எந்த சமயத்தில் தம்மைக் கொல்வரோ என்ற பீதியுடனிருந்து வருகிறார். அவரது மெய்க்காவலர்களே கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டனர். ஹிட்லர் இப்பொழுது தமது விமானத்தில் ஏறுமுன் அது நன்கு சோதிக்கப்படுகிறது. பெர்டஸ் காடனில் ஹிட்லர் உலாவச் செல்லுமுன், அந்தப் பிரதேசம் முழுவதையும் போலீஸார் ஆராய்ந்து அதைச் சூழ்ந்து கொள்கின்றனர். ஹிட்லர் உலாவிவிட்டுத் தமது மாளிகைக்குத் திரும்பும்வரை அந்தப் பிரதேசத்துக்குள் யாரும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

ஹிட்லர் முன்போல் பெர்லின் தெருக்களில் அடிக்கடிக் காணப்படுவதில்லை. அவர் வெளியே புறப்படுமுன் அவர் செல்லும் பாதையில் வண்டிப் போக்குவரத்தோ, ஜன நடமாட்டமோ இல்லாதவாறு செய்யப்படுகிறது. அவருடைய மோட்டாரின் முன்னும் பின்னும் போலீஸ் அதிகாரிகளைக் கொண்ட பல மோட்டார் கார்கள் செல்கின்றன. அவருடைய மோட்டாரின் படிகளிலும் பல போலீஸ் அதிகாரிகள் நின்றுகொண்டு காவல் புரிகின்றனர்.

* * * *

### பார்லிமேண்டு எதிர்க்கட்சித் தலைவருக்குச் சம்பளம்

மந்திரிகள் சம்பள மசோதாவின்படி எதிர்க்கட்சியின் தலைவர் சம்பளம் பெற வேண்டுமென்ற கொள்கையைப்பார்லிமெண்டிலுள்ள தொழிற் கட்சியினர் அங்கீகரித்துவிட்டனர். ஆனால், அந்தச் சம்பளத்தொகை எவ்வளவாக இருக்க வேண்டுமென்பதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

* * * *

### ஆசியாக்காரருக்கு முட்டுக்கட்டை

ஐரோப்பியப் பெண்களை ஐரோப்பியரல்லாதார் தங்கள் கீழ் வேலைக்கு வைத்துக்கொள்வதைத் தடுக்கும்பொருட்டுத் தென்னாப்பிரிக்கா சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது நேயர்களுக்குத் தெரியும். அதுபற்றி ஆராய்ந்த பரிசீலனைக் கமிட்டியார் அதே நோக்கத்துடன் ஒரு புதிய மசோதாவை வெளியிட்டிருக்கின்றனர். அதில் "ஆசியாக்காரர்" என்ற கோஷ்டியில் ஜப்பானியரைச் சேர்க்கக் கூடாதெனத் தெளிவாக விதிக்கப்பட்டிருக்கிறது.

அசல் மசோதாவில் ஆசியாக்காரர்களைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அந்த மசோதாவைக் குறித்து மார்ச் மாதம் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு மந்திரி சபையில் பிளவேற்படத்தக்க நிலை விளைந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

புதிய மசோதாவிலுள்ள வியாக்கியானத்தின்படி ஆசியாக்காரர் என்ற பதம் ஆசிய தேசங்களில் எதையும் தாய் நாடாகக் கொண்ட ஜாதிகளைக் குறிப்பிடுவதாகும். ஆனால் இப்பதம் யூதர்கள், ஸிரியர்கள், கேப் மலேயர்கள் இவர்களைக் குறிக்காது. தென்னாப்பிரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் ஒரு வர்த்தக ஒப்பந்தம் அமுலிலிருந்து வரும்வரை இந்த மசோதா ஜப்பானியருக்கு விரோதமாகப் பிரயோகிக்கப்படமாட்டாது.

ஆசியாக்காரர் தங்கள்கீழ் அல்லது தங்கள் ஆதிக்கத்திலுள்ள கம்பெனிகளில் ஐரோப்பியப் பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்வதைத் தடுப்பதே இந்த மசோதாவின் நோக்கம்.

இந்தியருக்கு விரோதமான இம்மசோதா சம்பந்தமாக இந்திய ஏஜன்ட் ஜெனரல் ஸர் ரஜா ஆலி மந்திரி ஹாப்மியரைக் கண்டு மசோதாவைக் கண்டித்து முறையிட்டார். வருஷா வருஷம் அதிகரித்து வரும் இத்தகைய சட்டங்களைத்தாம் தடுக்கக்கூடவில்லையாயின் தென்னாப்பிரிக்காவில் இந்திய ஏஜண்ட் ஜெனரல் என்று ஒருவர் இருக்க வேண்டிய அவசியமேயில்லையென்றும் அவர் தெரிவித்தாராம்.

மசோதா பரிசீலனைக் கமிட்டி முன் அவர் சாட்சியங் கொடுக்கையில் இத்தகைய மசோதாக்களால் இந்தியாவுக்கும் தென்னாப்பிரிக்காவுக்குமுள்ள உறவு மிகவும் பாதிக்கப்படுமென எச்சரித்ததாகத் தெரிகிறது.

இம்மசோதாவால் தங்களில் பெரும்பாலோருக்கு வேலையில்லாதுபோய்விடுமென்றும், எனவே அதைக் கண்டிப்பதாகவும் கேப் டவுன் ஸ்திரீகள் சங்கக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

ஆசியாக்காரர்களின் கீழ் வேலை செய்து வரும் ஐரோப்பிய ஸ்திரீகளைப் பேட்டிகண்டபொழுது அவர்கள் இம்மசோதாவைப் பலமாகக் கண்டித்தனர். அவர்களில் ஒருவர் "நான் எனது கம்பெனியை விட்டுப் போகுமாறு கட்டாயப்படுத்தப்பட்டால் இந்நாட்டைவிட்டு வெளியேறி வே


**இனம்**

378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)



## பண்டிட்ஜியின் விஜயம்

திரிகால் ஆசிரமம் புனித கங்கையின் கரைமீதுள்ள நாசிக் க்ஷேத்திரத்திலிருக்கிறது. சென்ற சில தினங்களாக பண்டிட்ஜி அவர்கள் இங்கு விஜயம செய்துள்ளார்கள். பண்டிட்ஜி அவர்கள் பலரது இன்னல்களைத் தீர்த்திருக்கிறார் என்பது உண்மை. அவரது அபூர்வ யோக சக்தியாலும், ஜந்திரம், மந்திரம், தந்திரம், மூலிகைகள் இவற்றைக்கொண்டும் மனித வர்க்கத்தின் கஷ்டங்கள் தகர்க்கப்படுகின்றன. செலவுக்காக 1 ரூபாய் அனுப்பி, உங்கள் கஷ்டங்களை அறிவியுங்கள்; பண்டிட்ஜி உங்கள் துன்பங்களைப் போக்குவார்.

விலையுயர்ந்த மருந்துகளும், இஞ்செக்ஷன்களும் பயன்படாத இடத்தில் சொற்பக் காசுகளே செலவாகும். விபூதியும், மூலிகைகளும் அற்புத பலனளிக்கும். பண்டிட்ஜி தம்முடன் சில அபூர்வ மூலிகைகளைக் கொண்டுவந்தார். உங்கள் மனக்கவலையெல்லாம் ஒழியும்; சாதாரணம் ரூ. 2-8; உயர்வகை ரூ. 5; தபால் செலவு 8 அணா பிரத்யேகம்.

குறிப்பு:—புத்திர சந்தானம் கோருபவர்கள் பிரத்யேக மூலிகைக்கு ரூ. 10 அனுப்பவும்.

SHRI TRIKAL ASHRAM (1107) Ganga Kinara, NASIK.

றெங்காவது இந்தியரின் கீழே வேலைக்கமர்வேன்" எனத்தெரிவித்தார்.

* * * *

### ஸினிமா நடிகருக்கு வாரம் 8,755 பவுன்

அமெரிக்காவில் மே வெஸ்ட் என்ற ஸினிமாநடிகை வாரம் 8,755 பவுன் சம்பளம் பெறுகிறாள். அவள் வருஷத்தில் எட்டு அல்லது பத்து வாரங்கள்தான் வேலை செய்கிறாள்.

* * * *

### உறுதிமொழி தரமுடியாது

பிரபுக்கள் சபையில் இந்தியா மந்திரி ஜெட்லந்து பிரபு, லார்டு லோதியனுடைய கேள்வியின் மூலமாக ஏற்பட்ட சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு இந்திய நிலைமையை விளக்கினார். அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

அரசியல் விஷயத்தில் நீண்டகாலமாகக் காங்கிரஸ் காட்டிவந்திருக்கும் மனோபாவங் காரணமாகப் பதவி ஏற்பு விஷயத்தில் அவர்கள் என்ன செய்யக்கூடுமென்பதைப்பற்றிய பேச்சு எழுந்தது. பதவியேற்புக்குப் பூர்வாங்க நிபந்தனையாகக் கவர்னர்கள் விசேஷாதிகாரங்களைப் பிரயோகம் செய்யும் விஷயத்தில் சில உறுதிமொழிகளை அக்கட்சியினர் கேட்கக்கூடுமென்று தேர்தல் முடிந்தவுடனேயே எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அரசியல் சட்டத்தின் எல்லைக்கு உட்பட்டு மாகாணங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பூரண ஆதரவைக் கவர்னர்கள் அளிக்கச் சுதந்திரமுடையவர்களாயினும், பார்லிமெண்டானது அவர்களுக்குச் சில பொறுப்புகளை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், அதன் சம்மதமன்னியில் அந்தப் பொறுப்புகளை விட்டுக்கொடுத்துவிட முடியாதென்றும் என்னுடைய பூரண சம்மதத்தின்பேரில் கவர்னர்களுக்கு ராஜப்பிரதிநிதி ஞாபகப்படுத்தினர்.

உறுதிமொழி தரவேண்டுமெனக் காங்கிரஸ்காரர்கள் விடுத்த கோரிக்கையை அரசியல் சட்டத்தை மாற்றாமல் கவர்னர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் சட்டத்தின் 52-வது பிரிவுப்படிக் கவர்னர்களிடம் சில விசேஷப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சிறுபான்மை வகுப்புகளின் நியாயமான பாத்தியதைகளைப் பாதுகாப்பதும் அவற்றிலொன்றாகும். இந்தப் பொறுப்பு சம்பந்தமான ஒரு பிரச்னை எழுகையில் அவர் தமக்கு யுக்தமாகத் தோன்றும் முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும். இடைக்கால மந்திரிசபைகள் அமைப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமானதெனச் சிலர் கூறுகின்றனர். இக்கூற்றைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்வதற்கில்லை. கவர்னர்கள் தம் விசேஷாதிகாரங்களைப் பிரயோகிப்பதானது மந்திரிகளின் வேலை முறையையும் நடவடிக்கைகளையுமே பொறுத்திருக்கிறது. கவர்னர்கள் ஒத்துழைப்பு உணர்ச்சியுடனும் மந்திரிகளின் நிலைமையை அனுதாபத்துடன் உணர்ந்துமே அரசியல் சட்டத்தை நடத்தி வைப்பார்கள்.

* * * *

### ஜார்ஜ் மன்னரைக் கொல்லச் சதி

"ஸண்டே ஸ்டாண்டர்ட்" என்ற பத்திரிகையில் பின்வருமாறு ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது:—

மகுடாபிஷேக தினத்தன்று மன்னரைக் கொல்ல லண்டனில் ஒரு சதி நடைபெற்று வந்ததாகவும் அதை ஸ்காட்லந்து யார்டு போலீஸ் அதிகாரிகள் கண்டுபிடித்துவிட்டனரென்றும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக அவர்கள் யாரோ ஒருவரைச் சந்தேகித்து அவரது அறையைச் சோதித்ததில் அங்கு வீசியெறியத்தக்க கத்தி ஒன்றும், மகுடாபிஷேக ஊர்வலம் செல்லும் பாதைகளைக் காட்டும் ஒரு படமும் அகப்பட்டனவாம்.

இவற்றிலிருந்து அவ்வூர்வலம் செல்கையில் மன்னரைக் கொல்ல வேண்டுமென்பதே சதிகாரர்களின் நோக்கமெனத் தெரிகிறது.

[சென்ற வருஷம் எட்டாவது எட்வர்டு தமது அரண்மனைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில், அவரைக் கொல்வதற்கான முயற்சியோ என ஐயுறத்தக்க சம்பவமொன்று நிகழ்ந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.]

* * * *

### பிரிட்டிஷ் பாதிரிகள் வெளியேற்றம்

சென்ற ஈஸ்டர் பண்டிகையின்போது அபிஸீனியாவிலிருந்து ஆறு பிரிட்டிஷ் மதப் பிரசாரகர்கள் வெளியேற்றப்பட்டனர். இதுபற்றிப் பிரிட்டிஷ் சர்க்கார் ரோமிலுள்ள தங்கள் ஸ்தானீகர் மூலம் இத்தாலிய சர்க்காருக்குத் தங்களது பலமான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர். அந்தப் பாதிரிகள் மார்ச்சு மாதம் 19-ந் தேதி வெளியேற்றப்படுவரென அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. நோட்டீஸ் கால கெடுவைச் சிறிது நீடிக்குமாறு அவர்கள் மார்ஷல் கிரேஸியானியைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், அவர் அதற்கு இணங்க மறுத்துவிட்டார். கிறிஸ்தவ மதத்தில் புதிதாகச் சேர்ந்த சில எதியோபியர்களுடன் சென்று கொண்டிருந்த பாதிரிகளை இத்தாலியர் சுட்டுத்தள்ளியதாகவும் மேலும் பல்வேறு நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் நாற்பது அல்லது ஐம்பது மாணவர்கள் வெளியேற்றப்பட்டனரென்றும் தெரியவருகிறது.

* * * *

### மாஜி மன்னரைப் பின்பற்றும் இளவரசர்

ருமேனிய மன்னர் சபைக் கூட்டம் சென்ற 10-ந்தேதி நடைபெற்று அதனிறுதியில் பட்டத்திற்குரிய வார்ஸான நிகோலஸ் இளவரசர் சிம்மாசனமேற்கத் தமக்குள்ள உரிமையையும் மற்ற விசேஷ பாத்தியதைகளையும் துறந்துவிட்டதாக ஒரு அறிக்கை விடுவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு ராஜீயக்கட்சித் தலைவர்களும வந்திருந்தனர். மன்னர் கரோல் தலைமைவகித்தார்.

நிகோலஸ் இளவரசர் சென்ற1931-ம் ஆண்டில் மேடம் ஸவீனு என்ற கட்டழகிக்குப் பட்டமகிஷிக்குள்ள அந்தஸ்தளிக்காமல் அவளை ரகசியமாக விவாகம் செய்துகொண்டார். அவள் ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்டிலுள்ள ரஷ்ய ஸ்தானீகர் காரியாலயப் பிரதிநிதி யொருவரது மனைவியாயிருந்தவள்.

இவ்விவாகத்தைத் தாம் ஒருபொழுதும் கைவிட முடியாதென நிகோலஸ் இளவரசர் மன்னர் சபைக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அச்சபை இதுபற்றி ஆலோசித்ததன் பேரில் அவரது உரிமைகளனைத்தையும் பறிமுதல் செய்துவிட்டது. நிகோலஸ் இளவரசர் இப்பொழுது ஒரு சாதாரணப் பிரஜையைப் போல் இத்தேசத்தினின்றும் வெளியேறுவாரெனத் தெரிகிறது.

* * * *

### லிபியாவில் புதிய அரசியல்

இது சம்பந்தமாக ஸினர் முஸோலினி பின்வருமாறு அறிவித்திருக்கிறார்:—

லிபியாவில் ஒரு புதிய அரசியல் அமுலுக்குக் கொண்டுவரப்படும். அங்கு முன்னர் கலகம் செய்த அனைவருக்கும் மன்னிப்பு அளிக்கப்படுவதுடன் பறிமுதலான அவர்களுடைய நிலங்கள் திரும்பக் கொடுக்கப்படும். ஆப்பிரிக்கக் காலனிகளில் வீடுகள் கட்ட 240 லக்ஷம் லீர் கடன் கொடுக்கப்படும்.

அஸ்லாவில் இன்னும் நான்கு வருஷகாலத்திற்குள் 850 லக்ஷம் லீர் செலவில் ஒரு புதிய துறைமுகம் அமைக்கப்படும்.

* * * *

### ஈஸ்வர வருஷப் பஞ்சாங்கம்

ஸ்ரீமான் பி. துரைசாமி அய்யங்காராலும், அவர் குமாரன் ஸ்ரீனிவாஸவரதனாலும் கணிக்கப்பட்ட புது வருஷப் பஞ்சாங்கம் வரப்பெற்றோம். இதில் தேசாந்திர ஸம்ஸ்காரபதகமும் மற்றும் வழக்கமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

* * * *




வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.

பெரியடியூப் அணா 12; சிறிய டியூப் அணா
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10

வி. பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது.

Agents: Shivlal & Co., Bombay, 2

## புத்துயிருடன் ஊக்கம்



விம்டோ கார்டியல் புகழ் பெற்றிருப்பதற்குக்காரணம் இதுதான. முதலில் அது விசேஷ புத்துயிரூட்டும் ருசி மிகுந்த பானம்—தவிர விம்டோ புதிய ஆரோக்யம், புதிய ஊக்கம், புதிய ஜீவசக்தி இவற்றைத் தருகிறது! —விம்டோ, பானங்களில் மேலானது

VIMTO

கார்டியலுடன்

# நாட்டு நடப்பு—சித்திரக் கண்ணாடி



சென்னையில் நடைபெற்ற வருஷாந்திரக் கல்வி மகாநாட்டிற்கு மைசூர் கல்வியிலாகா அதிபர் ஸ்ரீமான் என். எஸ். சுப்பராவ் தலைமை வகித்தார்.





பரோடா சமஸ்தான திவான் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இங்கிலாந்து சென்றார். (வலது பக்கம்) மன்னர்பிரானுக்கு "ராஜான்ய" என்ற பட்டத்தையளிப்பதற்காக நேப்பாளத்திலிருந்து செல்லும் தூதுக் கோஷ்டியினர் கப்பலேறுமுன் பம்பாயில் ஸமுத்திரத்தை வழிபட்ட காட்சி.



பிலிப்பைன் தீவுகளின் சுல்தானின் மகுடாபிஷேகத்தின்போது எடுத்த படம்.



உங்கள்

குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கொடுங்கள்.

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. டோங்கரேயின் பாலாம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனா பஜார் ரோட்.




Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)

"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள். ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும்.
விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை



யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரம்மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணா 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை




உபயோகியுங்கள்.

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.





# நவ நாகரீகம்

## சினிமாக்கள்

(காசினி எழுதியது.)

* * * 'சினிமாக்கள் வெறும் அசையும் படங்களாக இருந்ததில் இருந்து, பேசும் படங்களாக மாறி இருக்கிறது எல்லாருக்கும் தெரிந்த சமாசாரம் தான. ஏன், எங்கள் ஊர் சுப்புப்பாட்டி கூட போன மாதம் அவள் பட்டணம் சென்றிருந்தபோது ஒரு பேசும் படத்தைப் பார்த்துவிட்டுவந்திருக்கிருள். 'அம்மாடீ :அந்தப் படம் பேசுவதைக் கேட்டால் நிஜ மனுஷியாள் பேசுவது போலேயே இருக்கு! அந்த வெள்ளைக்காரன சமர்த்து இருந்தாலும் ஜாஸ்திதான். என் பேரன் என்னை ஒரு டாக்கிக்குக் கூட்டிக்கொண்டு போயிருந்தான். 'பாட்டி, நீ ஒரு டாக்கி பார்க்காமல் ஊருக்குப் போகக்கூடாது. சினிமாவுக்குப் போவது நவநாகரீக மங்கைகள் செய்யும் முக்கியமான காரியங்களில் ஒன்னுச்சே? 'என் பாட்டி மட்டும் இதில் குறைவா என்ன?' என்று சொல்லி, என்னைக் கட்டாயப்படுத்திக் கூட்டிக்கொண்டு போனுன். "அதிலே என்னுட்டமா ஒத்தி, ஒரு பாட்டி; புடவையும், பேச்சும், சேஷிமாதிரியே இருந்தது; என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் சமர்த்துக்குப் போகிறதுதான்" என்று போகிறவாள், வருகிறவாள் எல்லாரிடமும், தான் சினிமா பார்த்த வைபவத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிருள்.

இதைக் கேட்ட எங்கள் பக்கத்தாத்து நாட்டுப்பெண், 'ஆமாம் பாட்டி; சினிமா முதல் தரம் பார்ப்பவர்களுக்கு ஒரு அதிசயமாகத்தான் தோன்றும். ஆனல், பேசும் படத்திற்கே நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்களே! நீங்கள் ஒரு தமிழ் டாக்கிக்குப் போயிருக்கிறீர்கள். இந்தியாவில் இன்னும் டெக்னிகலர் பில்ம்ஸ் எடுக்கவில்லை. இதைப் பார்த்தால் நீங்கள் என்ன சொல்லுவீர்களோ?' என்ருள்.

'அது என்னமோ டெக்னியும், டிக்னியும் எனக்குத் தெரியாது. இருந்தாலும் அந்த வெள்ளைக்காரன் சமர்த்து—' என்று பாட்டி மறுபடியும் தொடங்கவே, 'நான் கூட கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு டெக்னி கலர் படம் பார்த்தேன். இந்தியப் படங்களிலும் இப்படிக் காண்பிக்கிருர்களே?' என்று எங்கள் எதிர் வீட்டுப்பெண் குறுக்கிட்டாள்.

'ஆமாம்; நினைவில்லாமல் சொல்லிவிட்டேன். நாழிகை ஆகிறது; மாமியார் கோவிலுக்குப் போகவேண்டும் என்று சொன்னுர்;' என்று எங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் "விர்" என்று போய் விட்டாள். அவளுக்குத் தான் சொன்னது சரியில்லை என்று யாராவது ரூபித்து விட்டால் துளியும் பொறுக்காது. டெக்னி கலர் படங்கள் என்ருல் என்ன?' என்று நீ கேட்டிருக்கிருய்.

வர்ணங்கள் உள்ள படங்களுக்கே 'டெக்னி—கலர்' என்று கூறுகிருர்கள். சாதாரணமான மின்சார வெளிச்சத்திற்குப் பதிலான வர்ண வெளிச்சத்தை உபயோகிப்பதினுல், திரையில்விழும் படங்கள்



டேரா டூன் ஒலிபரப்பும் கூடத்தின் காட்சி.




## எனது வசீகர அழகு பெருகியது

.........நான் இந்த க்ரீமகளை உபயோகிக்க ஆரம்பித்த பிறகு

டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் க்ரீம்களால் உங்கள் வசீகரத்திற்கு ஏற்படும் நன்மையை நீங்கள் ஒரு தடவை அறிந்துவிட்டால் பிறகு வேறு எந்த க்ரீமும் உங்களுக்குத் திருப்தி தராது. டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் மேலான கோல்ட் க்ரீம் சருமத்தினுள் ஊடுருவிச் சென்று, நன்கு சுத்தி செய்து சருமத்திற்கு மிருதுத் தன்மையூட்டி, போஷாக்களிக்கிறது. இது மாதிரி வேறு எந்த க்ரீமும் செய்யாது. டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் மேலான வானிஷிங க்ரீம், வெப்பம், காற்று, மழை இவற்றினின்றும் துல்லிய சருமத்தைப் பாதுகாக்கிறது. தும்பு தூசி படாது காக்கும். தினமும் டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் க்ரீம்களை உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்.




Daggett & Ramsdell

D 56



தென்னிந்திய ரெயில்வே ஆடிட் இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீமான் எ.எஸ். கிருஷ்ணசாமியின் குமாரி லக்ஷ்மிக்கும், சர்க்கார் போதனு பாடசாலை மாஜி ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் குமாரன் ராமானுஜத்திற்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

வர்ணபேதங்களுடன் தெரியும்படிச் செய்கிருர்கள் என்று கூறுகிருர்கள். இதில் செடிகள் பச்சையாகவும், பூக்கள் இனத்தின் நிறங்களுக்கு ஏற்ற வர்ணங்கள் உடையதாகவும், உடைகள், அந்த அந்த நிறங்களுக்கு ஏற்பவும் தோன்றும். வேறு ஒரு பிரமாதமும் இல்லை. சுப்புப்பாட்டி இவ்விதப் படத்தைப் பார்த்திருந்தால் அதிசயத்தில் ஒருவேளை பிரமித்தே போயிருந்திருப்பாள். அவள் பட்டணம் வந்திருக்கும் விஷயத்தை எனக்கு ஏன் நீ தெரியப்படுத்தவில்லை? போய்ப் பார்த்து, உங்கள் ஊர் யோகக்ஷேமத்தை விசாரித்திருப்பேனே? ராமதாஸில் கூடத்தான் வர்ணம் போட்டுக் காண்பித்தார்கள். ஆனல் ஒரு ஸீனெல்லாம், மரம், செடி, கொடி, மனிதர்கள், உடை எல்லாம் ஒரே வர்ணமாக இருந்தது. இதை எப்படி 'டெக்னி—கலர்' என்று கூறுவது? ஒரு விஷயத்தில் உங்கள் பக்கத்தாத்து மாட்டுப் பெண் சொன்னது சரி என்றே எண்ணுகிறேன். இந்தியப் படங்களில் இன்னும் இவ்வித வர்ண வித்தியாசங்களைக் காட்டவில்லை என்றே தோன்றுகிறது.

* * * *

### மணி மாலை

'இந்த மணி மாலைகளை நாம் மணிகள் வாங்கித் தட்டானிடம் கொடுத்துக் கட்ட முடியாதோ?' என்று நீ கேட்டிருக்கிறய். ஏன், பேஷாகச் செய்யலாமே. போனமாதம் லேடி சின்னையாவின் மகள் மைசூரில் சொல்லி ஒரு புடவை போடச் சொல்லி இருந்தாள். மைசூர் பட்டு, ஒருவிதக் கறுநீல வர்ணமாக இருந்தது. ஆறு கஜம் புடவை; விலை முப்பத்தாறு ரூபாய்கள் ஆச்சுது. கரை, மிகவும் அழகாக இருந்தது. இதற்கு இசைந்தால்போல் [illegible] சின்னையாவின் மகள் ஒரு மணிமாலை செய்துகொண்டாள். வாசலில் ஒரு வியாபாரி இந்தத் தினுசு மணிகளை விலைக்குக் கொண்டு வந்திருந்தான். இதில் இவள் ஆசைப்பட்ட மாதிரியிலேயே கறுநீல வர்ண மணிகள் இருந்தது. இந்த மணிகள் அதிக அகலம் இல்லாமல், கோதுமை மணிகள் மாதிரியில் இருப்பதில், அதை விடச் சற்று அகல நீளமாக, மிகவும் அழகாக இருந்தது. இதில் அவளுடைய மன்னிகூடத் தனக்கும் ஒரு மாலை வேண்டும் என்று சொல்லவே, வியாபாரியிடம் இருந்த மொத்த மணிகளையும் இவர்கள் வாங்கிக்கொண்டார்கள். இரண்டு மாலைகளுக்கு, ஒரு மாலைக்கு முப்பத்தி ஆறு மணிகள் என்ற கணக்கில் எழுபத்தி இரண்டு மணிகளும், கட்டும் பொழுது உடைந்தால் பர்த்தி வைப்பதற்காக ஐந்து மணிகளும், மொத்தம் எழுபத்தி எழு மணிகள் வாங்கினள். விலை, ஒரு ரூபாயும், பதினைன்று அணுக்களும் ஆச்சுது. அவர்களுக்குத் தெரிந்த தட்டான்தான் மாலையைக் கட்டிக் கொடுத்தான். ஆறு மணிகள் சேதமாகிவிட்டதினுல், ஒரு மாலையில் முப்பத்தி ஐந்து மணிகளும், மற்றொன்றில் முப்பத்தி ஆறும் வைத்துக் கட்டி இருந்தான். இரண்டு மாலைகள் கட்ட மூனரைப் பவுன் தங்கத்திற்குச் சற்று மேலேயே ஆச்சுது என்று லேடி சின்னையா சொன்னுள். ஒரு மாலை கட்டுவதற்குக் கூலி ஐந்து ரூபாய்கள் ஆச்சுது என்றும் சொன்னுள். இந்த மாலைகள் பார்வைக்கு மிகவும் நாசூக்காகவும். அழகாகவும் இருக்கிறது. லேடி சின்னையாவின் மாட்டுப் பெண் மாலையில் 'பிளட்—ஸ்டோன்' வைத்த ஒரு தொங்கட்டத்தைக் கோத்திருக்கிருள். எவ்வளவோ நேர்த்தியாக இருக்கிறது. இதே வியாபாரி அடுத்த மாதம் பலவர்ணங்களில் இதே வாட்டத்தில் மணிகள் கொண்டு வருவதாகச் சொல்லிப்போயிருக்கிருன். உனக்கு வேண்டிய நிறத்தை எழுது. நாற்பத்தி ஐந்து மணிகள் போல் வாங்கி அனுப்புகிறேன். இவர்கள் கட்டிக் கொண்டிருக்கும் மாலை சற்றே குட்டையாகத் தோன்றுகிறது. இன்னும் இரண்டு மணிகள் கூட இருந்தால்தான் உனக்குப் பிடிக்கும் என்று எண்ணுகிறேன். எதற்கும் உடைந்தது போகக் கூட இரண்டு மணி இருப்பது நல்லதுதானே? மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *




வழுக்கை, செம்பட்டை இள நரைகளைத் தீர்ப்பது

கேசவர்த்தினி

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி

விலை அணு 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை

மயிலாப்பூர், சென்னை.

ரஞ்சிதமான துணிமணிகள்

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்கு உகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்.

என். வி. பாலுசாமி அய்யர் & ஸன்,

மூலைக் கடை

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

வஜ்ர சரீரத்தைத் தருவது

நர்வினஸ்

(தங்கம் சேர்ந்தது)

NERVINUS

(WITH GOLD)

Your only Chance.



The Best Tonic of the Day

சிறந்த பலவிருத்தி டானிக்

ஆண்மையும், ஊக்கமும் பெற இதுவே சிறந்த சாதனம்

பிரபல டாக்டர்கள் ஒருமிக்கப் புகழ்கிருர்கள்.

வெளிப்புறத்தில் கஸ்தூரி லினமேண்டுடன் உபயோகித்தால் நீங்கள் புருஷ சக்தி ததும்பி நிற்பீர்கள். நர்வினஸ்-1 மாத உபயோகத்திற்கு புட்டி 1-க்கு ரு. 5; லினமேண்ட்-ரு. 2—8; இரண்டும் சேர்ந்து ரு. 7. வி. பி. சார்ஜ் தனி. ஆர்டர்களும் கடிதங்களும் ஆங்கிலத்திலேயே.

BEHAR CHEMICAL WORKS, BHAGALPUR

ஸ்டாக்கிஸ்டுகள்:

அப்பா & கம்பெனி & தாதா & கம்பெனி மதராஸ்




போலிகளைக் கண்டு உஷார் !!!

அமிர்தாஞ்சனம்

சகலவலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா,



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ சரஸ்வதி சங்கீத வித்பாசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டமும் பரிசளிப்புவிழாவும் ஸ்ரீமான் என். எஸ். வரதாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது.

நமது சிறுகதை

# வாழ்க்கையின் மாறுதல்

—::—

"தேவிகா"

உயர்ந்தோங்கி, அழகு பொருந்திய மலை நாடாகிய குடகு மலையில், ஒரு குன்றின் சமீபத்தில் ஒரு சிறு தோட்டமும், அதன் நடுவில் ஒரு அழகிய பங்களாவும் காணப்பட்டது. அக்கட்டிடத்தையும் தோட்டத்தையும் கண்டால் தற்சமயம் அதன் சொந்தக்காரர்கள் கஷ்ட தசையை அடைந்திருப்பது நன்கு விளங்கிற்று.

ஏனெனில், அக்கட்டிடம் சுண்ணும்பு பூசப்படாமலும், தோட்டம் முழுவதும் குப்பை கூளங்கள் நிறைந்தும், செடிகளெல்லாம் கத்தரிக்கப்படாமலும், மோட்டார் நிறுத்தும் கட்டிடம் காலியாயும் விளங்கிற்று.

அப்பங்களாவின் தாழ்வாரத்தில் ஓர் அழகிய மடந்தை வெகு வருத்தமாய் கையில் ஒரு கடிதத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவளைத் தவிர அங்கு வேறு ஒருவரும் இருப்பதாய்த் தோன்றவில்லை.

அம்மடந்தையைச் சுற்றிலும் ஆகாயத்தையளாவிய மலையும் செங்குத்தான பள்ளத்தாக்குகளும் பசும்புற்றரைகளும் இயற்கை வனப்பையூட்டிய வண்ணம் நின்றன.

மேலே கூறிய வனிதைக்கு வயது பதினெட்டு என்று கூறலாம். ரோஜா மலரையொத்த அவளது சரீரத்தில் முத்திஞலாகிய ஒரு லோலக்கும் ஒரு மாலையும் அவளது எழிலைப் பன்மடங்கு எடுத்துக் காட்டிற்று. அவளது அழகிய கைகளில் ஒரேவளையல் அணிந்திருந்தாள். அவளது காலஞ்சென்ற தாயின் ஞாபகார்த்தமாய் ஓர் பச்சை மோதிரம் அவளது விரல்களை அழகுபடுத்திக்கொண்டிருந்தது. மெல்லிய கதர்ப் புடவையும் கதர் ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். இவளுடைய பெயர் ஸரோஜினி. இவ்வனிதையின் அலங்காரங்களினுல் இவள் பம்பாய் வாசியான மராத்தியர் ஜாதியைச் சேர்ந்தவள் என்று கூருமலே விளங்கும். தன் சொந்த தேசமாகிய பம்பாயின் அழகையும் அதன் சோபையையும் இந்த மலைப் பிரதேசத்தின் நிசப்தத்தையும் ஒத்திட்டுப் பார்த்து தன் வாழ்க்கையின் மாறுதலை எண்ணி, மனக்கசப்புடன் காலத்தைக் கழித்து வந்தாள்.

அப்போது சங்கர் மெதுவாய் வந்து உட்கார்ந்தான். அவன் சோர்வைக் கண்ட ஸரோஜினி தேயிலைப் பானம் செய்து வந்து அவனுக்குக் கொடுத்தாள். அவள் கொடுத்த தேத்தண்ணீரைக் குடித்துவிட்டு மறுபடி வெளியே புறப்படலானுன்.

இதைக் கண்ட ஸரோஜனி சற்று சலிப்புடன், "இனிமேல் இந்த நிசப்தத்தையும் இந்தத் தனிமையையும், என்னுல் சகிக்கவே முடியாது" என்று கண்களில் கண்ணீர் ததும்பக் கூறினுள்.

ஒரு நாளும் வருத்தமும் கோபமும் கொள்ளாத ஸரோஜினி இன்று இப்படிப்பேசியதைக் கண்ட சங்கர் திடுக்கிட்டு, "என்ன ஸரோஜீ, ஏன் இப்படி வருந்துகிருய்? சென்ற வருஷம் நாம் என்ன நிலைமையில் இருந்தோம் என்று உனக்கு நினைவு இல்லையா! ஏதோ கடவுள் சற்று நம்மை வேடிக்கை பார்க்கிருர். காலம் இப்படியே இருந்துவிடுமா? சற்றுப் பொறுமையாய் இரு; நல்லகாலம் வரும். உன் கஷ்டம் எனக்கு மாத்திரம் தெரியவில்லையா? உன் புஷ்பம்போன்ற கைகளால் வீட்டுவேலைகளைச் செய்யும்போது என் ஹிருதயம் வெடித்துவிடும்போல் இருக்கிறது" என்று கூறிக் கண்களில் நீரைச் சொரிந்தான்.

உடனே ஸரோஜினி தைர்யம் அடைந்து தன் கையிலிருந்த கடிதத்தை அவனிடம் கொடுத்தாள். அவன் அதை ஆவலுடன் படிக்கலானுன்.

அதைப்படித்த சங்கர் சற்று பீதியடைந்து "இதற்கு என்ன பதில் எழுதப் போகிருய்?" என்றுன்.

ஸரோஜினி:—நாம் ஏன் இங்கு இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்? என்னுடைய காலேஜ் உபாத்தியாயினி கமலா தேவி மாணவிகளைக் கொண்டு ஓர் சங்கம் ஏற்படுத்தியிருப்பதாயும் அதில் என்னைக் காரியதரிசியாய் நியமிப்பதாயும் மாதம் ஒன்றுக்கு "இரு நூறு ரூபாய் சம்பளம் தருவதாயும் எழுதியிருக்கிருள். ஏன் போகக்கூடாது?" என்று குதூகலத்துடன் சொன்னுள்.

இதைக் கேட்ட சங்கர் இடியுண்ட நாகம்போல் நடுங்கி, "என்ன? என்னை விட்டா போகிருய்" என்றுன்.

ஸரோஜினி:— இல்லை, இருவரும்தான் போகவேண்டும்?

சங்கர்:— சே, சே! மனைவி சம்பாத்தியத்தில் கணவன் காலங்கழிப்பதா? ஒருக்காலும் முடியாது. ஸரோஜினி, என் கண்ணே! கொஞ்சகாலம் உன்னுல் பொறுக்க முடியாதா? அதுவும் எனக்காக இத்தடவை மாத்திரம் அப்புகையிலைகள் சரியாய் விளைந்து வியாபாரம் ஆகிவிட்டால் நாம் எவ்வளவு சுகமாய் இருக்கலாம். சற்றுப் பொறு பழயபடி கார் முதலிய


டாக்டர் ஜம்மி வெங்கடாரமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

வற்றை வைத்துக்கொண்டு அரசனும் அரசியும்போல் இருக்கலாம். பெருத்த மழையும், கருக்கலுமுள்ள வானத்திலும், ஓர் மின்னல் மின்னவில்லையா? அப்படிப்போல் இரண்டு வருஷமாய் நஷ்டம் ஏற்பட்டாலும் இத்தடவையாவது லாபம் வராதா! ஆகையால் உன் எண்ணத்தை மறந்துவிடு'' என்று கூறி பழயபடி வெளியே போய்விட்டான்.

தன் மனக்கோட்டை நிமிஷத்தில் இடிந்து பாழானதை நினைத்து ஸரோஜினி பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் உதித்த வண்ணம் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். புருஷர்கள் எவ்வளவு ஏழ்மையை யடைந்தாலும் தைர்யத்தையும் கர்வத்தையும் விடுவதில்லை என்று வாய் விட்டுக் கூறினாள். முடிவில் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, வேலைகளை முடித்துவிட்டு மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் பார்க்க வெறுப்புற்று உள்ளேயே படுத்துவிட்டாள்.

இரவு எட்டு மணிக்கு சங்கர் வழக்கப்படி காலையிலிருந்து கூலிகளை வைத்துக்கொண்டு வேலைகள் வாங்கி சோர்ந்து வந்து களைப்புடன் “ஸரோஜினி! உன் பிரயாணம் எப்படியிருக்கிறது'' என்றான். அதற்கு அவள் சலிப்புடன் “இச்சன்மத்தில் நான் சௌக்கியமாய் இருக்கப் போவதில்லை'' என்றான்.

சங்கர் புன்னகையுடன், “அப்படிச் சொல்லக் கூடாது. இன்று கூட என் ஸரோஜினிக்காக இந்தக் கைகள் ஐந்நூறு செடிகள் நட்டு இதன் மூலம் வரும் பணத்தால் உன்னைச் சந்தோஷிக்கச் செய்ய வேண்டுமென்று கடவுளை வேண்டியிருக்கிறது.'' என்றான். இருவரும் இராப் போஜனம் செய்து படுத்தனர். ஆனால் இருவருக்கும் தூக்கமேயில்லை.

சங்கருக்கு இவ்வருஷமாவது நல்ல லாபம் கிடைத்து தன் மனைவி சந்துஷ்டியடையக் கடவுள் தயை செய்ய வேண்டுமென்ற எண்ணம்.

இவ்வருஷமும் நஷ்டம் அடைந்து இங்கே இருக்க வழியின்றி பம்பாய் சென்று தன் வேலையைத் தான் ஒப்புக்கொள்ளும்படி கடவுள் தயை செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஸரோஜினிக்கு.

மாறுபாடான எண்ணங்களுடன், இருவரும் இரவைக் கழித்து மறுநாள் அவரவர்கள் வேலைகளில் அவரவர்கள் ஈடுபட்டனர்.

இப்படியாக ஒருவாரம் எவ்வித மாறுபாடுகளும் இல்லாமல் கழிந்தது. சங்கர் மனம் மாறுமென்று ஸரோஜினி எதிர்பார்த்ததெல்லாம் வீணாயிற்று.

கடைசியில் வெகுநேரம் யோஜித்து ஓர் முடிவிற்கு வந்தவள்போல சந்தோஷத்துடனும் முகமலர்ச்சியுடனும் அன்று வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். சங்கரும் காலை ஆகாரம் அருந்தி மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு எஸ்டேட்டுக்குச் சென்றான்.

உடனே அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு பூனைபோல் அடிமேல் அடிவைத்து ஸரோஜினி வீட்டைவிட்டு அரை மைல் தூரம் அந்த மலைப் பிரதேசத்தில் வெகு விரைவாய் ஓர் இடத்தை நோக்கிச் சென்றாள். முடிவில் ஓர் குடிசையின் வாசலில் நின்று ‘வீர நாயகா!’ என்று இரு முறை கூப்பிட்டாள்.

வீரநாயகன், சங்கர் எஸ்டேட்டின் மேஸ்திரி. அவன் கீழ் சமயத்திற்குத் தக்கபடி ஐம்பது முதல் முன்னூறு ஆள்கள் வரையில் வேலை செய்வது வழக்கம். தான் எதிர்பாராதவிதம் எஜமான்மனைவி தன் வீட்டுக்கு வந்ததனால் திடுக்கட்டு “அம்மா! என்ன வேண்டும். தாங்கள் ஏன் இங்கு வரவேண்டும்'' என்றான்.

ஸரோஜினி:—வீரநாயகா! நான் இப்போது ஓர் முக்கியமான விஷயமாய் வந்திருக்கிறேன். இரண்டு வருஷமாய் நமக்கு நஷ்டத்தின் மேல் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த வருஷமும் எப்படியாகுமோ? உன் எஜமானர் இதற்கு முன்பு எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிட்டு வீட்டில் உல்லாச புருஷராய், சந்தோஷமாய், சுகஜீவியாகக் காலங்கழித்து வந்தார். அப்படியிருந்தவர், பணத்தின் கொடுமையால் தானே ஓர் கூலியாளைப் போல் காலையிலிருந்து மாலை வரையில் வேலை செய்து உடம்பை ரொம்பக் கெடுத்துக்கொண்டுவிட்டார். இப்படியே இன்னும் கொஞ்ச காலம் இருந்தால் கட்டாயம் அவர் உயிருக்கே ஆபத்து வருவது நிச்சயம். ஆகையால் தயவுசெய்து, நான் உத்தேசித்திருக்கும் வேலைக்கு நீ உதவிசெய்யவேண்டும். இந்தா,

என்று தன் கைவிரல்களை அழகு படுத்திக்கொண்டிருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கழற்றி வீரநாயகனிடம் கொடுத்து, “இதை இப்பொழுதே விற்று இரவு எஜமானர், வீட்டிற்கு வந்தபின் சில கூலிகளை வைத்துக்கொண்டு நம் எஸ்டேட்டிற்குப் பக்கத்தில் வரும் கால்வாய் நீரை யெல்லாம் நம் தோட்டத்திற்குப் பாய்ச்சிவிடு. ஒன்றும்யோஜிக்காதே! அந்தத் தண்ணீரில் நம் எஸ்டேட்கெட்டுஅழிந்துபோகும். அதன் பிறகுதான் உன் எஜமானர் இந்த ஆசையை விடுவார். இல்லையேல் இந்த மலைப் பிரதேசத்தைவிட மனம் வராது. அவரை அழைத்துக்கொண்டு போய் பம்பாயில் வைத்தியம் செய்யப் போகிறேன். நீ இந்த உதவியை எனக்குச் செய்தால் இரு உயிரை மீட்ட புண்யம் உனக்கு உண்டாகும். பிறகு உன் இஷ்டம்'' என்று சட்டென்று அவ்விடத்தை விட்டகன்றாள்.

வீர நாயகன் சற்று சிந்தித்து முடிவில் எஜமானி கட்டளையை நிறைவேற்றுவதுஎன்று தீர்மானித்து மோதிரத்தை விற்று அதனால் கிடைத்த ஐம்பது ரூபாயைப் பத்திரப்படுத்திக்கொண்டு தன் வேலைக்குச் சென்று கவனிக்கலானான்.

ஸரோஜினி வீட்டிற்கு வந்து தன் எண்ணப்படி எல்லாம் சரிவர நடந்துவிட்டால் இன்னம் இரண்டு நாளில் பம்பாய் புறப்படும்படி இருக்கும் என்று பலவாறு மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தாள். தினம் இரவு ஆறு மணிக்கு வரும் சங்கர் இன்று இரவு எட்டாகியும் வரவில்லை. ஸரோஜினிக்கு மனம் பதற ஆரம்பித்தது. ஒருக்கால் என் சதியாலோசனை என் கணவருக்குத் தெரிந்துவிட்டதோ என்று வருந்திய வண்ணம் வீதியைஎட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

இதற்குள்ளாக சிறு மழையும் ஆரம்பமாயிற்று. பலவிதமான மனோ வேதனைகளினால் தாக்கப்பட்டு மெய்மறந்து சங்கரனை எதிர்பார்த்து பீதியுடன் இருக்கும் சமயத்தில் சங்கர் மெய் சோர்ந்து வாடிய முகத்துடன் தலைவிரிகோலமாய் உடையெல்லாம் மழைநீர் சொட்ட “அழிந்தேன், பூர்ணமாய் அழிந்தேன். கண்ணே! சரோஜினி! என் ஆசையெல்லாம் நாசமாயிற்று'' என்று தலையில் அறைந்துகொண்டு கட்டிலில் சாய்ந்தான்.

விஷயம் ஒன்றும் புரியாமல் “நாதா என்ன சமாசாரம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! தயவுசெய்து விளங்கச் சொல்லுங்கள்''? என்றாள் ஸரோஜினி.

“ஸரோஜி! இவ்வருஷம் செடிகள், பூச்சிமுதலானவை இல்லாமல் வெகு சுத்தமாய் நன்றாய் வளர்ந்து வருவதை யெண்ணி, நேற்றுக்கூட மகிழ்ச்சி யடைந்தேன். ஆனால் திடீரென்று இன்று பெருத்த மழையுண்டாகி நம் எஸ்டேட் பூராவும் நீர் நிறைந்துவிட்டது. இனி செடிகள் அழுகுவது நிச்சயம். இனி நான் அழிந்தேன்'' என்று கூறி படுக்கையில் சாய்ந்தான். இதைக் கேட்டு, சற்று நேரம் சிந்தித்த ஸரோஜினி, ஓர் வீர பத்னி போல் அந்நள்ளிரவில் தங்கள் எஸ்டேட்டை நோக்கி ஓடினாள். அப்போதுதான் வீரநாயகன் தன் யஜமானியின் உத்திரவுப்படி முப்பது ஆள்களுடன் கால்வாய் நீரை வெட்டிவிடத் தயாராய் வந்திருந்தான்.

அவனைக் கண்ட ஸரோஜினி வீரநாயகா நில். நாமொன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கின்றது. நான் இந்த


அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ரூ 0—14—0தான்

(தபால்செலவு தனி)



டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும். ½ அணா ஸ்டாம்பு அனுப்பி மாதிரி பெறவும்.



உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும், காமினியா ஸ்னோவின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 12 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக ½ அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பில் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co., BOMBAY 2

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

எஸ்டேட் அழிந்தால் என் நாதர் பிழைப்பார் என்று எண்ணினேன். ஆனால் இப்போது இந்த எஸ்டேட் அழிந்தால் அவரும், அத்துடன் அழிவது நிச்சயம் என்று தெரிகிறது. ஆகையால் சீக்கிரம் இவ்வாட்களைக் கொண்டு இதில் நிறைந்திருக்கும் நீரையெல்லாம் அப்புறப்படுத்து சீக்கிரம்'' என்று கூறினாள்.

உடனே ஆட்களும் மேஸ்திரியும், வீராவேசத்துடன், நீரை வெளிப்படுத்தினர். மூன்று மணிநேரத்தில், சொட்டுஜலமும் இல்லாமல். செய்துவிட்டனர். இவர்களுக்குச் சகாயம் மின்னலின் ஒளியே!

இதையெல்லாம் நேரில் நின்று பார்த்துவிட்டு யுத்தத்திற்குச் சென்று, ஜெயித்து ஜெயக்கொடியுடன் தாய் தந்தையரைக் காணவரும் இளவரசிபோல் ஓடோடியும் வந்த ஸரோஜினி, ''நாதா! இனி கவலைப்படவேண்டாம். ரொட்டியும் பாலும் வைத்திருக்கிறேன். சாப்பிட்டுவிட்டு நம் எஸ்டேட்டைப் பார்த்து வரலாம் வாருங்கள்'' என்றாள்.

சோர்ந்து கிடந்த சங்கர், ''இனிமேல் பார்த்து என்ன செய்வது? அப்போதே ஏதாவது முயற்சி செய்திருந்தால் நலம்'' என்றான் வாடிய முகத்துடன்.

சரோஜினி அவனைப் பலவந்தம் செய்து ஆகாரம் அருந்தச் செய்து பலவந்தத்தின்மேல் எஸ்டேட்டிற்கும் அழைத்துச் சென்றாள்.

அதைக்கண்ட சங்கர் அப்படியே ஸ்தம்பித்து, ''ஆ! கடவுளே! இவ்வுபகாரம் யார் செய்தார்கள்! நான் பார்த்த பொழுது நீர் நிறைந்த என் எஸ்டேட் இப்போது நீரையெல்லாம் அப்புறப்படுத்தி இனி எப்பேர்ப்பட்ட மழை பெய்தாலும் நீர் நிறையாதபடி அணையும் போடப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் இக்குடகு நாட்டிலேயே நான்தான் பெருத்த லாபம் அடையப் போகிறவன்'' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

சங்கருடைய ஆனந்தத்தைக் கண்ட ஸரோஜினி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து, தானே அதற்கு அணை போட ஏற்பாடு செய்ததாய்ச் சொன்னாள். இதைக்கேட்ட சங்கர் பிரமித்து ''என்ன! நீயா செய்தாய்? ஆனால் இன்று முதல் இந்த எஸ்டேட்டிற்கு நீயே எஜமானி'' என்று கூறி, அவளை ஆனந்தத்துடன் ஆலிங்கனம்செய்துகொண்டார்

அந்த வருஷம் குடகு நாட்டிலேயே பெருத்த லாபம் அடைந்தது சங்கர்தான் என்று கூற வேண்டியதே அனாவசியம்.

மறு வருஷம் அதே வீட்டில் பல அபிவிருத்திகள் காணப்பட்டன. அச்சிறு பங்களா பெரிதாக மாறியது. தோட்டம் முழுவதும் புஷ்பச் செடிகளாலும் பழ மரங்களாலும் நிறைந்து சுத்தமாய் விளங்கியது. ஓர் அழகியமோட்டாரும் வந்து ஷெட்டில் நின்றது. பல வேலையாட்களும் சுறுசுறுப்புடன் வேலைகள் செய்த வண்ணம் இருந்தனர்.

ஓர் இளம் தம்பதிகள் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்த வண்ணம் ஒரு ஆண் குழந்தையை வைத்துக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தனர். அவர்களே சங்கரும் ஸரோஜினியும் அவர்கள் புத்திரன் அமர்நாத்தும்தான்.

சங்கர் ஸரோஜினியை நோக்கி விளையாட்டாக ''ஸரோஜினி! நீ எப்போது காரியதரிசி வேலைக்குப் போக உத்தேசம்?'' என்றான்.

ஸரோஜினி, ''நான் என் கணவரிடத்திலேயே காரியதரிசி வேலை ஒப்புக்கொண்டுவிட்டேன்'' என்றாள்.

இருவரும் கலகலவென்று நகைத்தனர். அவர்கள் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.


# அனைவருக்கும்
# நிஜ ஆரோக்கியம்

பிரபல வைத்தியரான டாக்டர் ஹோரி ராம்ஸிங் சாண்ட்லா என்பவர் சொல்வதைக் கேளுங்கள்.

''ஸனடோஜன் மிகவும் சிலாக்கியமானது என்பது என் அபிப்ராயம்; சிற்றின்ப பலவீனத்திற்கும், நரம்புச் சோர்வுக்கும், இரத்த சோகை, மலேரியா, சீதபேதி இவற்றினால் கஷ்டப்பட்டுப் பலவீன மடைந்தவர்களுக்கும் சிறந்தது.''




நீங்கள் நிஜ ஆரோக்கியத்துடனும், தேக வலுவுடனுமிருக்க வேண்டுமானால் ஸனடோஜன் சாப்பிட்டு பலவீனத்தை ஒழிக்கவேண்டும்; ஸனடோஜன்தான் சிறந்த வலுவூட்டும் ஆகாரம்.

ஸனடோஜன் நோயாளிகளின் பலவீனத்தை ஒழித்து வயோதிகத்தைக் கண்டு அஞ்சுபவர்களுக்குப் புதிய ஆண்மைத்தனத்தையும் தருகிறது என்று உலகெங்குமுள்ள பிரசித்தி வாய்ந்த வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள்.

இன்றே ஸனடோஜன் சாப்பிட ஆரம்பியுங்கள். விரைவில் நீங்கள் மீண்டும் திட ஆரோக்கியமும் வாலிபத்தன்மையும் அடைவீர்கள்.

# SANATOGEN

அசல் டானிக் ஆகாரம்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ஸனடோஜன் கைபடாமல் தயாரித்து, பாக் செய்யப்படுவது; மத ஆட்சேபகரமான சரக்கெதுவும் இதிலில்லை.




# மரியாதைராமன் கதை

## கடன் வாங்கி மறுத்த கதை



# கரும்பூதம்

அல்லது

## கள்வனைக் காதலித்த காரிகை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டி விண்ணுலகப்ராப்தியடைந்த காலத்தில் கமலத்திற்கு நான்கு வயது தானிருக்கும். ஹிமாவதியோ ஒரு வயதுக் கைக்குழந்தையாகஇருந்தாள். அவர்களைப் பராமரிப்பதன் பொருட்டு மறுமணம் செய்துகொள்ளும்படி பிரபுவைப்பலர் தூண்டினார்கள். ஆனால், கற்பரசி வேதவல்லியின் ஸ்தானத்திற்கு மற்றொருவளை வரிக்கப் பிரபுவின்மனம் இடந்தரவில்லை. தவிர அவர் சிற்றின்பப் பிரியருமல்ல. ஆகையால் ஏழ்மையான நிலைமையிலிருந்த தமது மூத்த சகோதரியையும், அவளுடைய கணவரையும் கூட்டி வைத்துக்கொண்டு குழந்தைகளின் பராமரிப்பிற்கு ஏற்பாடு செய்தார். மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கங்காதரர் பாஸ்கரம் பிரபுவின் சகோதரி புதல்வர்தான்! அவரும், அவருடைய பெற்றோர்களும் பிரபுவைப்போல் நல்லொழுக்கமுடையவர்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கமலாவின் காதலனாகிய ஜயந்தன் விஜயபுரியிலிருந்து வடக்காகச் சுமார் பதினைந்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் ரமணீபுரத்தைச் சேர்ந்தவன். அறிவிற்கும் அடக்கத்திற்கும், ஆண்மைக்கும் அழகிற்கும் ரமணீபுரவாசிகள் அவனை ஓர் உதாரணமாக எடுத்துச் சொல்வது வழக்கம்.

நமது கதை ஆரம்பமாகும் பொழுது ஜயந்தனுக்குச் சுமார் இருபத்து ஏழு அல்லது இருபத்து எட்டு வயதிருக்கலாம். அவனுடைய பெற்றோர்களாகிய குணசீலம் பிரபுவும், குணவதிச் சீமாட்டியும் ஐம்பதாவது ஆண்டைக் கடந்துவிட்டவர்கள். நீண்டகாலம் வரையில் புத்திரபாக்கியத்தைப் பெறாது மனம்வருந்திக்கொண்டிருந்த அவர்களுக்குக்கடைசியாகத் தெய்வகடாக்ஷத்தினால் ஜயந்தன் பிறந்தான். ஒரே குமாரனாகிய ஜயந்தனை அவர்கள் எவ்வளவு தூரம் செல்வமாக வளர்த்திருப்பார்களென்பதைப் பற்றி இங்கு நாம் விரித்துரைக்கத் தேவையில்லை. அந்திகாலத்தை அணுகிக்கொண்டிருக்கும் பிரபு தம்பதிகள் ஜயந்தனுக்குச் சீக்கிரமாக ஒரு கல்யாணத்தைச் செய்து பார்க்கவேண்டுமென்று அவாவினர். ஆனால், ஜயந்தனோ மணம் செய்து கொள்வதில்மனமில்லாதவனாக இருந்தான். வாழ்க்கையைத் தனிமையாகவே கழித்துவிடவேண்டுமென்பது அவனுடைய விருப்பமாக இருந்தது. உலக துக்கங்களுக்கும், பாபச்செயல்களுக்கும் பெண்களே மூலகாரணமென்று ஜயந்தன் கருதிவந்தான். இந்த அபிப்பிராயம் பொதுவாகப் பெண்களிடத்திலெல்லாம் ஒருவகை



“என் குழந்தை மிகவும் துர்ப்பலமாகவும், பல் கோளாறுடனுமிருந்தது. அதற்கு நான் கல்ஸானா தான் கொடுத்தேன். அதனால் எடை அதிகரித்தது மன்னியில், பல் தொந்தரவும் ஒழிந்தது”

என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் J. C. S., S.,

கல்ஸானா

தாய்க்கும் குழந்தைக்கும்

ஆரோக்கியமும், வலுவும்

அளிக்கிறது

ஆரோக்கியமும், வலுவுமான குழந்தைகளே தகப்பனார்களின் இன்பம்; உங்கள் மனைவி கர்ப்பமாயிருக்கும் சமயத்தில் கல்ஸானா சாப்பிட்டால் மேற்படி இன்பம் உங்களுடையதே. கல்ஸானா தாய்க்கும், குழந்தைக்குமான உணவு. இது பலவீனத்தைப் போக்கி, தலைமயிரும், பற்களும் உதிர்வதைத் தடுத்து, தாயாருக்கு இளமையும், மகிழ்ச்சியும் தருகிறது.

குழந்தைகள் சம்பந்தப்பட்டமட்டில் கல்ஸானா அவர்களுக்கு வலுவு நிறைந்த எலும்புகளைக் கொடுத்து, பிரகாசமான பற்களை வழங்குகிறது. கடுமையான நோய்களில் விழாமல் தேகத்திற்கு விசேஷ பலத்தையளிக்கிறது. வலிக்கு கல்ஸானாவை விடச் சிறந்த நிவாரணி இல்லை.

தாமதிக்க வேண்டாம்! உங்களுக்கருகிலுள்ள வியாபாரியிடமிருந்து உடனே கல்ஸானா புட்டி ஒன்றை வாங்கிக்கொள்க. உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாகவிருக்கும்; மனைவி இளமையுடனும், அழகுடனும் விளங்குவாள்.

**Kalzana**

மேலான ஆரோக்கியததிற்கான உலோக உணவு.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.




ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.

BLACKLOCK & MAÇARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் “மான்மார்க்” செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

மூன்று பாகங்கள் விலை ரூ. 6.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

யான அருவருப்பையும் அச்சத்தையும் அவனுக்கு உண்டு பண்ணி வந்தது.

இப்படிப்பட்ட மனோபாவத்தையுடைய ஜயந்தனிடம் கமலாவைக் கண்ணுற்ற மறுவினாடி முதல் ஓர் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவன் முற்றிலும் புதிய மனிதனாகி விட்டான். கட்டழகி கமலாவின் எழிலுருவம் அவனைப் பூரணமாக வசியப்படுத்திவிட்டது. அவர்களிருவரும் சில மாதங்கள்வரையில் நெருங்கிப் பழகிவந்தார்கள். அந்த நட்பு நாளடைவில் பரஸ்பரக் காதலாகவும் மாறியது. இப்பொழுது அவர்கள் தங்களது காந்தர்வ விவாகத்தைப் பலர் முன்னிலையில் ஊர்ஜிதம் செய்து கொள்ளப் போகின்றார்கள். அவர்களுடைய திருமணம் நடைபெறப் போகும் பீஜப்பூர் கிராம மாளிகை குண சீலம் பிரபுவின் பரம்பரைச்சொத்து. இது அவருடைய குடும்பத்தார்களின் பத்துப் பதினைந்து தலைமுறைகளாக இருந்து வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

பாஸ்கரம் பிரபுவின் குடும்பத்தையும் குணசீலம் பிரபுவின் குடும்பத்தையும் பற்றிய பூர்வோத்திரங்களை இத்துடன் நிறுத்திக்கொண்டு நமது கதையை மேலே தொடர்வோம்!

* * * *

இரவு மணி பத்தடித்தது. மன்மத விலாச மாளிகையின் தோட்டப்புறமாகவுள்ள அறைகளிலொன்றில் பாஸ்கரம் பிரபுவும் இரகசியப் போலீஸ் இலாகாவின் பிரதமக் கமிஷனராகிய துளஸிதாஸும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஒரு கான்ஸ்டேபிள் உள் நுழைந்து போலீஸ் சம்பிரதாயப்படி "குட்மார்னிங், ஸார்!" என்றான்.

"வடிவேலா! என்ன சமாச்சாரம்? எல்லாக் காரியங்களையும் செய்து முடித்துவிட்டாயா?" என்றார் கமிஷனர் துளஸிதாஸ்.

"முடித்துவிட்டேன்! அபாய அறிவிப்பு மணியைத் தாழ்வாரத்தின் இடது புறமாகவுள்ள ஹாலில் வைத்திருக்கின்றேன்!" என்றான் கான்ஸ்டேபிள்

"சரி! நீயும் மற்றவர்களும் அதே ஹாலில் இருங்கள். மேலே செய்ய வேண்டியதைப் பற்றி நான் பிறகு வந்து தெரிவிக்கின்றேன்." என்று சொல்லிக் கான்ஸ்டேபிளை யனுப்பிவிட்டு பிரபுவை நோக்கிப் பின்வருமாறு கூறினார் துளஸிதாஸ்:—பிரபுவே இந்த மாளிகையினுள் கள்வர் நுழைவதானால், ஆறே ஆறு வழிகளாகத்தான் வந்தாக வேண்டும். அதாவது மாளிகையின் முன்புறக்கதவின் வழியாகவோ அல்லது பின்புறக் கதவின் வழியாகவோ நுழையலாம். இவ்விரண்டுமில்லாவிட்டால் தோட்டப்புறமாகவுள்ள நான்கு சாளரங்களிலொன்றின் வழியாக நுழையலாம். இந்த ஆறு வழிகளைத் தவிர வேறு எந்த மார்க்கமாகவும் கள்வர்கள் உள்ளே வரமுடியாது. இவைகளிலெல்லாம் மின்சாரக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் கள்வன் எந்த வழியாக நுழைந்தாலும் சரி; தாழ்வார ஹாலிலிருக்கும் அபாய அறிவிப்பு மணி கலகலவென்று ஒலிக்கும். இந்த ஏற்பாடுகளினிடையே எங்களுக்குத் தெரியாமல் எவனும் உள்ளே பிரவேசித்துக் களவாடிவிட முடியாது"

"சபாஷ்! உங்களுடன் எவ்வளவு கான்ஸ்டேபிள்களிருக்கின்றார்கள்?" என்று வினவினார் பிரபு.

"ஆறுபேர்களிருக்கின்றார்கள். அவர்களில் நால்வரைச் சாளரங்களின் பக்கத்திலும் இருவரை இருகதவுகளின் பக்கத்திலும் அமர்த்திவிட்டு நான் ஹாலில் இருக்கப் போகின்றேன். இந்த ஏற்பாடுகளெல்லாம் உங்களுக்குத் திருப்திகரமாக இருக்கின்றனவல்லவா?" என்று கேட்டார் கமிஷனர்.

"எனக்குத் திருப்தியையளிக்க வேண்டுமென்பது அவசியமில்லை; எப்படியோ பொழுது புலரும்வரையில் எனது பொருள்களைப் பாதுகாத்துக் கொடுத்தால் போதுமானது!" என்று பதிலளித்தார் பிரபு.

"கரும்பூதம் ஒருவனைத் தவிர வேறு எவராலும் மாளிகையினுள் நுழைந்து களவாட முடியாது! இதை உங்களுக்கு நான் உறுதியாகக் கூறுவேன்!" என்றார் துளஸிதாஸ்.

"கரும்பூதமா? அது யார்?

(தொடரும்)




வேர்க்கூர், கோடைக்கட்டி

இவற்றிற்கு உங்கள் சருமத்தின்மீது ஜாம்-பெக் தடவுங்கள்

வெயில் கொடுமையால் எவ்வளவோ பேர்கள் எவ்வளவோ விதமாகக் கஷ்டப்படுகிறார்கள். வேர்க்கூர், கோடைக்கட்டி முதலியவற்றின் உபத்திரவம் சகிக்கமுடியாதது. ஜாம்-பெக் மூலிகை மெழுகு எல்லாச் சருமக் கோளாறுகளையும் ஒழித்துவிடும். ஜாம்-பெக் சருமத்திற்குக் குளிர்ச்சியும், உல்லாசமும், மிருதுத்தன்மையும் அளிக்கிறது. எரிச்சலை அடக்குகிறது. சருமத்திற்கு ஆரோக்கியமூட்டுகிறது. தூக்கத்திலேயே குணப்படுத்திவிடும். நமைச்சல், சொறி, சிரங்கு, வண்ணாரப்புண், இவற்றிற்கும் ஜாம்-பெக் இணையற்றது. ஒரு பெட்டியைப் பரீட்சியுங்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும்.




ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்

Zam-Buk



ஐயோ சகிக்க முடியவில்லையே!



என்று கண்ணீர்விட்டுக் கதறிய ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் இன்று சூதக வியாதிகளை வென்று தம் குழந்தைகளோடு கொஞ்சுகின்றனர்.

ஸ்திரீ ஸோதரி

(மூலிகைச் சத்துக்களால் தயாரிக்கப்பட்டது.)

ஸ்திரீகளின் மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதகவாய்வு, சூதகக் கட்டு, சூதக வயிற்றுவலி, இடுப்புவலி, வாந்தி, மயக்கம், பேதி, தலைவலி, பசியின்மை, உடல் கனத்தல், ஜ்வரம் முதலிய எல்லா சூதகக் கோளாறுகளையும் கண்டித்து, மலட்டுப் பூச்சிகளைக்கொன்று கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து, சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது. அநேக டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். குணமில்லையேல் பணம் வாபஸ் செய்யப்படும். ஒரே முறையில் முழுகுணத்தையளிக்கும். விலை ரூ. 5. பாக்கிங் & தபால் செலவு வேறு. எல்லாவிடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

வேலன்ஸ் மெடிகல் ஹால்,

காரணீஸ்வரர் கோயில் தெரு, மயிலாப்பூர், மதராஸ்.



அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915-ஆ) 289, எஸ்பிளனேட் மதராஸ்.



பம்பாய் தென்னிந்திய சங்கீத சபை அங்கத்தினர்கள் "கோவலன்" என்ற நாடகத்தைச் சமீபத்தில் நடித்தனர்.

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# பசுவின் சிறப்பு

## கோலோகத்தின் உயர்வு

"பிரம்மதேவர், தேவர்கள், அஸுரர்கள், பிராணிகள் எல்லாவற்றிற்கும் ஈஸ்வரர்; எல்லாவற்றையும் படைத்தவர். அப்படியிருக்கையில் அவருக்குமேல் கோலோகம் நிலை பெற்றிருப்பது எப்படி?" என்று யுதிஷ்டிரர் கேட்க, அதற்கு பீஷ்மர் பதில் சொன்னதாவது:—மகரிஷிகளிருக்கும் இடங்களிலும், எல்லா லோகங்களுக்கும், தேவர்களுக்கும், தேவ பூஜைக்காகவும் அமிருதத்துக்காகவும் யாகங்களுக்காகவும் ஸுரபி என்னும் பசு இருப்பதாகப் புராணங்களில் கேட்கிறோம். ஆதிகாலத்தில் பிரம்மதேவர் நினைத்த உருவமெடுக்கும் அந்த ஸுரபி என்னும் பசுவை உண்டுபண்ணினார். பிறகு அக்னிபோல் ஜ்வலிக்கின்ற தேகமுள்ள புருஷனையும் தம் சக்தியினாலும் தவத்தினாலும் படைத்தார். அந்தப் புருஷன் மார்த்தாண்டன் என்று பெயர் பெற்றான். பிறகு அவ்விருவரும் மணந்துகொண்டார்கள். பிரும்மதேவர் அப்பொழுது பின்வருமாறு சொன்னார்:—நீங்கள் இருவரும் மணம் செய்துகொண்டீர்கள். ஆதலால் ஸந்ததியுண்டாகும். உங்கள் ஸந்ததி புண்ணியமுள்ளதும் மிக்க பரிசுத்தமுள்ளதுமாயுமிருக்கும். உன் ஸந்ததியிடம் உண்டாகும் பால் சிறந்த ஹோமத் திரவியமாகும். உன் ஸந்ததிகளுக்குப் பணிவிடை செய்துகொண்டிருப்பவர்கள் அந்தப் புண்யத்தினாலேயே லோகம் போய்ச் சேர்வர். ரிஷபமென்னும் பெயருள்ள மிகப் பரிசுத்தமான மந்திரம். எல்லாத் தேவ கார்யங்களும் பித்ரு கார்யங்களும் உன் ஸந்ததியினாலேயே நடக்கும். இந்தப் புண்ணியத்தினால் உன்னுடைய ஸந்ததிகள் என்னுலகத்துக்கு மேலும் யாதொரு தீங்குமின்றியுமிருக்கும்.

இவ்வாறு பிரம்ம தேவர் சொன்ன வரங்களைப் பெற்று மிகுந்த சந்தோஷமடைந்து பிரம்மாவினால் விடை கொடுக்கப்பட்ட ஸுரபி உலகத்தைக் காப்பதற்காகத் தன் ஸந்ததிகளை மிகுதியாக உண்டுபண்ணித் தன் உலகத்தில் பிரவேசித்தது. இதனால்தான் கோலோகம் எல்லாவற்றிற்கும் மேல் இருக்கிறது.

பீஷ்மர் மேலும் சொன்னதாவது:—முற்காலத்தில் தேவர்களெல்லாரும் பிறந்தபோது தேவேந்திரன் அம்ருதத்துக்காக ஸுரபியிடம் சென்று கன்றாக ஸுரபியின் பாலை உண்டான். பிறகு இந்திரன் "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டபோது ஸுரபி, "தேவர்களைக் காப்பாற்று. நீ சுகத்தை விரும்பினால் கோக்களையும் பிராம்மணர்களையும் அவமதிக்கலாகாது. கோக்களும் பிராம்மணர்களும் விடும் பெருமூச்சு தேவர்களையும் வற்றச் செய்யும்" என்று சொல்லியது.

இந்திரன், "நான் தேவக் கூட்டங்களுடன் பசுக்கூட்டங்களிடத்தில் நித்யமாக வஸிக்க விரும்புகிறேன்" என்று விரும்ப ஸுரபியும், "கோக்களின் சரீரங்கள் இதோ பிரத்யக்ஷமாகவே காணப்படுகின்றன. எந்தத் தேவன் எந்தவிடத்தில் வஸிக்க விரும்புகிறானோ அவன் அந்தவிடத்தில் வஸிக்கலாம். பசுக்களின் தேகமெல்லாம் மிக்க பரிசுத்தமும் பூஜைக்குமுரியதுமானது" என்று சொல்லிற்று. உடனே தேவேந்திரன் எல்லாத்தேவக் கூட்டங்களோடும் ஸுரபியின் சந்ததிகளை அடைந்தான். அவற்றின் கொம்பிலும் முகத்திலும் நாவிலும் தேவேந்திரன் இருந்தான். எல்லா துவாரங்களிலும் வாயு இருந்தான். கால்களில் ஸப்தமருத்துக்கள் இருந்தனர். கொண்டையில் ருத்ரரும், வயிற்றில் அக்நியும், ஸ்தனங்களில் சரஸ்வதியும், கோமயத்தில் லக்ஷ்மியும், பாலில் மேதையும், வாயில் சந்திரனும், ஹ்ருதயத்தில் யமனும், வாலில் தர்ம தேவதையும், உடம்பு, மயிர்களில் யாக முதலிய கிரியைகளும், கண்களில் சூர்யனும், பூட்டுக்களில் ஸித்தர்களும், அசைவில் காரியஸித்தியும், தவமும் சக்தியும் இருந்தனர். இவ்வாறு தேவக் கூட்டத்தாரெல்லாரும் பசுக்களின் தேக பாகங்களில் நியமமாக விருந்தனர்.

யுதிஷ்டிரர், "பிராம்மணர்களுக்குப் பலவகைத் தானங்களைக் கொடுக்கின்றனரே, கொடுக்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்கும் இருக்க வேண்டிய குணங்கள் என்ன?" என்று கேட்க பீஷ்மர் சொன்னதாவது:—பிராம்மணன் யோக்கியனிடத்திலும் தானம் வாங்குகிறான், அயோக்கியனிடத்திலும் வாங்குகிறான். குணமுள்ளவனிடத்தில்வாங்கினால் சிறிது பாவமுண்டாகும். குணமில்லாதவனிடத்தில் வாங்குகிறவன் முழுகிப்போவான். இந்த விஷயத்தில் விருஷாதர்ப்பி யென்னும் அரசனுக்கும் ஸப்த ரிஷிகளுக்கும் நடந்த சம்பாஷணை யொன்றிருக்கிறது.

முன்பு கச்யபர், அத்ரி, வசிஷ்டர் பரத்வாஜர், கௌதமர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி இவ்வேழு ரிஷிகளும் அருந்ததியும் இருந்தனர். அவர்களுக்குக் கண்டையென்பவள் வேலைக்காரியாகவிருந்தாள். பசுஸகனென்னும் சூத்திரன் அவள் கணவன். அப்போது மழையில்லாதிருந்தது. அந்தக் காலத்தில் இவ்வுலகம் பசித்துப் பிழைப்பது அரிதாயிற்று. முன் காலத்தில் நடந்த ஒரு யாகத்தில் சிபியின் புத்திரனை விருஷாதர்ப்பி


**PASSED MATRIC**

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் 2. றிவர். விலை ரூபா 3-8-0. அ வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.W.)**
P O SALKIA HOWRAH



**எதிர்கால சோதிடம்**

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 2. ஆரூடம் கேள்வி 5-க்கு ரூ. 1. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட்பிரகாசர் சோதிடாலயம், புதுச்சேரி.



ஸ்ரீ மகரத்வஜம்
ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை)

## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர் புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்ன தங்கமும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2 அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோடஸர், N. சுப்பிரமணியம்

நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)

வாலாஜாபாத், S. I. சென்னை



## நரை மயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி (மெடிகல் டிபார்ட்மெண்டு S) 15 பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—

ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—

தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்... ...மா மஸ்ஜித் ...ரேக் ...



## வெண குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக:

KAMALA WORKS (S M.)

Panchpota—Bengal, India.



G. கன்னையா கம்பெனி

இரும்புப்பெட்டி வியாபாரம்.



கவர்ன்மெண்டு, ரயில்வே, பாங்கு கோவாபரேடிவ்சொஸைடி, வியாபாரிகளுக்கும், சப்ளையர்கள்.

137. பிராட்வே மதராஸ்


யென்னும் அரசனால் தனக்கு யாகம் செய்வித்த ரித்விக்குகளுக்குத் தன் புத்திரனை அனிலனென்பவன் தக்ஷிணைக்குப் பிரதியாகக் கொடுக்கப்பட்டான். அந்தப்பஞ்சகாலத்தில் அந்த ராஜகுமாரன் மரணமடைந்தான். பசியினால் வருந்திய அந்த ரிஷிகள் தாங்கள் யாகம் செய்வித்த அரசனுடைய அந்தக்குமாரன் உயிரிழந்ததைக்கண்டு அவனைச்சுற்றிக்கொண்டு நின்றனர். பசியினால் வருத்தப்பட்ட அவர்கள் தங்கள் தேகத்தைக் காப்பாற்றக்கருதி அந்த ராஜகுமாரனை ஒரு பாத்திரத்தில் சமைத்தனர்.

விருஷாதர்ப்பி இவர்களைக் கண்டு "ரிஷிகளே! என்னிடத்திலிருக்கும் தனத்தைக் கொள்ளுங்கள், கொடுக்கிறேன். பிராம்மணர்களுக்கு யாசித்து வாங்குவதே சிறந்த விருத்தியாக விதிக்கப்பட்டிருக்கிறது. புசிக்கத்தகாத இதைப் புசிக்காதீர்கள்" என்று சொன்னான்.

அதற்கு ரிஷிகள் சொன்னதாவது:—அரசனிடத்தில் வாங்குவது முதலில் தேன்போல் இனிப்பாக விருக்கும். முடிவில் அது விஷத்திற்கொப்பாகும். ஒரு செக்கான் பத்து கசாப்புக்காரர்களுக்குச் சமானமானவன். ஒரு வேசி பத்துக் கள்ளுக்கடைக்காரர்களுக்குச் சமானம். ஓர் அரசன் பத்து வேசிகளுக்குச் சமானம். பதினாயிரம் கசாப்புக்கடைகளை நடத்தும் கசாப்புக்காரனும் அரசனும் சரி. அரசனிடத்தில் வாங்குவது கொடியது. இவ்வாறு சொல்லிவிட்டு அவர்கள் காட்டுக்குச் சென்றுவிட்டனர். அந்த மாமிசமும் சமையாமலேயே இருந்தது. பிறகு அரசனால் கட்டளையிடப்பட்டு மந்திரிகள் காட்டுக்குச் சென்று அத்திப் பழங்களைப் பறித்துக் கொடுக்க... ...கொண்டனர். அப்போது மந்திரிகளின் வேலைக்காரர்கள் உள்ளே பொன்வைத்த சில அத்திப் பழங்களைக் கொடுத்தனர். அத்ரியானவர் அவை பளுவாயிருப்பதை அறிந்து "அவை வாங்கத்தகாதவை" என்றார். எல்லா ரிஷிகளும் அருந்ததியும் வேலைக்காரியும் அவளது கணவனும் பொன்னிருந்த அத்திப்பழங்களை வாங்கமறுத்துவிட்டனர்.

இதைக்கேட்ட விருஷாதர்ப்பி மிகுந்த கோபங்கொண்டான். உடனே ஒரு கொடிய யாகத்தைச் செய்தான். அதிலிருந்து ஒரு பேய் உண்டாயிற்று. அதற்கு ரிஷிகள், அருந்ததி, வேலைக்காரி, அவளது கணவன் முதலியவர்களைக்கொன்று விடும்படி விருஷாதர்ப்பி உத்தரவிட்டான். பேயும் அதன்படியே சென்றது. ரிஷிகளும் காட்டில் சுற்றிக்கொண்டு வருகையில் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கக்கூடியதும், ஒரு அழகிய தாமரைக் குளம் உள்ளதுமான ஒரு தபோவனத்தைக் கண்டனர். ஆனால், அந்தக் குளம் யாதுதானி என்பவரால் காக்கப்பட்டுவந்தது. பிறகு ரிஷிகள் யாதுதானியின் வேண்டுதல்படி தங்கள் பெயரைச் சொல்லிவிட்டுக் குளத்தில் இறங்கினர். வேலைக்காரியின் கணவன்மட்டும் குளத்தில் இறங்குமுன் யாதுதானியைக் கொன்றான். ரிஷிகள் குளத்திலிருந்து தாமரைக்கிழங்குகளை எடுத்துக் கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்து வந்து பார்க்கையில் கிழங்குகளைக் காணோம். பிறகு ஒவ்வொருவரும் தாமரைக் கிழங்கை எடுக்கவில்லையென்று சபதம் செய்தனர்.

முடிவில் வேலைக்காரியின் கணவன் தாமரைக் கிழங்குகளைக் கொடுத்துப் பேய் விஷயத்தையும் அது கொல்லப்பட்டதையும், தான் இந்திரன் என்றும், விருஷாதர்ப்பியிடமிருந்து காப்பாற்றவே அங்கு வந்ததாயும் சொல்லி அவர்களைத் தன்னுடன் ஸ்வர்க்கத்திற்கு அழைத்துச் சென்றான்.

இவ்வாறு இம் மகாத்மாக்கள் மிக்கப் பசியுள்ளவராயிருந்தும், ... வழிகளால் விரும்பினவற்றையெல்லாம் அளிக்கப்பட்டும் அதில் ஆசை வைக்கவில்லை. அதனால் ஸ்வர்க்கத்தையடைந்தனர். ஆதலால் மனிதன் எந்த நிலைமைகளிலும் ஆசையை விடவேண்டும்.


பத்மராஜு

விலை ரூபா 1—8—0

சுதேசமித்திரன் புத்தகசாலை. சென்னை.






குழந்தைகளின் நோயெனும் இருளை நீக்க வந்துள்ள

பாஸ்கரனின் வரப்ரசாதம்

நோயினால் வருத்தமுறும் குழந்தைகளை நோயினின்றும் மீட்டு ஆரோக்யத்தைப் பெருகச் செய்வது "பால பாஸ்கர"

குழந்தைகளைப் பீடித்து வருத்தமுறச் செய்யும் வியாதிகளில் ஈரல் குலைக்கட்டி என்னும் வியாதிகளை தக்க சிகிச்சையின்மையால் மிகுந்த சேதம் விளைவிக்கின்றன. இவ்வியாதிகளை எந்நிலைமையிலும் நல்ல குணத்தைக் கொடுக்க வல்லதென நிரூபிக்கப்பட்டுள்ள ஔஷதம் "பால பாஸ்கர" இந்த ஔஷதமானால பயனற்றுப் போன இடங்களில் ஆச்சரியத்துடன் பலனைக் தருவதெனப் போற்றப்படுவது

## பால பாஸ்கர

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு

அற்புத நிவாரணி.

அயர்வேதாஸ்ரமம்,

151 கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, தபால் பெட்டி 287, மதராஸ்.

ஏஜண்டு:

மெஸர்ஸ்: அமாசந்த், சோபா சந்த். கெமிஸ்ட்ஸ், மதராஸ்.



ஆராய்ச்சி பூர்வமான

## நவீன மருந்துகள்

மேத்தாஸ் கோனோ பில்ஸ்—எல்லா வகையான மூத்திரக் கோளாறுகளுக்கும் உத்தரவாதமான நிவாரணி. விலை புட்டி 1-க்கு ரூ. 2.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,

பிரபல மருந்து வியாபாரிகள்,

234, சைனா பஜார், மதராஸ்.



பிளிட் பவுடர் தூவுங்கள்.

ஊரும் : எல்லா பூச்சிகளையும் கொல்வது.




புகழ் பெற்ற பிளிட் காரரின் தயாரிப்பு.

# புத்துயிரும் கம்பீரமுமளிக்கும் இந்திய தேயிலை

நாம் நாட்பூராவும் சரீரத்தின் உருப்புகளைக் கொண்டோ மூளை சக்தியை பிரயோகித்தோ வேலை செய்வதினால் களைப்படைகிறோம். பக்குவமாய் செய்த இந்திய தேயிலைப் பானம் களைப்பைப் போக்கி புத்துயிரளித்து சரீரதிடத்தைக் கொடுக்கிறது. உண்மையாகவே இது ஒரு அலாதி பலத்தைக் கொடுக்கக் கூடியதே.

அதிகாலையில் இரண்டுகப் டீயை தவறாமல் சாப்பிடத் தீர்மானியுங்கள். இது உங்கள் சோர்வை நீக்கி சோம்பலைப் போக்கி நாள் முழுவதும் வேலை செய்வதற் கவசியமான தென்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். அதேமாதிரி மாலையிலும் இரண்டு கோப்பை அருந்தி பகல் உழைப்பால் ஏற்பட்ட சிரமம் நீங்கி மனோல்லாசமாக விருங்கள்.

## தேத்தண்ணீர் தயாரிக்கும் முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்கவை. உலர்ந்த பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக்கொள்ளவும்.



## ஜீவ சக்தியும் கம்பீரமுமளிக்கும் இந்திய தேயிலை

IK 18

...d. No. 2514



# குழந்தைகள் ஆரோக்கியம்

★

# பெற்றோர்களின் ஐச்வர்யம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

இந்த முதுமொழி முற்றிலும் உண்மையானது; நம் குழந்தைகள் எவ்வித சிக்குமில்லாமல், ஆரோக்கியமாக வளர்ந்து, ஆனந்தமாக ஓடி ஆடிக்கொண்டிருப்பதைப்பார்க்கையில் நம் மனதில் மட்டற்ற இன்பம் பொங்குகிறது. இந்த இன்ப நிறைவே மதிப்பிட முடியாத ஐச்வர்யமாகும்.

மேற்சொன்ன இன்பத்தின் ஆதாரம் குழந்தைகளின் பரிபூரண ஆரோக்கியமே; தேகபுஷ்டியே ஆரோக்கியத்தின் அஸ்திவாரம். நம் குழந்தைகளுக்கு நாம் என்னதான் சிறந்த ஆகாரங்களைக் கொடுத்தாலும் அவற்றிலுள்ள சத்துக்கள் குழந்தைகளின் திடமான வளர்ச்சிக்குப் போதுமானவையல்ல. எனவே, நாம் வழக்கமான ஆகாராதிகளுடன் நின்று விடுவதற்கில்லை; விட்டமின்கள் அதாவது ஜீவசத்துக்கள் நிறைந்த பலவிருத்தி டானிக்குகளை நாட வேண்டியிருக்கிறது.

விட்டமின்கள் பூரணமாகவிருப்பதால் மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட் லிவர் ஆயில் (Moller's Super Strength Cod-Liver Oil) மற்ற மட்டமான சரக்குகளைவிடச் செலவுகுறைந்தது; எப்படியெனில், இதில் கொஞ்சம் கொடுத்தாலும் போதுமானது; 15 நாட்களுக்கொருதரம் சரக்கு வந்து கொண்டிருப்பதால் ஆயில் சுத்தமாகவே இருக்கிறது.

குழந்தைகளுக்கு ஏற்ற வகையிலும், அளவிலும் சத்துக்களைக்கொண்டிருப்பது காட்லிவர் ஆயில்; காட்லிவர் ஆயில்களில் முதல்தரமானதாகத் தெரிந்தெடுத்து, டாக்டர்கள் சிபார்சு செய்வது மாலர்ஸ் ஸூபர்ஸ்ட்ரெங்த் காட்லிவர் ஆயில்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

**இன்றே ஒரு புட்டி வாங்கிக் கொள்ளுங்கள்**

பச்சை நிற புட்டியில் மேலே 'MOLLER' (மாலர்) என்று ஆங்கிலத்தில் இருப்பதைக் கவனித்து வாங்கவும்.




# மாலர்ஸ்

## ஸூபர்-ஸ்ட்ரேங்க்த்

# காட் லிவர் ஆயில்

மொத்த ஏஜண்டுகள்:

**சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி,**

12, மன்னாரு தெரு : : பார்க் டவுன் : : மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press Mount Road, Madras-*Editor* C. R. Sriniva